விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 12 சனிக்கிழமை (28.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

கொழும்பில் பிரபல விமானப் பயணப் பற்றுச்சீட்டு வழங்குனர்களான SB Travels and Tours Pvt Ltd இன் யாழ் நகரில் புதியதொரு உதயம்
SB
ஐயப்பன் பக்தர்களிற்கான விசேட சலுகைகளுடனான விமானப் பயணப் பற்றுச்சீட்டுகளையும் விசாக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
Tel - 021 222 9555, 222 8555
Fax - 021 222 7111
mobile - 076 6911080, 81,82,83
No. 216, Kasthuriyar Road, Jaffna.
(2595)

# தமிழர் தாயகமெங்கும்

# மாவீரர் தின எழுச்சி!




## "ஈகைச் சுடர்கள் ஏற்றி மக்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலி"

(யாழ்ப்பாணம்)

தமிழின விடுதலைக்காக தமது உயிர்களை ஆகுதியாக்கிய வீர மறவர்களை நினைவுகூரும் மாவீரர் தினம் நேற்று தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தில் என்றும் இல்லாதவாறு இம்முறை மிகவும் எழுச்சியான முறையில் மாணவர்கள் ஒன்று திரண்டு ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## செந்தூரனின் உடல் நேற்று தீயுடன் சங்கமமானது

இறுதி நிகழ்வில் பெருந்திரளானோர் பங்கேற்பு



## மாவீரர் தின அறிக்கை வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

## யாழ்.பல்கலைக் கழகத்தில் ஈகைச் சுடரேற்றி அஞ்சலி



23 ஆம் பக்கம் பார்க்க...

# மட்டக்களப்பில் எழுச்சியுடன் நேற்று மாவீரர் தின நிகழ்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தமிழ் தேசிய மன்றத்தினால் மாவீரர் நினைவு தினம் மட்டக்களப்பில் நேற்று உணர்வுபூர்வமாக சுடர் ஏற்றி நினைவு கூரப்பட்டது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனின் மட்டக்களப்பு அலுவலகத்தில் அவரது தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரிய

23 ஆம் பக்கம் பார்க்க....

# வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினம் 2015 ஆம் ஆண்டுக்கான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் என குறிப்பிடப்பட்டு அவ் அறிக்கை வெளியிட

24 ஆம் பக்கம் பார்க்க....

# டிசம்பர் 5-ம் திகதி பதில் பாடசாலை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் நேற்று பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட விடுமுறைக்கு மாற்றாக எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி பாட விதானங்கள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை வட மாகாண

24 ஆம் பக்கம் பார்க்க....

# ஈகைச் சுடரேற்றி அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் பலத்த பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நேற்று மாலை 6.05 மணியளவில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவு தூபிக்கு முன்பாகவே சுடர ஏற்றப்பட்டுள்ளது.

24 ஆம் பக்கம் பார்க்க....

# வாஸ் கொலை செய்யவில்லை வர்த்தகரின் தந்தை தகவல்

(கொழும்பு)

பிரபல வர்த்தகர் முகமட் சியாமை முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன படுகொலை செய்யவில்லை என வர்த்தகரின் தந்தை அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

முஹமட் ஷியாம் கொலை செயப்பட்ட சம்பவத்தில் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக இணங்காணப்பட்ட முன்னாள் பிரதி பொலிஸ்

24 ஆம் பக்கம் பார்க்க....

# வாஸ் குணவர்த்தன உட்பட 6 பேருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டியை சேர்ந்த வர்த்தகர் மொஹமட் ஷியாமை கடத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ள முன்னாள் பிரதிக் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன. அவரது புதல்வர் ரவிந்து குணவர்தன உட்பட ஆறு பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

மேல் நீதிமன்றத்தின் மூன்று பேர் கொண்ட விசேட நீதிபதிகள் இந்த தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

இலங்கையின் பொலிஸ் வரலாற்றில் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டமை இதுவே முதல் முறை ஆகும்.

குசல சரோஜினி வீரவர்தன, அமேந்திர செனவிரத்ன ஆகிய மேல்

24 ஆம் பக்கம் பார்க்க....

# யாழ்.மறை மாவட்ட ஆயரின் திருநிலைப்படுத்தல் சடங்கு

(யாழ்ப்பாணம்)



யாழ் மறை மாவட்ட புதிய ஆயராக ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு இன்று 28 ஆம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவர் யாழ் மறை மாவட்டத்தின் 11 ஆவது ஆயர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## திறந்த பல்கலைக்கழக சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் துறை பீடாதிபதி கலாநிதி கே.ஏ.சி.உதயகுமார தலைமை தாங்கவுள்ளார்.

பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞான குமாரன், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம் முறை இந் நிகழ்வில் 300க்கு மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு துறைகளில் சான்றிதழ்களைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## கடலுக்குச் செல்லாது மீனவர்கள் அஞ்சலி

(கரணவாய்)

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி உயிர்த் தியாகம் செய்த மாணவனுக்கு கடற்றொழிலாளர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

மாணவனின் உயிர்த் தியாகத்திற்கு அனுதாபம் தெரிவிற்கும் வகையில் நேற்று பிற்பகல் 3 மணி முதல் இன்று சனிக்கிழமை மதியம் 12 மணிவரை கடற்தொழிலாளர்கள் கடலுக்கு செல்ல மாட்டார்கள என மயலிட்டி கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் எல்.யோகராசா தெரிவித்துள்ளார். (எ-12,60)

# புதையல் தோண்டிய இடத்தில் தங்க நகைகள் எவையும் இல்லை

## 6 மணிநேர முயற்சியின் பின் ஏமாற்றம்



(கரணவாய்)

மணற்காட்டில்தங்க நகைப் புதையல் இருப்பதாக கூறப்பட்ட இடத்தில் கொங்கிரீட் கற்களே கிடைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் விடுதலைப் புலிகள் காலத்தில் விடுதலைப் புலிகளால் புதைத்துவைக்கப்பட்டதாக கூறப்பட்ட 600 கிலோக்கிராம் தங்கம் தோணடும் முயற்சி கைவிடப்பட்டுள்ளதுடன் அவ் இடம் மீண்டும் மண்ணால் நிரப்பப்பட்டுள்ளது.

சுமார் 6 மணி நேரமாக பைக்கோ இயந்திரம் மூலமாக குழிதோண்டப்பட்டும் புதையல் இருப்பதற்கான எவ்வித தடயமும் கிடைக்கப் பெறவில்லை.

கடந்த 20ஆம் திகதி அன்று 2 அதி சொகுசுக் கார்களில் வந்த இரு குழுவினரால் குறித்த இடத்தில் புதையல் தோண்டும் ஆரம்ப முயற்சி இடம்பெற்றது.

இது தொடர்பாக அப் பிரதேச பொதுமக்களால் கிராம சேவையாளருக்கும் நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கும் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து காரில் பயணித்த 3 சிங்களவர் உட்பட்ட நால்வர் கைது செய்யப் பட்டுள்ளதுடன் மற்றைய கார் தப்பிச் சென்றது.

கைது செய்யப்பட்ட நால்வரிடம் பொலிஸ் விசாரணை தீவிரமாக இடம் பெற்றபோது விடுதலைப் புலிகளால் தங்க நகைகள் புதைத்து வைக்கப்பட்டதாகவும் இதனை வெளிநாட்டில் வசித்து வருகின்ற நபர் ஒருவரே தகவல் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பின்னர் இச்சம்பவத்தில் கொழும்பில் பொலிஸ் உயர் அதிகாரிகள. புதுக் கடை நீதிவான் நீதி மன்ற சட்டத்தரணி மற்றும் நடிகை என்போருக்கும் தொடர்புள்ளது என்ற செய்திகள் அடுத்தடுத்து வெளிவந்தன.

இதனையடுத்து இது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னரே நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவ் விடத்தில் குழி தோண்டும் அனுமதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான்மா.கணேசராஜாவினால் வழங்கப்பட்டது.

இக் குழி தோண்டும் முயற்சியானது எதிர்வரும் 2ஆம் திகதிவரை இடம்பெறும என தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமையவே நேற்று முன்தினம் பைக்கோ இயந்திரம் மூலமாக குழிதோண்டும் முயற்சி இடம் பெற்றது.

இதன்போது பொலிஸார், சுற்றுச்சூழல் அதிகாரசபை அதிகாரிகள், அப்பகுதி பிரதேச செயலர், கிராமசேவையாளர், தொல்லியர் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் தடயவியல் அதிகாரிகள் எனப் பலர் அங்கு கூடியிருந்தனர்.

பொலிஸ் தரப்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜீ.கே. பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாரசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜாபர் உள்ளிட்டோரும் நின்றிருந்தனர்.

இரண்டு பனை மரங்கள் புரட்டப்பட்டு புதையல் தோண்டும் பணி இடம் பெற்ற போதும் எவையும் அங்கு அகப்படவில்லை.

கொங்கறீற் கற்கள், பிளாஸரிக் குழாய், தகரத் துண்டுகள, ஈய்ந்துபோன துவாய் என்பனவே அகப்பட்டதுடன் தோண்டப்பட குழியானது குளம் போல காட்சியளித்தது.

மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு தண்ணீர் இறைப்பதும் பின்னர் மீண்டும் குழி தோண்டுவதுமாகவே இப்பணி இடம் பெற்றது.

இதன்போது வல்வெட்டித்துறைப் பொலிஸார், நெல்லியடிப் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், புலனாய்வுத் துறையினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

நகைப்புதையலுக்காக தோண்டப்பட்ட குழியானது பொதுமக்களின் பாதுகாப்பினையடுத்து அன்றைய தினம்மாலை 5.00 மணிக்கு மூடப்பட்டது எனவும் தெரிய வந்தது. (எ-5,60)

## ஆடு திருடிய நால்வர் கைது

(மல்லாவி)

வெள்ளை வானில் ஆடு திருடிய சந்தேக நபர்கள் நானத பேர் மாங்குளம் பொலிஸாரால கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட மாங்குளம் பொலிஸ் பிரிவில் வைத்தே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆடுகள் களவாடப்பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் வெள்ளைவான் ஒன்றினையும், இரு ஆடுகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நானகு சந்தேக நபர்களும் நேற்றைய தினமே முல்லைத்தீவு மாவடட நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

சந்தேக நபர்களினை எதிர்வரும் 3-ம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தவிட்டுள்ளார். (எ-12,15)

## கடலில் குளித்த இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு அக்கரை கடற்பரப்பில் நண்பர்களுடன் குளிக்க சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் தொண்டைமானாற்றில் இடம் பெற்றுள்ளது.

இதில் உடுப்பிட்டி இமையாணன்பகுதியை சேர்ந்த பதினெட்டு வயதுடைய சுதாகரன் சங்கீத்தன் என்ற இளைஞனே உயி ரிழந்தவர் ஆவார்.

நேற்றைய தினம் நண்பர்களுடன்குறித்த இடத்திற்கு குளக்க சென்ற சங்கீத்தன், நீ ரின் நடுப்பகுதிக்கு நீந்தி சென்ற போது சகதியில் மாட்டி மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்து இருககலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சடலம் தொண்டைமானாறு பொலிசாரின் உதவியுடன் மீட்கப்பட்டு, ஊறணி வைத்திய சாலையில்வைக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் தொண்டைமானாறு பொலிசார், மாணவனின் இறப்பு நீரில் மூழ்கியதாலேயே ஏற்பட்டுள்ளது என சந்தேகம் தெரிவித்துள்ளனர். (எ-4,60)


**கடை விற்பனைக்கு**

யாழ் நகரில் ஸ்ரான்லி றோட்டில் வியாபார முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் கடை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 0779107242

(C-2808)

**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



பிறப்பு 11 - 05 - 1942

இறப்பு 09 - 12 - 2014

அமரர் மு.வ. சுப்பிரமணியம் இரத்தினசபாபதி

விதையாய் இருந்த எம்மை
விருட்சமாய் மாற்றி
வேராய் எமக்கு அருள் தந்து
எம் வாழ்வுக்கு வழிகாட்டி
எமக்காகவே வாழ்ந்த எம்
அன்புத் தெய்வமே
என்றும் உங்கள் நினைவுடன்
வாழ்கின்றோம்.

மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(C-2804)

தகவல் : குடும்பத்தினர்

**ஆயரை மனமார வாழ்த்துகின்றோம்**



'ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது' லூக்கா -1:47

புதிய ஆயரே!
வாழ்க நீர்!
வளர்க உம்நலம்!
தொடர்க உம்பணி!

எமது கழகத்துக்கு காப்பாளராக இருந்து கால் நூற்றாண்டுகளாக எம்மை வழிநடத்தி இன்றைய தினம் யாழ் மறைமாவட்ட ஆயராக திருநிலைப்படுத்தப்படுகின்ற

அருட்கலாநிதி ஜஸ்ரின் பேனார்ட் ஞானப்பிரகாசம்

அடிகளாரை யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் சார்பில் வாழ்த்தி நிற்பதோடு, அவரை இறைவன் தாமே காத்து வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று இறைவனை இரந்து மன்றாடுகின்றோம்.

(C-2805)

யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம்
இளவாலை.

# மாவீரர் நாள் நிகழ்வுகளின் பதிவுகள்...
















தமிழீழ விடுதலைக்காக தம்மை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நேற்றைதினம் தமிழர் தாயகத்தில் பரவலாக நடைபெற்றன. யாழ்.பல்கலையில் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆலய வழிபாடும் வீரவணக்க நிகழ்வும், நல்லூரில் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் ஈகைச்சுடரேற்றலும், கிறிஸ்தவ தேவாலயத்தில் வழிபாடும், பளை இத்தாவில் கிராமத்தில் அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வும் நடைபெற்றன.

படங்கள்:-(உ.சாளின், பொ.சோபிகா)

# மாவீரர்களின் தியாகங்கள் தமிழீழத்தை அமைக்கும்!



## செந்தமிழன் சீமான் அறிக்கை

மாவீரர் தினத்தையொட்டி நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் வெளிட்டுள்ள அறிக்கையில் மாவீரர்களின் தியாகங்கள் தமிழீழத்தை அமைக்கும் என தெரிவித்துள்ளார்.

ஆதிக்க சக்தியின் அடக்குமுறையில் இருந்து ஓர் உயிரி விடுபட்டுத் தன்னைச் சுதந்திரவாதியாக அறிவித்துக்கொண்டு வாழும் போது மட்டுமே அந்த உயிரி மனிதனாகிறது" என்கிறது அல்ஜீரிய விடுதலை வீரன் பிரான்ஸ் பனானின் விடுதலையுணர்வு வித்திடும் தத்துவம்.


ஒரு தேசிய இனத்தின் ஆன்மா அதன் விடுதலை உணர்வில் அடங்கி இருக்கிறது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடியாம் தமிழ்க் குடிக்கு இப்பூமிப்பந்தில் உள்ளங்கை அளவிற்குச் சொந்த நாடில்லை. தமிழ்த்தேசிய இனத்திற்கென ஒரு நாடு தேவை என்பதைச் சிங்களப் பேரினவாதமும், உலக வல்லாதிக்கங்களும் தமிழினத்தின் மேல் செலுத்திய அழுத்தங்கள் மூலமும், இவ்வினம் அடைந்த அழிவுகளின் மூலமும், இத்தேசிய இனம் சந்தித்த இழிவுகள் மூலமாகவும் நிருபனமானது. மனிதனின் அடிப்படைத் தேவைகளின் முதன்மையான தேவை சுதந்திரம் என்பதை உணர்ந்த நமது ஈழ உறவுகள் சிங்கள ஆதிக்கத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள எத்தனித்தது. அதனால்தான் உயிரையே விலையாக அளித்து, அந்த உயிரை விட உன்னதமான விடுதலையைக் கோரிக்களத்தில் நின்றார்கள்.


1948 ஆம் ஆண்டுப் பெப்ரவரி 4 அன்று இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்ற இலங்கையில், அந்தக் காலந்தொட்டே அந்த மண்ணில் வாழ்ந்த எமது தமிழ் மக்களின் உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு காலப்போக்கில் அனைத்துத் துறைகளிலும் எம் மக்கள் சிங்களப் பேரினவாதத்தால் வஞ்சிக்கப்பட்டு பெருந்துயர் அடைந்தனர். தமிழர்களின் துயரம் தோய்ந்த உரிமை மறுக்கப்பட்ட வாழ்வியலை மாற்ற தந்தை செல்வா 30 வருடங்களுக்கும்மேலாகப்அகிம்சை வழி நின்று போராடினார்.

சனநாயக வழிக்குட்பட்ட அனைத்துப் போராட்ட வழிகளையும் பயன்படுத்திச் சிங்களப் பேரினவாதத்தின் கோர முகம் மாறாதா? என மனமுருகி தமிழர் கூட்டம் நின்றது. ஆனால் சிங்களப் பேரினவாத அரசு அறம்பாடி துயர் நீங்க நின்ற தமிழின மக்களை ஆயுத வழி அடக்குமுறையின் கீழ் உட்படுத்தி உயிர்-உடைமை, பறித்து மூன்றாம் தர குடிமக்களாகத் தமிழர்களை மாற்றியது.

கண் துஞ்சாது, வெயில், மழை பாராது தாய் மண் காக்க களத்தில் நின்ற மாவீரர்களின் பெருமூச்சு ஒவ்வொரு தமிழனையும் உசுப்பட்டும். உயிரற்ற உடலங்களாய் தன்னிலை மறந்து கிடக்கும் ஒரு தலைமுறையின் ஆழ்மனதிற்குள் தன்னை இழந்து மண்ணை மீட்கத் துடித்த மானமறவர்களின் மூச்சுக்காற்று சென்று முட்டட்டும்... (இ-7-10)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா





தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் இந்தியா 124 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இதன் மூலம் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் இந்தியா டெஸ்ட் தொடரை கைப்பற்றி உள்ளது. 11 ஆண்டுகளுக்கு பிறகு சொந்த மண்ணில் இந்தியா தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியுள்ளது.

அதே சமயம் 9 ஆண்டுகளுக்கு பிறகு வெளிநாட்டில் டெஸ்ட் தொடரை இழந்துள்ளது தென்னாபிரிக்க அணி.

இலங்கையில் அந்நாட்டுக்கு அணக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றிய ஹோலி தலைமையிலான இந்திய அணி, சொந்த மண்ணில் முதன்முறையாக தென்னாபிரிக்காவை வீழ்த்தி டெஸ்ட் தொடரை கைப்பற்றி உள்ளது.

முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை எடுத்த இந்திய சுழற்பந்து வீச்சாளரான தமிழகத்தை சேர்ந்த அஸ்வின், இந்த ஆண்டில் ஒரு இன்னிங்சில் 5 அல்லது அதற்கு மேல் விக்கெட்டுகளை வீழ்த்துவது இது 5-வது முறையாகும்.

இந்த டெஸ்ட் போட்டியில் அஸ்வின் மொத்தம் 12 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். இதன் மூலம் இந்த ஆண்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ள அஸ்வின் 55 விக்கெட்டுகளை எடுததுள்ளார். பிரோட் (51), யாசிர் ஷா (49), அண்டர்சன் (46), ஸ்டார்க் (46) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

இந்த டெஸ்டில் முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா அணி 79 ஓட்டங்களில் சுருண்டது. இந்தியாவுக்கு எதிராக ஒரு அணியின் மோசமான ஓட்டங்கள் இது தான்.

இதற்கு முன்பு 1990-91-ம் ஆண்டு சண்டிகாரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் இலங்கை அணி 82 ஓட்டங்கள் எடுத்ததே இந்த வகையில் குறைந்த ஓட்டங்களாக இருந்தது. (க)

# கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக பகல் - இரவு டெஸ்ட் நேற்று ஆரம்பம்

## ஆஸியின் வேகத்தில் சுருண்டது நியூசிலாந்து



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3-வது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 202 ஓட்டங்களுக்கு சுருண்டது. கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக பகல் - இரவு டெஸ்ட் போட்டி நேற்று அடிலெய்டில் தொடங்கியது.

இளஞ்சிவப்பு நிறபந்து பயன்படுத்தப்பட்ட இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் மக்கலம துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். அதன்படி முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி திணற ஆரம்பித்தது.

இதனால் 202 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. தொடக்க வீரர் லாதம் (50) அரை சதம் எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அவுஸ்திரேலிய அணி சார்பில், ஸ்டார்க், ஹாசில்வூட் தலா 3, சிடில, நாதன் லயன் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர் (1), ஜோபர்ன்ஸ் (14) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

முதல் நாள் ஆட்டநேர முடிவில் அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஸ்மித் (24), வோக்ஸ் (9) களத்தில் உள்ளனர். போட்டியின் இரண்டாம் நான் ஆட்டம் இன்றாகும். (க)



# எனது கிரிக்கெட் வாழ்நாளிலேயே இதுபோன்ற ஆடுகளத்தை பார்த்ததில்லை

## அம்லா ஆவேசம்



இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நாக்பூர் டெஸ்டில் இந்தியா 124 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட தொடரை 2-0 எனக்கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

இந்த தொடரில் மூன்று ஆடுகளமும் முதல் நாளில் இருந்தே சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருந்தது. தென்னாபிரிக்காவின் தோல்விக்கு இதுதான் முக்கிய காரணமாக இருந்தது.

இந்த தொடரை இழந்தது குறித்து தென்னாபிரிக்கா அணியின் அணித்தலைவர் அம்லா கூறுகையில், இந்த சூழ்நிலையில் நாங்கள் விளையாடியதற்காக நாங்கள் கொஞ்சம் நிம்மதி அடையலாம்.

இதுபோன்ற ஆடுகளத்தில் நாங்கள் இதற்கு முன் விளையாடிய அனுபவம் எங்களுக்கு இல்லை.

என்னுடைய வாழ்க்கையில் இதுபோன்ற ஆடுகளத்தில் வெளிநாட்டு மண்ணில் விளையாடியதில்லை. இதனால் கொஞ்சம் நிம்மதி. ஏனென்றால் இது மிகவும் சவாலான போட்டி.

நாங்கள் இதற்கு முன் இதுபோன்ற சவாலை சந்தித்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது என்றார். (க)

# எரிபொருட்களின் விலைக்கு விரைவில் விலைச் சூத்திரம்

மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் குறைவடைந்து வருகின்றது. அதன் நன்மைகளை இலங்கை மக்களும் அனுப விக்கும் நோக்கில் புதிய விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாக பெற்றோலிய அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பெற்றோலிய வளத்துறை அமைச்சும் நிதி அமைச்சும் இணைந்து இப் புதிய விலைச் சூத்திரத்தை அடுத்த வாரமளவில் அறிமுகம் செய்யப்படும் எனவும் அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்குமென்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மசகு எண்ணெயின் விலை குறைவடைந்த நிலையில் நேரடியாக இறக்குமதி செய்யும் இலங்கை போன்ற நாடுகளுக்கும் மக்களுக்கும் அதிக இலாபமும் நன்மையும் கிட்டவுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## தேவை

யாழ். மாநகர சபை எல்லைக்குள் தனியார் வகுப்பு நடத்துவதற்கு வீடு அல்லது காணி வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:- 077 055 6375, 077 660 4418

(சி-2807)

## அனுமதி

தரம் 3,4,5,6 மாணவர்களுக்கான புதிய ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் அனுமதிக்கு அழையுங்கள்.

Writing, Grammer, Spoken

தொடர்புகளுக்கு:- 077 055 6375

## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com


## வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

### வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வட பிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 05.12.2015 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு :- நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்.

பிரதம ஆசிரியர் , வலம்புரி.

## அம்பாந்தோட்டை குடிநீருடன் அமைச்சர் சஜித் பாராளுமன்றில்

(கொழும்பு)

அம்பாந்தோட்டைப் பிரதேசதிலிருந்து ஒரு போத்தல் குடிநீரை அமைச்சர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்துக்கு நேற்று முன்தினம் எடுத்து வந்துள்ளார்.

இந்த குடிநீர் போத்தலைக் காட்டி அவர் தனது உரையை நிகழ்த்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை, திஸ்ஸ மகாராம பிரதேச குடிநீர் அசுத்தமடைந்துள்ளதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த அரசாங்க காலத்தில் அம்பாந்தோட்டைத்தை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றிய அரசியல்வாதிகள் முடியுமானால் இந்த நீரைக் குடித்துக் காட்டட்டும் என சவால்விட்டுள்ளார். அரசியல் வாதிகள் சுத்தமான நீரைக் குடித்துக் கொண்டு மக்களுக்கு சேற்று நீரைக் கொடுத்துள்ளனர்.

இந்த மாறுபட்ட கொள்கைக்கு தற்பொழுது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7-10)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா:47 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:DIPLOMA/ இத்தாலி PR<br>தொ.இ: B/5257 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:DIPLOMA<br>தொ.இ: G/5279 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 44 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5258 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 58<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/5281 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 90 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: ஆண் விவாகரத்தானவர்<br>தொ.இ: B/5259 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 19சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5283 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 31 உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5262 | பிறப்பு: 1989RC<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5285 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


## ராசி பலன்

28.11.2015
(கார்த்திகை 12, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
திருதியை பின்னிரவு 1.17 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 5.02 மணிவரை
இராகுகாலம் 9.13-10.43 மணிவரை
சுபநேரம் 3.13-4.43 மணிவரை

வளவன்

| | | | |
| --- | --- | --- | --- |
| கேது | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அனுசம் | | |
| | | | குரு |
| | சூரி,சனி<br>புத | | ராகு<br>செவ்<br>சுக் |

**மீனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சுப செலவுகள் ஏற்படலாம்.

**மேடம்:** சவால்களைச் சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், பகையொன்று நட்பாகலாம், தொழில் நன்மையுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தேகநலனில் கவனம் தேவை.

**கும்பம்:** புதிய பொருட்களின் வரவு கூடும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மகரம்:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியம் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, குடும்ப தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், கெளரவமான நாள்.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனின் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் ஆதாயம் உண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண நினைப்பீர்கள், விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, ஆரோக்கியமான நாள்.

# யாழில் 11 ஆயிரத்து 319 குடும்பங்கள் மீள்குடியேற்றத்துக்காக காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)


**யாழ்.மாவட்டத்தில் 11 ஆயிரத்து 319 குடும்பங்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளதாக யாழ்.மாவட்ட புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச பிரதேச செயலகங்களின் தரவின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 31 ஆயிரத்து 745 குடும்பங்களை சேர்ந்த 98 ஆயிரத்து 863 பேர் இது வரை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள உள்ளூரில்இருந்து இடம் பெயர்ந்து மீள் குடியேறியவர்களும், இந்தியாவில் இருந்து வந்து மீள்குடியேறியவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களில் 31 ஆயிரத்து 37 தமிழ் குடும்பங்களும் 610 முஸ்லிம் குடும்பங்களும 98 சிங்கள குடும்பங்களும் உள்ளடங்குகின்றனர். (இ-9)




## வடக்கு விவசாய அமைச்சருடன் புதிய நோர்வே தூதுவர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நோர்வேக்கான தூதுவர் தோர்ப்ஜோர்ன் கோஸ்ரட்சீதர் வடக்கு விவசாய அமைச்ர் பொ.ஐங்கரநேசனை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம இலங்கைக்கான தூதுவராகப் பதவியேற்றுக்கொண்ட தோர்ப்ஜோர்ன் •வடக்கில் நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள்தொடர்பாக அறிந்துகொள்ளும் நோககுடன முதற்தடவையாக வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். அதன் ஒரு கட்டமாகவே வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனைய்யும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (இ-10)

## வடக்கு மாகாணத்தில்

# மீள்குடியேற்றக் கொள்கை விரைவில் வகுக்கப்படும்

### அமைச்சர் சத்தியலிங்கம் த்கவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றம் தொடர்பாக விசேட செயலணியொன்றை உருவாக்குவதுடன் அதற்கான கொள்கை வகுக்கப்படவுளளதாக வடக்கு மாகாண சுகாதார, புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதம செயலாளரின் செயலகத்தில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது, இதுவரை மத்திய அரசானது நேரடியாகவே வடக்கு மாகாணத்தின் மீள்குடியேற்ற விடயங்களை கையாண்டு வந்தது. தற்போது மாகாண புனர்வாழ்வு அமைச்சு ஒன்று இயங்கி வருகின்றது. இது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனத்திற்கு கொணடு வந்திருந்தோம்.

இனிவருங்காலங்களில் வடக்கு மாகாணத்திற்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மாகாண மீள்குடியேற்ற, புனர்வாழ்வு அமைச்சின் பங்குபற்றுதலுடனேயே நடைபெறும். இதற்காக முதலில் மாகாணத்திற்கான மீள்குடியேற்ற கொள்கையொன்று வகுப்பது அவசியமாகும். இவ்வாறான கொள்கையொன்று வகுக்கப்படாமையே மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் குளறுபடிகள் ஏற்பட்டமைக்கு பிரதான காரணமாகும்.

பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் மீள்குடியேற்றம் தொடர்பில் விசேட செயலணிகள் உருவாக்கப்படவுள்ளன. இதில் அரசாங்க அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர். மீள்குடியேற்றம் தொடர்பில் பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்படுவது அவசியமாகும் என தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் மாகாண அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செலாளர்கள் கலந்துகொண்ட முதலாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (இ-2-281)

## டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல் கல்லூரியின் முழுநேரம் மற்றும் பகுதிநேரம் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தொழில் நுட்பவியல் கல்லூரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் டிப்ளோமா (முழுநேரம்/பகுதி நேரம்), நிர்மாண தொழில் நுட்பவியல் டிப்ளோமா (பகுதி நேரம்), தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியல் டிப்ளோமா (பகுதி நேரம்), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா (முழு நேரம்/பகுதி நேரம்), கணியஅளவையியல்தொழில் நுட்பவியல் டிப்ளோமா (முழு நேரம்/பகுதிநேரம்) போன்ற கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 20.11.2015 வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது தொழில்நுட்பவியல் கல்லூரியில்பார்வையிடமுடியும்.

அத்துடன் விண்ணப்பப்படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)



பாலர் கல்வி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரசடி ஞானக்குழந்தை முன்பள்ளியின் கலை நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...

## இறுவெட்டு வெளியீடு

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தசஷ்டி கால உற்சவத்தின் போது நுணசை முருகன் மீது பாடப் பெற்ற திருப்பள்ளியெழுச்சியும் காவடிப்பாடல்களும் அடங்கிய இறுவெட்டு வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளது. இவ் வெளியீடானது ஆலய தர்மகர்த்தா பாலசுப்ரமணியம் புருசோத்தமனால் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இறுவெட்டின் பாடங்களை ஆசிரியர் துரை கணேசமூர்த்தியினால் ஆக்கம் பெற்று சத்தியனால் இசையமைக்கப்பட்டது.

பாடல்களை பேராசிரியர் நா.வி.மு.நவரத்தினம், எஸ்.ஜி.சாந்தன், ஏ.நுசந்தா, ஸ்வடிவாம்பிகை ஆகியோர் பாடியுள்ளனர். இ-5)

## வேலணை நூலகத்தின் வாசிப்புமாத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபையின் கீழ் வேலணை பொது சன நூலகத்தின் வாசிப்பு மாத நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை வேலணை பிரதேச சபையின் உப அலுவலகமான அல்லைப்பிட்டி அலுவலகத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச சபையின் செயலாளர் மு.இராஜகோபால் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக அல்லைப்பிட்டி பங்குத்தந்தை அருட்பணி எம்.பத்திநாதர், தீவாக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராசா, வேலணை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் எஸ். சிவராசா, வேலணை பிரதேச சபை முன்னாள் ஓய்வு பெற்ற பொறுப்பதிகாரி ப.பால சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ். அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன், யாழ். றோ.க.த.க.பாடசாலை அதிபர் வே.ந.பத்மநாதன், அல்லைப்பிட்டி ஜே/10 கிராம சேவையாளர் சி.இரட்னேஸ்வரன், மண்கும்பான் ஜே/11 கிராம சேவையாளர் இ.யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நன்றியுரையினை பிரதேசசபையின் உப அலுவலகபொறுப்பதிகாரிதேதிஷன் ஆற்றவுள்ளார். (இ-5)

## யாழில் அரச திணைக்களங்களுக்கான பொருட்களை வழங்குவதற்குப்பதியவும்

யாழ்ப்பாணத்திலுள்ள பல அரச திணைக்களங்கள் 2016 வருடத்திற்குதங்களுக்குதேவையான நானாவிதப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வசதியாக பதிவுகளை மேற்கொள்ளஅறிவிப்புக்களை விடுத்துள்ளன.

எனினும் எமது வர்த்தகர்கள் இவ்விடயத்தில் பெரிதும் அக்கறை செலுத்தவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே காகிதாதிகள், எழுதுகருவிகள், தளபாடங்கள், இலத்திரனியல் பொருட்கள், ஹாட்வெயர் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள், குடிநீர், பால்மா வகைகள், சீருடைகள்போன்ற அனைத்து வகையான பொருட்களையும் வழங்கக்கூடியவர்கள் 30.11.2015 திங்கட்கிழமைக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். வணிகர்கழகம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறான பதிவுகளை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேசசெயலகங்கள், மாகாண சபை, சுகாதார சேவைகள் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் கோரியுள்ளமையால் இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளுமாறு அனைத்து வர்த்தகர்களையும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்வதுடன் இது தொடர்பில் மேலதிக தகவல்களை வழங்கவும் வணிகர் கழகம் தயாராகவுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம் என அக்கழகம் அறிவித்துள்ளது. (இ

## பொதுக்கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் விசேட வழிபடுநர் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குஅறங்காவலர்சபைத் தலைவர் ஆதியாகராஜா தலைமையில் ஆலயகல்யாணமண்டபத்தில் நடைபெறவுள்ளது. 2015 ஆம் ஆண்டிற்கானவருடாந்தபொதுக்கூட்டம்இவ் வண்டுமாசிமாதம்மற்றும் ஆவணி மாதத்தில் நடைபெறவிருந்தது.

தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு தற்போது வழிபடுவோர் மகாசபையினரின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர்அறிவித்துள்ளனர். (இ-5)

# யாழ். புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் ஆண்டகையை வாழ்த்தி வரவேற்போம்



அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் புதிய ஆயராக மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல்சடங்கு இன்று நவம்பர் மாதம் 28 ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

மேதகு ஜஸ்ரின்பேணாட ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பணி ஏற்புடன் யாழ்ப்பாண மறை மாவட்டம் புதிய சகாப்தம் நோக்கி விரையும் என எதிர்பார்ப்பது மிகையானதல்ல. பலராலும் பலகாலம் எதிர்பார்க்கப்பட்ட ஆளுமை மிக்க தலைவர் அவர். உயர்ந்த உருவம் - நிமிர்ந்த பார்வை - கம்பீர நடை - சிரித்த முகம் - கனிவான பார்வை - கவனமான பேச்சு - கடமையில் கவனம் - சிறந்த நிர்வாகம் - தூரநோக்கு - துணிவான் செயல்முறை - ஆட்கொள்ளும் சுபாவம் என அனைத்தும் நிறைந்த ஆளுமை கொண்ட ஒருவரான மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ்.மறை மாவட்டத்திற்கு காலத்தின் தேவை கருதிக் கடவுளால் வழங்கப்பட்ட கொடை.

மேதகு ஜஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் வாழ்க்கைச் சுவடு இவ்வாறு அமைந்து அவரின் ஆளுமையை வெளிக்காட்டுகிறது

மேதகு ஜஸ்ரின் பேணாட ஞானப்பிரகாசம் ஆண்டகை 2015ஆம் ஆண்டு யாழ். ஆயர் நியமனத்தைப் பெறும் போது (2007-2015) 8 ஆண்டுகள் யாழ் மறை மாவட்டத்தின் குரு முதல்வராகவும் கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியவர்.

குருத்துவப்பணியில் 40 ஆண்டுகளை 2014ஆம் ஆண்டு நிறைவு செய்துளள மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது குருத்துவப் பணிக்காலத்தின் 31 ஆண்டுகளை கல்விப்பணியிலே குறிப்பாக இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆற்றி 2001 ஆம் ஆண்டு கல்விப்பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்தவர்.

1976 ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியின் உப அதிபராகவும் 1989 முதல் 2002 வரை அதன் அதிபராகவும் பணியாற்றிய இவர் அரச பாடசாலையில் இருந்து தனியார் பாடசாலைக்குப் பணி மாற்றம் பெற்று 2002 முதல்2007வரை புனித பத் திரிசியார் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியவர்.

இங்கிலாந்தில் 1986 ஆணடு முதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும் திரும்பவும் இங்கலாந்தில் 1979 ஆம் ஆண்டு முதல் 1980 வரை முதுகலை மாணிப் பட்டத்தையும் பெறற இவர் 1991ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 தரத்தைப் பெற்று 1990 - 1994 ஆண்டுகாலப் பகுதியில் இளவாலையில் 12 அரச பாடசாலைகளின் கொததணி அதிபராக பணியாற்றியவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1998 ஆம்ஆண்டுமுதல்2014 ஆம் ஆண்டுவரை பணியாற்றிய இவர் 1982 முதல் 1984 வரை யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். 2003 ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒழுங்காற்றுச் சபைத் தலைவராகவும் - 2002 ஆம் ஆண்டுமுதல் யாழ் பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலைமாணிப்பட்ட மதிப்பீட்டாளராகவும் பரீட்சையாளராகவும் இன்று வரை பணியாற்றி வருகிறார். கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனைசபை உறுப்பினராக 2003 ஆம் ஆண்டு முதல்இன்றுவரை பணியாற்றி வருகிறார்.



1994ஆம் ஆண்டுமுதல் 2002 ஆம் ஆண்டுவரை இளவாலை மறைக்கோட்டத்தின் 12 பங்குகளின் முதலவராகப் பணியாற்றிய இவர் அதேகாலப் பகுதியில் யாழ். மறைமாவட்ட ஆயரின்பேரவை அங்கத்தவராகப் பணியாற்றி பன்னர் அதே பணியை 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம்ஆண்டு வரை ஆற்றியவர்.

யாழ். மறைமாவட்ட கல்வி ஆணைக்குழுவின் தலைவராக 1992 - 2002 ஆண்டு காலப் பகுதியில் பணியாற்றிய இவர் 1992 முதல் 2006 வரை புனித சவேரியார் குருத்தவக் கல்லூரி மெய்யியற் துறையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ் மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக் குழுவின் தலைவராக 1981 - 1986 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியற் துறையில் 1984 - 1986 ஆண்டு காலப் பகுதியில் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு விரிவுரையாளராகப் பணியாற்றியவர். 1999ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடியவர்.

1974 ஆம் ஆண்டு யாழ் புனித அடைக்கல அன்னை (ஓ. எல்.ஆர்) ஆலயத்தில் மறைந்த யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 1980 - 1985 ஆண்டு காலப் பகுதியில் மாரீசன்கூடல் பங்குத்தந்தையாகவும்1976 - 1979 ஆண்டு காலப்பகுதியில் இளவாலை புனித அன்னாள் ஆலய உதவிப் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியவர். 1975 - 1976 ஆண்டு காலப்பகுதியில் உருத்திரபுரம் பணித்தளத்தில் பணியாற்றிய இவர் அன்று லோங் தொழில் நுட்ப நிறுவனம்என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர். இவரின் முதல் குருத்துவப் பணிநியமனம் 1974 ஆம் ஆண்டில் கிளிநொச்சி, வலைப்பாடு ஆகிய பங்குகளில் அமைந்திருந்தது.

இவர் தனது இறையியல் கல்வியை 1972 - 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா புனே பாப்பிறைக் குருத்துவக் கல்லூரியில் கற்று இறையி யல் இளங் கலைமாணிப்பட்டத்தை பெற்றவ் இவ்தனது மெய்யியல் கல்வியை 1966 - 1969 ஆண்டு காலப்பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் ஆரம்ப கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் மற்றும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர்.

1948 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறைபுனிதமரியன்னை ஆலயப்பங்கில் பிறந்த மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 2015 ஆம் ஆண்டு யாழ்.மறை மாவட்டத்தின் 11ஆவது ஆயராக யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் பொறுப்பேற்கிறார்

யாழ்.ஆயர்மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு நிறைந்த அருள் - வழி காட்டும் ஞானம் - நீடித்த ஆயுள் - நல்ல சுகம் - முழுமையான ஒத்துழைப்பு என்பன நிறையக் கிடைத்து அவர் நேர்மையான ஆட்சியையும் - நிறைவான பணியையும் முழுமையாக வழங்க இறையாசீர் வேண்டுவோம்.

அருட்கலாநிதி மேதகு ஜஸ்ரின் பேணாட்ஞானப்பிரகாசம ஆண்டகையின் வாழ்க்கைச் சுவடுகள்

**பிறப்பு:** 13 மே 1948 - ஊர்காவற்றுறை

**தந்தை பெயர் :** அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம்

**தாய் பெயர்:** எமிலி தங்கமலர்

**ஆரம்பக் கல்வி :** புனித அந்தோனியார் கல்லூரி - ஊர்காவற்றுறை, புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம.

**குருத்துவக் கல்வி :**
புனிதமடுத்தீனார் குருமடம் - யாழ்ப்பாணம் ,1966 - 1969 தேசிய குருத்துவக் கல்லூரி -கண்டி,1972 - 1974 பாப்பிறை குருத்துவக் கல்லூரி - புனே - இந்தியா

**குருத்துவ அருட்பொழிவு 24 ஏப்ரல் 1974 :**
யாழ்.புனித அடைக்கல அன்னை (ஓ.எல்.ஆர்) ஆலயம் - மறைந்த யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை.

### பணித்தளங்கள் :

1974 - 1974: உதவிப்பங்குத் தந்தை: கிளிநொச்சி - வலைப்பாடு
1975 - 1976 : உதவிப்பங்குத் தந்தை : உருத்திரபுரம் உதவி இயக்குனர்: லோங் தொழில் நுட்பநிறுவனம்
1976 - 1979 :உதவிப்பங்குத் தந்தை: இளவாலை
1980 - 1985 :பங்குத் தந்தை : மாரீசன்கூடல்
1979 - 1980: முதுகலைமாணிப் பட்டம் - இங்கிலாந்து
1982-1984: விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை
1981-1986: தலைவர், யாழ்.மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக்குழு
1990 - 1994: இளவாலை 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபர்
1991 : இலங்கை அதிபர் சேவையின் வகுப்புதரம் 1
1992 -2002 :தலைவர். யாழ். மறைமாவட்ட கல்வி ஆணைக்குழு
1992 - 2006 : விரிவுரையாளர், புனிதசவேரியார் குருத்துவக் கல்லூரி
1994 -2002 : இளவாலை மறைக்கோட்ட முதல்வர்
1994-2002: யாழ். மறை மாவட்டஆயரின் பேரவை அங்கத்தவர்
1976-1989 : உப அதிபர் , இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி
1989 - 2002: அதிபர், இளவாலை புனிதகென்றிஅரசர்கல்லூரி
1986 - 1988 : கலாநிதிப் பட்டம் - இங்கிலாந்து
2002 - 2007: அதிபர், யாழ்.புனிதபத்திரிசியார் கல்லூரி
1974 - 1999 : குருத்துவ வெள்ளிவிழா
1998 - 2014: யாழ். பல்கலைக்கழக பேரவைஉறுப்பினர்
2003 :தலைவர், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒழுங்காற்று சபை
2002 : யாழ்,பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலை மாணிப்பட்ட மதிப்பீட்டாளர் - பரிசோதனையாளர்
2003 :கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினர்
2007 - 2015: யாழ்.மறை மாவட்ட ஆயரின் பேரவை அங்கத்தவா
2007 - 2015 : யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர்
2008 - 2015 : கத்தோலிக்க அச்சக அதிபர்
2014 : குருத்துவ 40 ஆவது ஆண்டு விழா
2015 : யாழ். மறை மாவட்டத்தின் 11 ஆவது ஆயர்.

### யாழ் மறைமாவட்ட புதிய ஆயர்

# மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு


## வாழ்த்து மலர் - 28 நவம்பர் 2015




மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் வாழ்த்து

யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பொறுப்பேற்பதை இட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். யாழ் மறை மாவட்டத்தை காலத்தின் தேவைக் கேற்ப கவனத்தோடு நடத்தி ஒரு பொற்காலத்தை நோக்கி நகர்த்திச் செல்வார். சிறந்த நிர்வாகம் ஆழ்ந்த கல்வியறிவு முழுமையான ஆளுமை முதிர்ச்சியான ஆன்மீகம் எனப்பன்முக ஆளுமை கொண்ட மேதகு ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ் மறைமாவட்டத்தின் ஆயராக அமர்த்திச் செல்வதில் மனமகிழ்வடைகிறோம். இவரின் ஆளுகையில் யாழ் மறைமாவட்டம் புதிய சகாப்தத்தை நோக்கி இனிதே நகரட்டும் அவரின் பணி சிறக்க வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிக்கிறேன்.











யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் கலாநிதி பீ.ஜே. ஜெபரட்ணம் அடிகளார்

யாழ் மறை மாவட்டம் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த புதிய ஆயர் இப்போது தரப்பட்டுள்ளார். அறிவிலும், அனுபவத்திலும், ஆன்மீகத்திலும், நிர்வாகத் திறமையிலும் சிறந்தவரான ஒருவர்தான் ஆயராக நியமிக்கப்படவேண்டுமென்றால் அத்தனை அம்சங்களையும் கொண்டவராக விளங்குகின்ற மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகைதான் மிகவும் பொருத்தமானவர். 40 ஆண்டுகளுக்கு மேலாக எமது மறைமாவட்டத்தின் குருவாகப் பல்வேறு நிலைகளில் அரும்பணியாற்றியஎமது புதிய ஆயர் எமது மறைமாவட்டத்தின்மீது கொண் டுள்ள அளவு கடந்த அன்பும், பாசமும், அக்கறையும் எல்லாரும் மிகத்தெளிவாக கண்டறிந்த விடயமாகும். மறைமாவட்டப் பணிகள், பங்குப்பணிகள், கல்விப்பணிகள், பொதுப்பணிகள் என அவர் ஆற்றாத பணிகளே கிடையாது என்பதை அவருடைய பணிவரலாற்றில் பார்க்கின்றபோது அவருடைய தகைமை வெளிப்படுகின்றது. நிறைவான ஆளுமையும், தெளிவான சிந்தனையும், நியாயமான கண்டிப்பும், ஒருவரின் தேவையை, பிரச்சனையை மிகச் சரியாகப் புரிந்து கொண்டவராக கரிசனையோடு அணுகும் பண்பும் புதிய ஆயரில் இரண்டறக் கலந்த பண்புகளாக இருப்பது எமது மறைமாவட்டத்துக்குக் கிடைத்த பாக்கியமென்றே கூறவேண்டும். இக்காலம் அவருக்கு மறைமாவட்டத்தில் பணியாற்றும் ஒவ்வொரு குருவும் எப்படிபட்டவர், மறைமாவட்டப் பங்குகள் எந்நிலையிலுள்ளன, மறைமாவட்ட மக்கள் ஓர் ஆயரிடம் என்னத்தை எதிர்பார்க்கிறார்கள், மறைமாவட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளென்ன போன்ற பல முக்கியமான கேள்விகளுக்கான பதி லைக் கொடுத்தகாலமாக அமைந்திருக்கின்றதனால் அவர் தொடர இருக்கின்ற ஆயர் பணியில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் விடை காண, தீர்வுகாண முயற்சிப்பார் என்பது தெளிவானதாகும்.



யாழ் மறைமாவட்ட புதிய ஆயரான கலாநிதி மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை கத்தோலிக்க திருச்சபையில் குருத்துவப்பணியை நீண்ட காலமாக நற்பணியாற்றி பலரது நன்மதிப்பையும் பெற்று அனைவரது அன்பையும் தனதாக்கியவர். இனிமையாகப் பேசுவதும் எளிமையாகப் பழகுவதும் அடக்கமான நன்நடத்தையும் கொண்டு கத்தோலிக்க திருச்சபைக்கு பெருமை சேர்த்துள்ளார். அனைத்து மதங்களுடனும் நல் இணக்கத்தை ஏற்படுத்தி ஏனைய மதத்தலைவர்களையும் கௌரவிக்கும் பண்பும் கொண்ட ஆண்டகை யாழ் மறைமாவட்ட அயராக பதவி ஏற்பது கிறிஸ்தவ மக்களுக்கு மட்டும் அன்றி ஏனைய மதத்தவருக்கும் மகிழ்ச்சியை தந்துள்ளது.ஆயர் அவர்கள் இறைபணியில் பல ஆண்டுகள் தொடர இறையாசியை மனப்பூர்வமாக வேண்டுகிறோம். வாழ்க வளமுடன். என்றும் வேண்டும் இன்ப அன்பு. **ஸ்ரீலஸ்ரீ-ஸ்வாமிகள் இரண்டாவது குருமஹாசன்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்மந்தபரமாசாரிய சுவாமிகள்**



வங்கக் கடல லைகள் மெல்லத் தாலாட்டும் இந்து மாசமுத்திரத்தின் முத்தெனும் தீவின் சிகரமதில் பல சகாப்தங்களை கண்ட நிற்கும் யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை இன்நாளில் வாழ்த்துவதில் பேருவகை கொள்கிறோம். தசாப்பங்கள் கடந்த போரினால் குருர வாதைகளை , தாங்கிய மனங்கள் அரசியல், பொருளாதார ரீதியில் வஞ்சிக்கப்பட்டு வரும் நிலையில் உலகக் கவர்ச்சிக்குள் மாண்டு போகும் சமூகத்தின் சவால்களுக்குள்ளும் உமது மேய்ப்பப் பணிகளை ஆரம்பித்து நிற்கும் நீங்கள் கிறிஸ்துவின் சாயலாய் விடுதலைக்காய் காத்து நிற்கும் எம் மினத்தின் விடிவெள்ளியாகிய எம் மக்களின் ஏக்கங்கள் அபிலாசைகளுக்காக உரத்துக் குரல் கொடுக்கவும் மழுங்கப்பட்டு வரும் கிறிஸ்தவப் பண்புகளில் மக்கள் மலரச்செய்யவும் சூளும் துயர்யாவும் நீக்கி உள ஆன்ம பலத்துடன் உம் பணிதொடர மரியன்னை வழியாக புனிதர்கள் துணையோடு இறைமகனிடம் பிராத்திக்கின்றோம்.
**திரு. பி.வின்செனட் டீ போல்**
**தலைவர் பருத்தித்துறை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகம்**



ஆளுமையும் ஆற்றலும் பட்டறிவு மிக்க நிர்வாக வீச்சும் தூர நோக்கும் கொண்ட ஆயர் போரினால் சிதைவுற்ற திருமறை கட்டமைப்புக்கள் ஆன்மிகத்துறை தொழில் முறைகள் ஆலயங்கள் தமிழ் மக்களின் வாழ்வியல் எதிர்பார்ப்புகள் என்பவற்றை மீளக் கட்டியயெழுப்பும் சிற்பியாகவும், நீதியின் குரலாகவும் பணியாற்றும் பாரிய பொறுப்பை ஏற்றுள்ளார். திருச்சபைக்கும் தமிழ் சமூகத்திற்கும் போதனையாலும் தொடர்பாடலினாலும் புத்தாக்க செயற்பாட்டு மாற்றங்களினாலும் புது இரத்தம் பாய்ச்சி ஆன்மீக, சமூக, கலாசார மனிதநேய பிறழ்வுகளிலிருந்து மீட்டு இஸ்திரமான பாதையில் இட்டுச் செல்லும் திருமறை மாலுமியாக இயேசு என்னும் அணையாத கலங்கரை விளக்கை நோக்கி அழைத்துச் செல்வாரென்பதில் ஐயமில்லை.
**ஏஸ். யேசுதாஸ்,ஊடாக எழுத்தாளர் கொழும்புத்துறை**



பசுமையான நினைவுகளின் பின்புலத்தில் சாதனையாளர் அதிபர்.என்ற உயர்வின் சிறப்புடைய அதிபர் ஒருவராக ஆயர் அவர்களைக் கண்டேன். என் கல்லூரிப்பராயத்தில் 1979 ஆண்டு உயர்தரம் வர்த்தகப் பிரிவில் யாழ் புனித கென்றியரசர் கல்லூரியில் கால் பதித்தவேளையில் அதிபராகப் பணியாற்றியவர் மதிப்பான ஆயர் அவர்கள். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்றமுப்பெரும் விதிகளுக்குள் பக்தி ஒழுக்கம் கல்வி ஆழுமை விருத்தி என்பவற்றை நோக்கி மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர். இத்தகைய சிறப்புத்தன்மைகளை தன்னகத்தே தங்கிய அதிபர் அவர்கள் எமது குடும்ப நண்பராகக் கிடைத்தமை நாம் செய்த பெரும் பாக்கியமே. ஆயரின் அன்பி னால் கட்டுண்டு அவருக்காக எதையுமே தியாகம் செய்யு அளவிற்கு அன்பு கொண்டவராய் விளங்கிய எனது கணவர் நகை ச்சுவையாக கூறிவரும் வார்த்தை பாதரின் இந்த கறுப்புப்பட்டி விரைவில் நிறம் மாறவேண்டும் என்பதாகும்.அதிபர் என்ற நிலையைக் கடந்து நல்ல நண்பர் வழிகாட்டி ஆலோசனையாளர் யாழ் மறைமாவட்ட பணிகளுடன் கூடவே தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காகவும் அமைதி சுபீட்சம் நீதி என்பவற்றுடன் இணைந்த சக வாழ்விற்காகவும் ஒலிக்கும் குரலாகத் திகழ இறைவனை பிராத்தித்து வாழ்த்துகின்றோம்.
வாழ்க வாழ்க வாழ்கவே
**திரு.திருமதி ஜெ. ஜேகன் சிவராஜா புடவைக் கடை உரிமையாளர்**

(அ-2806)



"THE ALMIGHTY HAS DONE GREAT THINGS FOR ME FOR HE HAS LOOKED UPON HIS LOWLY SERVANT"- WE THE BROTHERS AND SISTERS OF MSGR. JUSTIN BERNARD GNANAPRAGASAM ALSO REJOICE WITH MOTHER MARY. BUT THIS REJOICING HAS ITS CONSQUENCES. THE UNBEARABLE SUFFERING AT THE FOOT OF THE CROSS WHICH MOTHER MARY HAD TO FACE IN ACCEPTING THE ANGE'S MESSAGE. WE ALSO SHOULD BE AWRE OF THIS; TO HAVE A FIRM BELIEVE AS MARY DID AND BE CONFIDENT THAT GOD IS AT WORK IN OUR BROTHER'S LIFE. OUR PARENTS WERE MARRIED IN 1939 AND SOON AFTER THE SECOND THE WORLD WAR RAVAGED THE WHOLE WORLD. EVENTHOUGH WE DID NOT EXPERIENCE WAR SITUATION WE HAD TO GO THROUGH A DIFFICULT PERIOD BUT WITH THE END OF WAR IN 1945 PROSPERITY DAWNED. IN THE YEAR 1948 THE PROCLAIMING OF THE INDEPENDENCE BROUGHT ABOUT MUCH JOY TO THE PEOPLE. THE SINGING OF FREEDOM SONGS OF POET PARATHI WAS IN EVERY ONE LIPS. BUT OUR GREATEST JOY WAS 13TH OF MAY 1948 WHEN OUT BROTHER JUSTIN CAME INTO THE WORLD.HE WAS BIG IN EVERY WAY. MUMMY'S WOMB WAS QUITE LARGE AND THAT CAUSED GREAT CONCERN WHETHER IT WOULD BE TWINS, BUT HE CAME OUT INTO THE WORLD WITH TRUMPET BLAST. SO MUCH SO THAT HIS GRAND MOTHER AS SOON AS SHE SAW HIM NAMED THE BABY BERNARD AFTER HER OWN BROTHER WHO WE CAME TO UNDERSTAND WAS BIG IN STATURE. FROM HIS INFANCY HE WAS THE BOUNCING BABY BUT HEAVY. HIS BOISTEOUS CRYING WAS WELL KNOWN TO OUR NEIGHBOURS; IT WAS TO ANNOUNCE THAT JUSTIN IS AWAKE AND NEEDS EERY ONE'S ATTENTION. AT THE AGE OF TEN HE MADE KNOWN TO ALL THAT HE WANTED TO JOIN THE SEMINARY. OUR PARENTS ON 26TH JANUARY 1959 WITH A HEAVY HEART LED HIM TO THE THEN BISHOP OF JAFFNA HIS LORDSHIP DR EMILIANUS PILLAI,OMI WHO GLADLY ADMITTED HIM TO THE MARTINS MINOR SEMINARY. FROM THEN ON HIS LIFE WAS WITH THE LORD. WE SEE HIM OCCASIONALY AND ON APRIL 24TH 1974 HE WAS ORDAINED A PRIEST BY THE THEN BISHOP OF JAFFNA HIS LORDSHIP DEGOPILLAI. WITH THIS WE HAD TO PAINFULLY SAY BYE AS HE IS NOW WITH THE LORD AND THE PEOPLE.WE HAVE ALSO LOST ANOTHER BROTHER, WHOM WE HAVE NOT KNOWN AND HENCE NOT IN OUR MINDS. HE WAS CONCEIVED DURING THE TIME JUSTIN WAS EXPRESSING HIS DESIRE TO JOIN THE SEMINARY. MUMMY NAMED HIM GNANAKUMAR AFTER PAPA. HE WAS SEVENTH IN THE FAMILY AND WAS THE CAUSE OF OUR JOY FOR FOURTEEN MONTHS. GOD GAVE OUR PARENTS FIVE SONS AND THREE DAUGHTERS BUT HE CLAIMED ONE SON AS HIS OWN ANOTHER SON HE ANOINTED.THE DEATH OF GNANAKUMAR BROUGHT TEARS TO US. IT WAS THE ONE AND ONLY OCCASION I SAW MY FATHER CRY. BUT PROSPERITY FOLLOWED. WE HAVE LIVED WITH THE PSALMS 30:5- "TEARS MAY FLOW IN THE NIGHT, BUT JOY COMES IN THE MORNING" SO MUCH SO THE TEARS OF OUR PARENTS THAT HAS BROUGHT ABOUT JUSTIN'S JOY OF THIS EPISCOPAL ORDINATION WE THANK AND PRAISE GOD FOR THIS CHOICEST BLESSING HE HAS FAVOURED US WITH. MESSAGE FROM THE NEW BISHOP'S ELDER BROTHER GNANARAGASAM ROSSI XAVIER KULENDRAN



புதிய ஆயர் ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு யாழ் பல்கலைக்கழகச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன். ஆயர் பணியானது மிகவும்பொறுப்பு வாய்ந்த பலசவால்கள் நிறைந்த பணியாகும். புதிய ஆயர் தமிழ் மக்கள் வாழ்வில் பல பிரச்சினைகள் நிறை ந்த வரலாற்றுப் பின்னணியில் தமது பொறுப்பை ஏற்றாலும் தமது பல்பரிமாண ஆளுமைத் திறமையினால் சிறந்த நிலையில் தமது தலைமைத்துவப்பணியை மேற்கொள்வார் என்பது எமது உறுதியான நம்பிக்கை ஆகும். இவர் கல்வித்துறையில் இருந்த ஈடுபாடுகாரணமாக கல்வித்துறைக்கு பலபங்களிப்பை வழங்கினார். இலங்கை,இங்கிலாந்து,இந்தியா ஆகிய நாடுகளில் கற்று பல உயர் பட்டத்தகமைகளைப் பெற்ற எமது ஆயர் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் மதிநுட்பத்துடன் அணுகி உரிய தீர்வுகளை முன்வைக்கும் திறமையுடையவர். பல்வேறு பங் குகளிலும் மற்றும் பல்வேறு நிர்வாகப் பொறுப்புக்களிலும் ஈடுபாடு கொண்டு மக்களுக்க சிறந்த சேவையாற்றி யுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தில் ஆறு ஆண்டுகள் மூதவை உறுப்பி னராகவும் யாழ் பல்கலைக்கழகக் கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத் துறையின் வருகைதரும் விரிவுரையாளராகவும் உள்வாரி,வெளிவாரிபரீட்சராகவும் முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரை மேற்பார்வையாளராகவும் மதிப்பீட்டு பரீட்சகராகவும் மாணவர் ஒழுக்காற்று குழுத்தலைவராகவும் சிறந்த முறை யில் பலபங்களிப்புக்களைச் செய் துள் ளார். இந்நன்னாளில் யாழ்பல்கலைக்கழகம் புதிய ஆயரின் பணிகளை நினைவுகூருவதில் பேருவகை அடைகிறது. நீண்ட பல ஆண்டுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் சமய சமூகத் தலைவராக இவர்பணி சிறக்க வாழ்த்துகிறேன். **முதுநிலை பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்.**



மேதகு ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் பல்பரிமாண ஆளுமை: 1.**வீழ்ந்தோரைத் தாங்கும் தோள் கொண்டவர்:** எவராது நொந்திருந்தால் தேடிச் சென்று அவர்களை மீட்கும் நற்பண்பு கெண்டவர். குரு எவருக்காவது ஏதாவது துன்ப அனுபவம் என்றால் அவர் நேரம் பார்க் காது உடனே பயணம் செய்து வேண்டிய உதவிகளை வழங்கத் தயங்க மாட்டார்.2.**சிறந்த நிர்வாகத் திறனாளர்:** எதையும் சிறந்ததாக இயங்கவைக்கும் விருப்பு நிறைந்தவர். யாருக்கு என்னென்ன திறமை உண்டு என்பதை அடையாளம் கண்டு அவரை அத்துறை யில் பணியாற்ற நியமிப்பது இவரது நிர்வாகத்திறனின் தனித்துவம். இதுவே இவரது நிர்வாகத்தின் முது கெலும்பாகவும் விளங்கும்.3.**கருத்தாழம் மிக்க மறையுரையாளர்:** இவரது மறையுரை கள் சுருக்கமானதாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் விளங்கும். இவரது வாசிப்புப் பழக்கத்தின் விளைவையும் அதில் காணமுடியும். அத்தோடு நடை முறை வாழ்வுக்குப் பயன்படும் கருத்துகளையே தருவார். உரையாக இருந்தாலும் சரி மறையுரையாக இருந்தாலும் சரி இத்தன்மைகளை அவற்றில் காண முடியும்.4.**சிறந்த ஆலோசகர்:** பல்வேறு வாழ்க்கை நிலைகளைக் கொண்டவர்கள் இவ ரிடம் ஆலோசனை பெற வரும்போது யதார்த்தமாகச் சிந்தித்துக்கடைப் பிடிக்கக்கூடிய நடைமுறைரீதியான தீரவை முன்வைப்பது இவரது பட்டறிவின் வெளிப்பாடு.5.**தேர்ச்சி நாடுநர்:** இவர்சிற ந்த நூல்கள், சிறந்த திரைப்படங்கள் என்பவற்றை வாங்கிப் பயன்படுத்தித் தன் அறிவை விசாலப்படுத்திக்கொள் ளுவார். இவர் தொடர்ந்து தேடலில் ஈடுபடும் மனப்பாங்கைக்கொண்டுள்ளார். 6.**சிறந்த கல்வியியலாளர்:** கல்வித் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றுச்சிறந்த அதிபராக விளங்கியதோடு, யாழ் பல்கலைக்கழகப் பேரவையில் பத்து வருடங்களாகச் சிறந்த பணி புரிந்தவர்.**அருள்திரு இராயேந்திரம் எஸ்ரலின், யாழ் பல்கலைகழக ஆன்மீ கவழிகாட்டி**




It is my great joy and privilege to extend the heartfelt congratulations to the Rt. Rev. Msgr. Justin B Gnanapragasam on behalf of Henricians United Kingdom on the occasion of his episcopal ordination. The new Bishop has in abundance the ability and qualities needed to lead the Diocese of Jaffna. As well as being an excellent communicator, his long *experience in education, parish ministry and diocesan administration have shown his unique ability to lead people and organisations and achieve success* for them. All this has prepared him well forthis office. All Henricians assure the new Bishop of our prayerful support as he begins his new episcopal ministry at Jaffna Diocese. May the good Lord grant the new Bishop all the gifts and graces he will need to carry out his apostolic office.
**Henry Camillus, President**
**Henricians United Kingdom**
**London 28 November 2015**



ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்ட கையின் பணிக்காலத்தின் கிட்டத்தட்ட அரைவாசிக்காலம் அவருடன் வாழ்ந்து-அவருக்கு பணிபுரிந்து-இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு-அவரது கையால் செதுக்கப்பட்டவன் நான். பயனற்ற,யாவராலும் கைவிடப்பட்ட, பொருட்களையோ, ஜீவராசிகளையோ ஓரங்கட்டிவிடாது அப்பொருளையோ, ஜீவராசிகளையோ அதன் சிறப்பு மிளிருமளவிற்கு வெளிக்கொணர்ந்து, உருப்பெறச் செய்யும் இயல்பு கொண்டவர். நொந்த உள்ளங்களைத் தேற்றி சமூகத்திற்கேற்ற ஒரு பயனளிக்கும் திறமை கொண்டவர். என்னைப் போன்ற பலரையும் உருவாக்கியவர் அவர். தட்டிக் கொடுப்பவர், அன்பு கொண்டவர்,அதேவேளை கண்டிப்பானவர். இவரது கண்டிப்பு கலந்த அரவணைப்பு புரிந்து அவ்வவன் வாழ்வில் முன்னேற்றமானவனாக, சமூகத்தால் ஏற்றுக் கொள்ளக்கூடியவனாக, மதிக்கக் கூடியவனாக திகழ முடியும். **ஏ.ஆர்.சு.விமலகுமார் முன்னாள் ஹென்றியரசர் கல்லூரி ஆசிரியர், இந்நாள் பகுதித் தலைவர், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.**

# மாணவனின் இறுதிச் சடங்கு நேற்று...




அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தனது உயிரை மாய்த்த யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனின் இறுதிக் கிரியைகள் நேற்றையதினம் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற போது.... (படங்கள்: பொ.சோபிகா)

# செந்தூரனின் தியாகத்தை ஏற்று உடனடியாக கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்

## செல்வம் எம்.பி. வேண்டுகோள்

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தனது உயிரை தியாகம் செய்த யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செந்தூரனின் தியாகத்தை ஏற்று உடனடியாக அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செந்தூரனின் உயிரிழப்பு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசாங்கத்திற்கு பல்வேறு தரப்பினர் பல வகையிலும் அழுத்தங்களை கொடுத்து வந்தனர். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் கல்நெஞ்சம் போன்று செயற்பட்டு வருகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், அதனை நல்லாட்சி அரசின் கவனத்திற்கு கொண்டுவரும் வகையில் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் செந்தூரன் உருக்கமான கடிதம் ஒன்றை எழுதி வைத்த நிலையில் தற் கொலை செய்து கொண்டுள்ளார். இச்சம்பவம் அனைவரையும் வேதனையில் ஆழத்தியுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் குறித்த 18 வயது மாணவன் சிந்தித்து வேதனைப்படும் அளவிற்கு இந்த அரசாங்கம் கல்நெஞ்சம் கொண்டு செயற்பட்டு இருக்கின்றது. இந்த தியாகத்தை செய்த மாணவனை தமிழ் தேசியக்கூட்டமைப்பு தலை வணங்குகின்றது.

எனவே பல தரப்பட்டவர்களும் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசாங்கத்திற்கு பல அழுத்தங்களை கொடுத்த நிலையில் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன செந்தூரன் தனது உயிரை தியாகம் செய்துள்ளார்.

ஈழ விடுதலைக்காக தமது உயிரை தியாகம் செய்த மாவீரர்களுக்கு தலை வணங்கும் இன்றைய தினத்தில் (நேற்று) அரசியல் கைதிக ளின் விடுதலைக்காக தனது உயிரை தியாகம செய்த மாணவன் செந்தூரனிற்கும் தலை வணங்குகின்றோம் எனவும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)

## அறிவுறுத்தல் கூட்டம்

பிராந்திய சேகரிப்பு நிலையம், யாழ்ப்பாணம்-II இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம், வடமராட்சி கல்வி வலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் 03.12.2015 வியாழக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சைகடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் தவறாது உரிய நேரத்தில் இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார். (இ-5)

## நிர்வாக சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்-இந்து சமயப் பேரவையின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பலாலி வீதியிலுள்ள இந்துசமயப் பேரவையின் தலைமைச் செயலகத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)

# முல்லைத்தீவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள்



(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு வடக்கு மாகாணசபை விவசாய அமைச்சின் உலர் உணவு வழங்கும் பிரிவின் ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களூடாக உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன. இவற்றை வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், மாகாணசபை உறுப்பினர்களான க.சிவநேசன், து.ரவிகரன் ஆகியோர் இணைந்து மாத்தளன், அம்பலவன் பொக்கணை, மன்னா கண்டல், இருட்டுமடு கள்ளப்பாடு தெற்கு, வண்ணாங்குளம், ஆகிய இடங்களிற்குச் சென்று வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உள்ளான குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைத்தனர். (2)

# ஜி. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு உடன் கிடைக்காது

## ஐரோ.ஒன்றியத்தூதுவர் சுட்டிக்காட்டு

இலங்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை உடனடியாக கிடைக்காமல் போகலாம் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஒன்றியத்தின் இலங்கை தூதுவர் டேவிட் டெலி இதனை தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைமீறல் விடயங்கள் இதற்கான காரணம் என்று அவர் தெரிவித்தார்.

எனவே தனியார் வர்த்தகத்துறையினர் மனித உரிமைகள் விடயத்தில் அரசாங்கத்துக்கு அழுத்தம் தரவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

கொழும்பில் ஆடை உற்பத்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய அவர்,

இலங்கையின் உள்ளூர் பிரச்சினைகள் தொடர்பில் பிரசல்ஸில் கேள்வி எழுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் மீது அண்மையில் பொலிஸார் நடத்திய தாக்குதல், திருகோணமலையில் இலங்கை கடற்படையினரின் இரகசிய வதை முகாம் கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களை அவர் கோடிட்டுக்காட்டினார்.

இந்த வருட ஆரம்பத்தில் வதை முகாம் பற்றி நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறான குற்றச்சாட்டை மறுத்தார்.

எனினும் திருகோணமலையில் வதை முகாம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதை டேவிட்டெலி சுட்டிக்காட்டியுள்ளார். இந்த விடயம், ஐரோப்பிய அரசாங்கங்கள் மத்தியில் கலந்துரையாடப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் என்றதும் டீசேர்ட் மற்றும் ஏற்றுமதி பொருட்களை பற்றி இலங்கை அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது.

எனினும் தம்மை பொறுத்தவரை, ஜிஎஸ்பி பிளஸ் சித்திரவதை, ஊடக சுதந்திரம், பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் ஏனைய சூழல் பிரச்சினைகளாகும் என்று டெலி மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 31ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா- 19.01.2016,20.01.2016

கலாநிதி, முதுதத்துவமாணி, முதுமாணி, பட்டப்பின் டிப்ளோமா, இளமாணி டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 19.01.2016, 20.01.2016 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் 11.11.2014 ஆம் திகதிக்கு பின்பு சித்தியடைந்து பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 15.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1. கலாநிதி
2. முதுதத்துவமாணி
3. முதுகல்விமாணி
4. தமிழில் முதுமாணி
5. பண்பாட்டியலில் முதுகலைமாணி
6. சைவசித்தாந்தத்தில் முதுமாணி
7. சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி
8. சூழலியல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி
9. பட்டப்பின் கல்வி டிப்ளோமா (யாழ்ப்பாணம்)
10. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா
11. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணி
12. மருத்துவ விஞ்ஞானமாணி
13. சித்தவைத்திய சத்திரசிகிச்சைமாணி
14. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி
15. தாதியியல் விஞ்ஞானமாணி
16. மருந்தகவியல்மாணி
17. விஞ்ஞானமாணி (பொது/சிறப்பு)
18. கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி சட்டமாணி
19. விவசாய விஞ்ஞானமாணி
20. தொழில் நிர்வாகமாணி (4வருடம் / 3 வருடம்)
21. சட்டமாணி
22. கலைமாணி (சிறப்பு/பொது)

வவுனியா வளாகம்

23. வியாபார முகாமைத்துவமாணி (பொது/சிறப்பு)
24. விஞ்ஞானமாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும் (பொது)
25. விஞ்ஞானமாணி சிறப்பு கணினி விஞ்ஞானம்
26. விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது/சிறப்பு)
27. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது)
28. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (சிறப்பு)

கீழ்வரும் தேர்வுகளுக்கு தோற்றியவர்கள் தேர்வு முடிவுகள் உறுதிப்படுத்தப் பட்ட பின்பு விண்ணப்பிக்கவும்.

1.கலைமாணி (பொது,விருப்பத்தெரிவு)
2.நுண்கலைமாணி (இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)

2. அறிவுறுத்தல்கள்

1. வேண்டுகோள் படிவங்கள்

விண்ணப்பதாரிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை A4 தாளில் தயாரித்தோ அல்லது www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் மூலம் பிரதி செய்தோ விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. கட்டணங்கள்

- ➢ வேண்டுகோள் கட்டணம் ரூபா. 500.00
- ➢ சான்றிதழ் கட்டணம் ரூபா. 500.00
- ➢ பட்டதாரி மேலங்கிக் கட்டணம் ரூபா. 500.00

முதுநிலைப் பட்டதாரிகள்

- ➢ வேண்டுகோள் கட்டணம் ரூபா. 500.00
- ➢ சான்றிதழ் கட்டணம் ரூபா. 500.00
- ➢ பட்டதாரி மேலங்கிக் கட்டணம் ரூபா. 1000.00

குறிப்பு: பின்வருவோர் சான்றிதழ் கட்டணம் மட்டும் செலுத்தினால் போதுமானது.
பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள்
ஒன்று/இரண்டு வருட டிப்ளோமாதாரிகள்

3. கட்டணம் செலுத்தும் முறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையின் கணக்கு இல. 162100160000880 இற்கு சேரக்கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக்கிளையில் கட்டணத்தை செலுத்த வேண்டும். (வங்கிப் பற்றுச்சீட்டில் பெயரையும் மாண்வர் பதிவு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்)

பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி வேண்டுகோள் படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலதிகமான ஒரு போட்டோ பிரதியை உங்கள் தேவைக்கு வைத்துக் கொள்ளவும்.

4.பட்டதாரி மேலங்கிகளும் விருந்தினர் நுழைவுச்சீட்டும்

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்களுக்கு ஒரு பட்டதாரி மேலங்கியும் ஒரு விருந்தினார் நுழைவுச்சீட்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக் கிளையில் வழங்கப்படும்.

5.பல்கலைக்கழக நிலுவைகள்

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

6.வேண்டுகோள் படிவங்களை சமர்ப்பித்தல்

பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்துடன் பணம் செலுத்திய வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு 15.12.2015 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். (கடித உறையின் இடதுபக்க மூலையில் பட்டம் பெறும் கற்கைநெறியை குறிப்பிடவும்)

அ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள்
உதவிப்பதிவாளர்/ அனுமதிகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

ஆ) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் கல்வி பயின்றவரகள்
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தேர்வுகள்,
வவுனியா வளாகம், வவுனியா

வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித்திகதி: 15.12.2015 முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா. மேலதிக விபரங்களுக்கு உதவிப்பதிவாளர்/ அனுமதிகள் (தொலைபேசி இல. 021 222 6714 / 021 222 2006) உடன் தொடர்பு கொள்ளவும்

பதிவாளர்
26.11.2015 (சி-2803)

# மகனின் கல்விக்காக வீதியில் அமர்ந்த தாய்



தாய் ஒருவர் தமது மகனுடன் சிலாபத்தில், வீதியின் மத்தியில் அமர்ந்து எதிர்ப்பை வெளியிட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சிலாபம், ஆனந்த தேசிய பாடசா லையின் அதிகா ரிகள் தமது மகனுக்கு பாடசாலைக்கு அனுமதி தரவில்லை என்பதை ஆட்சேபித்தே இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டது. குறித்த தாய், பாடசாலைக்கு அருகிலேயே வசிக்கின்றவர். அத்து டன் தாமும் தமது கணவரும் பாட சாலையின் பழைய மாணவர். இந்தநிலையில் தமது மகனின் அனும திக்காக பாடசாலை நிர்வாகம் பணத்தை கோருவதாக தெரி வித்தே இந்த போராட்டம் நடத்தப்பட்டது. இதன்காரணமாக வீதியில் போக்கு வரத்து நெரிசலும் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7-10)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

(கொழும்பு)

**அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக மாலபேயில் உள்ள தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவ மாணவர்கள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.**

2014 ஆம் ஆண்டு தாம் அரசாங்க வைத்தியசாலைகளில் உள்ளக பயிற்சிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் அடிப்படையிலேயே இந்த உள்ளக பயிற்சி அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் பின்னர் அது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத் தப்படவில்லை. எனவே இது நீதிம ன்றத்தை அவமதிக்கும் செயல் என்று மாணவர்கள் தமது மனுவில் தெரிவித்தனர்.(இ-7-10)

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA
## GENERAL CONVOCATION – 19.01.2016, 20.01.2016
## SUPPLICATION FORM

**Note:** In writing your name please ensures that spelling of the name confirms what appears in the Birth Certificate. If the Birth Certificate is in Tamil or Sinhala, please give the English spelling of your name as it appears in your Admission Form.

**Registration No:- ..................** **Index No:- ...........**

(1) Name in Full :-
**(a) In English: ...........................................................**
**(b) In Tamil:...........................................................**
**(c) In Sinhala:...........................................................**

(2) Name of the Post Graduate Degree/ Degree/ Diploma to be conferred:
...........................................................

(3) Year of passing the above examination and **the effective date of the degree**:...........................................................

(4) Whether the Post Graduate Degree / Degree/ Diploma to be conferred **"In Person"**
or **"In Absentia"** (Please tick as appropriate)

| | |
|---|---|
| In Person | |
| In Absentia | |

(5) Present Address:- ...........................................................
...........................................................

(6) Telephone No:- ..................E-mail...........................
7) Postal Address:- ...........................................................
...........................................................


**(8) Particulars of Payment made:- (Payment Receipt Attached)**
**Date of Payment ....................**

| Fees | Under Graduate | Post Graduate |
|---|---|---|
| Supplication Fee | 500.00 | 500.00 |
| Certificate Fee | 500.00 | 500.00 |
| Gown Fee | 500.00 | 1000.00 |


(சி-2803)

I hereby certify that the above information are correct and true to the best of my knowledge.

...........................................
**Date: ..........................** **Signature of Applicant**


யாழ்.கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலய பரிசளிப்புதின நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (படங்கள்:கரணவாய் செய்தியாளர்)



வடமராட்சி கிழக்கு மாமுனை அ.த.க. பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட வரவேற்பு வளைவு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வாக மாதமொரு நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது. இந்த வகையில் ஒக்டோபர் மாதத்திற்குரிய தேசிய வாசிப்பு மாத நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது...



யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட மீன்பிடி விஞ்ஞானத்துறை மாணவர் ஒன்றியத்தின் முன்னேற்றகரமான வெளிப்பாடாக அண்மையில் தொழில்நுட்பவியல் கல்லூரி மைதானத்தில் கிரிக்கெட் சுற்றுப் போட்டி (2015), மீன்பிடித் துறை விஞ்ஞானத்துறை மாணவர் ஒன்றியத்தின் போசகர் பேராசிரியர் திருமதி சிவசாந்தினி குகநாதன் மற்றும் பெரும் பொருளாளர் தவரஞ்சித் தலைமையில் மீன்பிடி மாணவர் ஒன்றியத்தின் சிறந்த ஒழுங்கமைப்பில் நிறைவு பெற்றது.







வடமராட்சி கரவெட்டி குழந்தையேசு முன்பள்ளியின் வருடாந்த கற்றல், கற்பித்தல் கண்காட்சி அண்மையில் அதிபர் அருட் சகோதரி எம்.வில்மா தலைமையில் நடைபெற்ற போது...






அண்மையில் பெய்த மழை காரணமாக வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருந்த மக்களுக்கு வூப்பற்றால் ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலயத்தினரின் நிதி உதவியிலிருந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் முதற்கட்டமாக 200 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்ட போது...

# நல்லாட்சி அரசின் பட்ஜெட் மு

## யாழ். வைத்தியசாலையின் வசதிகள் மேலும் அதிகரிப்பு

(தொடர்ச்சி...)

**சுகாதாரம் - நவீன சுகாதாரப் பராமரிப்பு**

சுகாதாரத் துறையில் முதலீடு செய்ய வேண்டிய தேவை காணப்படுவதனை இந்த அரசாங்கம் முழுமையாக உணர்ந்துள்ளது. எமது நாட்டின் பிரஜைகளுக்கு இலவச சுகாதார சேவையினை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். இந்தவகையில் எமது உபாயம் பன்முகப்படுத்தப்பட்டு இருப்பதுடன் மனித வள அபிவிருத்தி, மென் மற்றும் வன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு முதலீடுகள் மேற்கொள்ளப்படும்.

**ஆயிரம் சிறுநீரக சிகிச்சை நிலையங்கள்**

இந்நாட்டில் காணப்படும அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் தொடர்பான வாதப் பிரதிவாதங்களும் கலந்துரையாடல்களும் இப்பாராளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளன. எனவே அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் காணப்படும் பிரதேசங்களில் ஆயிரம் சிறுநீரக சிகிச்சை நிலையங்களை உடனடியாக தாபிப்பதற்கு ரூபா 6 ஆயிரத் 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

மின்னோயாவில் சிறுநீரக நோய்க்கான விசேட வைத்தியசாலை ஒன்றினை நிறுவுவதற்கும் அதற்காக ரூபா 2 ஆயிரம் மில்லயனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

**நல்லூரில் புற்றுநோய் வைத்தியசாலை**

நல்லூர், கண்டி மற்றும் மாத்தறை ஆகிய பிரதேசங்களில் மூன்று புற்றுநோய் வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 3 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சிறந்த சுகாதாரப் பராமரிப்பினை மேம்படுத்துவதற்கு அநுராதபுரம், குருநாகல் மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளை உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளுடன் தரமுயர்த்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 3 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

நாட்டில் சுகாதார வசதிகளை விரிவாக்கும் நோக்குடனும், அவசர தேவைகளின் போது குறுகிய நேரத்தில் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதனை மேம்படுத்துவதற்கும் நடமாடும் வைத்தியசாலை எண்ணக்கரு உருவாக்கப்படும். இதற்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்படும்.

சிறுவர் மற்றும் வயோதிபர்களை தாக்குகின்ற தொற்றாத நோய்களின் அதிகரித்து வரும் சவாலை எதிர்கொள்வதற்கு அடுத்த 3 வருடங்களின் போது அரசாங்கம் நோயியல், அவசர சிகிச்சை, முதியோர் மருத்துவம், குழந்தை மருத்துவம் போன்ற விசேட துறைகளில் வைத்தியர்களை பயிற்றுவிக்கவும் வயோதிபர்களை பராமரிக்கும் தாதிமார் மற்றும் துணை மருத்துவ அலுவலர்களுக்கான பயிற்சி என்பவற்றுக்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

நாடுமுழுவதிலும் பல்வேறுதள வைத்தியசாலைகளும் பிரதேச வைத்தியசாலைகளும் காணப்படுகின்றன. இவ்வைத்தியசாலைகளில் கட்டில் வசதி, பரிசோதன்ன உபகரணாங்கள் மற்றும் ஏனைய வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றன. இவ்வாறான வைத்தியசாலைகளில் முறையான வதிவிட வசதிகள் காணப்படாமையினால் வைத்தியர்களை தொடர்ந்து வைத்திருப்பது சிரம மானதாகும். எனவே, கிராமியப் பிரதேசங்களிலுள்ள வைத்தியர்கள் மற்றும் ஏனைய மருத்துவ அலுவலர்களின் வதிவிட தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு 2 வருடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். தனியார் அரசாங்க பங்களிப்பினை ஊக்குவிப்பதுடன் இவ்வாறான வசதிகளை நிர்மாணித்து பராமரிக்கின்ற தனியார் துறையினருக்கு அரசாங்கம் வாடகையினைச் செலுத்தும்.

அடுத்த இரண்டு வருடங்களுக்குள் மூன்றாம் நிலை நலன்புரி வைத்தியசாலைகளுடன் இணைந்ததாக சகல் வசதிகளும் கொண்ட பத்து மாவட்ட பக்கவாத நிலையங்களை நிர்மாணிப்பதற்கு முன்மொழிவதுடன் வைத்தியசாலைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை சேவைகளை விரிவாக்குவதற்கும் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 5 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

சுகாதாரத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து நீரிழிவு நோய், டெங்கு, அடையாளங் காணப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் என்பவற்றுக்கான ஆராய்ச்சி ஒத்துழைப்பினை வழங்குவதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை புதுப்பிக்கப்படுவதுடன் தனியார் துறையுடன் போட்டியிடும் வகையில் விரிவாக்கப்படவுள்ளது. அதற்காக ரூபா ஆயிரத்து 500 மில்லியனை ஒதுக்கீடு செயவதற்கு நான் முன்மொழிகின்றேன். அதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் தகைமை பெற்ற தாதிமாரை வழங்குவதற்கு ஜயவர்தனபுர வைத்தியசாலையுடன் இணைந்த தாதிமார் பாடசாலை வருடமொன்றுக்கு 2 ஆயிரம் தாதிமாருக்கு பயிற்சி வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்காக ரூபா 2 ஆயிரத்து 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழி கின்றேன.



**தபால் சேவைகள்**

மின்னஞ்சல், இணையத்தள பாவனையின் காரணமாக தபால் சேவையானது உலகளாவிய ரீதியில் குறிப்பிடத்தக்களவு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகன்றது. இன்று எமது தபால சேவை கூட அவ்வாறான சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்தவகையில், அவ்வாறான சவால்களை எதிர்கொள்வதற்கு தபால் சேவையினை கூரியர் சேவைகளை வழங்கும் வியாபாரமாக மாற்றுவதற்கு நான் முன்மொழிகின்றேன. மேலும் தமது சேவைகளை இழந்துள்ள உப தபாலகங்கள் அவற்றினது சேவைகளை உறுதிப்படுத்துவதற்கு நிதி ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். வங்கிகளின் சார்பில் சேமிப்புகளை சேகரிக்கின்ற பணியில் ஈடுபடுவதற்கும் அவற்றினை இலாபம் தரக்கூடிய நிறுவனங்களாக மாற்றுவதற்கான மேலதிக வருமானத்தினை பெறக்கூடிய சேவைகளை வழங்குமாறும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு**

கிராம மட்டத்தில் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கினை மேம்படுத்தும் வகையில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபருடன் கலந்தாலோ சித்து தற்பொழுது காணப்படும் 428 பொலிஸ நிலையங்களை 600 பொலிஸ் நிலையங்களாக அதிகரிப்பதற்கு நான் முன்வருகின்றேன். இதற்காக மேலதிகமாக ரூபா ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

மிக துயரமான சூழ்நிலையில் எமது பொலிஸ் அலுவலரகள் பணியாற்றி வருகின்றனர். அவசர நிலைமைகளின் போது உடனடியாக செயற்படுவதுடன் எமது மக்களுக்கு தேவையான ஏனைய பல்வேறு தேவைகளையும் அவர்கள் வழங்குகின்றனர். அவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நவீன வாகனப் போக்குவரத்து முகாமைத்துவ முறைமை உள்ளடங்கலாக முக்கியமான துறைகளில் தொடரான பயிற்சி வழங்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதனால் நாட்டிலுள்ள தேசிய பொலிஸ் பயிற்சிக் கல்லூரியினை வலுப்படுத்துவதற்கும் அதற்காக ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழகின்றேன்.

தொலைத்தொடர்பு வலையமைப்பு உருவாக்கமானது அவசரத் தேவைகளின் போது பொலிஸ் உடனடியாக செயற்படுவதற்கும் அரசாங்க நிறுவனாங்கள் மற்றும் மக்களுக்கிடையில் தொடர்பாடலினை அதிகரிப்பதற்கும் இது அவசியமான தாகும். இம்முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்கின்றேன்.

பொலிஸாரினால் வழங்கப்படும் சேவைகளை எமது அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது என்ற வகையில் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் பொலிஸ் சேவையில் காணப்படும் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக 50 சதவீதமான நிலுவைக்கொடுப்பனவுகளுக்காக ரூபா 3 ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மேலும், சிறந்த நிதி நடைமுறைகளை ஏற்படுத்தும் வகையில் அனைத்து பொலிஸ்நிலையங்களும்தனியான செலவின நிலையமொன்றினை கொண்டிருக்கும்.

**அரச உடைமை தொழில் முயற்சிகள்**

அரச உடைமை தொழில் முயற்சிகள் நாட்டின் முக்கிய துறைகளான மின்சாரம, எரிபொருள், துறைமுகங்கள மற்றும் விமான நிலையம், விமான சேவைகள் மற்றும் நீர் வழங்கல ஆகியவற்றில் தனி உரிமையாகவோ அல்லது ஒரு குறிப்பிடும் படியான கட்டுப்பாட்டையோ கொண்டுள்ளதன் காரணமாக அரச பொருளாதார உபாயங்களில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கினைக் கொண்டுள்ளன. வருவாயை அதிகரிக்கும் வழியான எந்த ஒரு அரச தொழில் முயற்சியும் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது என அரசாங்கம் மீள வலியுறுத்துகின்றது. இதற்கு மாற்றமாக அரச தொழில முயற்சிகளை உறுதிப்படுத்தவும் மற்றும் சுதந்திரமாக இயங்கக்கூடிய வகையிலான உபாயமான அணுகுமுறைகளை பின்பற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது.

நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தினையும் பங்குச்சந்தைக்கு கொண்டு வரக்கூடிய வகையில் ஒரு விசேட நோக்கத்துக்கான நிறுவனம் உருவாக்கப்படும. நான் வலியுறுத்துவது என்னவென்றால் இம் மின் நிலையத்தின் உரிமையில் எவ்வித மாற்றமும் ஏற்பட மாட்டாது. ஆனால் இலங்கை மின்சார சபையின் திரவத்தன்மையானது மேலும் மேம்படுத்தப்படும். அதன் மூலம் அதனது நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்யவும் முடியும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது ஏனைய இரண்டு தனியார் தாபனங்களினதும் ஒத்துழைப்புடன் தற்போது குறை பயன்பாட்டில் உள்ள திருகோணமலை எண் ணெய் தாங்கி பண்ணையை முகாமை செய்வதற்கு ஒரு கம்பனி உருவாக்கப்படும். இவ்வசதியானது பிணைக்கப்பட்ட சுங்க களஞ்சியங்களாக செயற்படுத்தப்படும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அரச தொழில் முயற்சிகள் இயக்குநர் சபை அங்கத்தவர்கள் மற்றும் தலைவர்கள் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வரையறுக்கப்படும். இது தொடர்பில் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மீறப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் 2016 ஜனவரி முதலாம் திகதி திறைசேரியினால் வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள் கட்டாயம் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**விமான சேவைத்துறை**

அரசாங்கமானது சகாய கொள்கையைப் பின்பற்றி எவ்வித கட்டுப்பாடுகளுமற்ற விமானப போக்குவரத்து சேவைக்கான திறந்த ஆகாயக் கொள்கையை முன்னி றுத்துகின்றது. இத சேவைகள் இலங் மாகக் கொள்ளும றேன்.

உள்ளூர் விமா டுத்தும் முகமாக திக ஆகிய இடங்களில் நிலையங்களை அ யாக உருவாக்கப்

ஆபிரிக்காவுக் இடையில் குறிப்பி குவரத்து இடம்பெறு வருட காலத்தில் வளர்ச்சியடையும். மேம்படுத்தல் பல சேவைகளுடன் இ கிழக்கில் இருந்த போது இலங்கை வகையில் அவர்க யங்களை உருவா கின்றேன்.

உள்ளூர் சுற்று தும் நோக்கில், உ களை பயன்படுத்த சரக்குகள் மற்றும் கட்டணம் மற்றும் இருந்து விலக்களி அவர்கள் வருடா அனுமதிப்பத்திரக் வேண்டும்.

2016 ஆம் ஆ திகதியிலிருந்து வ மேலதிக சேவைக தினால் அதிகரிப்ப

**ஸ்ரீலங்க**


எமிரேட்ஸ் இட சேவையின் முகா கையேற்கப்பட்ட பி முறையில் முகாமை தற்போதைய கட யன்களாக காண வீதம் கடந்த ஆட்சி களில் பெற்றுக் பிரதானமாக ஊழ கீழ்மட்டத்திலான ஏற்பட்டதாகும். இ களுக்கு செய்யும் களை தரக்குறை இக்கடன்களின் துக்கு 25 சகல வச லைக்கழகங்கள், கூடிய வைத்திய ஆயிரம் புதிய வீ யீட்டம் செய்திருக் ஸ்ரீலங்கன் விமா செய்யும் முறைகள் பெறுகின்றது.

ஸ்ரீலங்கன் வி மைப்பு செய்து உள்ளூர் மற்றும் கொண்டு முகா மான செயல் இடங் சேவையாக மீள் இ

ஸ்ரீலங்கன் வி மான அரசியல் தலை நான் இப் பாராளு கின்றேன். இந்நிறு நிகரமாக இலாபம் தியத்தில முன்மா சேவையாக மாற்ற மறுசீரமைப்பு நட பணிப்புடன் செய பொறுப்புக்களைய வேற்றும்.

சரக்குகள் மற் ள்கை மற்றும் உ

# முன்மொழிவுகள்



...ுகின்றது. இதன் மூலம் சர்வதேச விமான ...வகள் இலங்கையை ஒரு விருப்புத்தள ...் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின் ...ா.

...ள்ளூர் விமான சேவைகளை உறுதிப்ப ...ம் முகமாக திகன, பதுளை மற்றும் புத்தளம் ...ப இடங்களில் மூன்று உள்ளூர் விமான ...லயங்களை அரச தனியார் பங்குடைமை ... உருவாக்கப்படும்.

...ஆபிரிக்காவுக்கும் கிழக்காசியாவுக்கும் ...யில் குறிப்பிடும்படியான விமானப் போக் ...த்து இடம்பெறுகின்றது. இது இன்னும் 10 ... காலத்தில் குறிப்பிடும்படியான அளவில் ...ச்சியடையும். ஆகவே இலங்கை சுற்றுலா ...படுத்தல் பணியகம் சர்வதேச விமான ...வகளுடன் இணைந்து இப்பிரயாணிகள் ...கில் இருந்து மேற்கிற்கு பயணிக்கும் ...ு இலங்கையில் தரித்து செல்லக்கூடிய ...கயில் அவர்களைக் கவர்வதற்கான உபா ...ளை உருவாக்குமாறு நான் முன்மொழி ...றேன்.

...ள்ளூர் சுற்றுலாத்துறையை மேம்படுத் ...நோக்கில், உள்ளூர் விமான நிலையங் ...ா பயன்படுத்தும் விமான சேவைகளுக்கு ...கள் மற்றும் பிரயாணிகள் கையாள்கை ...ணம் மற்றும் ஏனைய கட்டணங்களில் ...ந்து விலக்களிக்க முன்மொழிகின்றேன். ...கள் வருடாந்தம் ரூபா 1.5 மில்லியன் ... மதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்துதல் ...ண்டும்.

...016 ஆம் ஆண்டின் ஜனவரி முதலாம் ...யிலிருந்து வர்த்தக விமானங்கள் மீதான ...திக சேவைகள் அறவீடுகளை 20 சதவீதத் ...ல் அதிகரிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

### ஸ்ரீலங்கன் விமான சேவை

...மிரேட்ஸ் இடமிருந்து ஸ்ரீலங்கன் விமான ...வயின் முகாமைத்துவமானது மீண்டும் ...யேற்கப்பட்ட பின்பு அது மிகவும் மோசமான ...றயில் முகாமை செய்யப்பட்டுள்ளது. அதன ...ாதைய கடன்களானது ரூபா 158 பில்லி ...ளாக காணப்படுகின்றது. இதில் 72 சத ... கடந்த ஆட்சியில் இறுதி மூன்று ஆண்டு ...ல் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். இது ...னமாக ஊழல் குடும்ப ஆதிக்கம் மற்றும் ...ட்டத்திலான முகாமை என்பவற்றினால் ...ட்டதாகும். இது நாட்டின் வரி செலுத்துநர் ...க்கு செய்யும் அநீதியாகும். மற்றும் அவர் ...ள தரக்குறைவாக கருதுவதுமாகும். ...டன்களின் மூலம் 45 ஆயிரம் பேருந் ... 25 சகல வசதிகளையும் கொண்ட பல்க ...க்கழகங்கள், 40 சகல வசதிகளுடன் ...ப வைத்தியசாலைகள் மற்றும் 48 ...ரம் புதிய வீடுகளைக் கட்டுவதற்கு நிதி ...ம் செய்திருக்கலாம். துரதிர்ஷ்டவசமாக ...ங்கன் விமான சேவையின் மீளெழுச்சி ...ும் முறைகள் மிக மந்தகதியிலே இடம் ...கின்றது.

...நீலங்கன் விமான சேவையை மறுசீர ...ப்பு செய்து தொழில்வன்மை கொண்ட ...ளூர் மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் ...ண்டு முகாமை செய்யப்பட்டு இலாபகர ... செயல் இடங்களுடன் பிராந்திய விமான ...வயாக மீள் இணைக்கப்படும்.

...நீலங்கன் விமான சேவையில் எவ்வித ... அரசியல் தலையீடுகளும் இருக்காதென்று ... இப் பாராளுமன்றத்திற்கு உறுதியளிக் ...றேன். இந்நிறுவனத்தை நாங்கள் வெற் ...மாக இலாபம் உழைக்கும் மற்றும் பிராந் ...தில முன்மாதிரியான தேசிய விமான ...வயாக மாற்றியமைப்போம். அரசாங்கம் ...ீரமைப்பு நடவடிக்கைகளில் முழு அர்ப் ...ிப்புடன் செயற்படுவதோடு அனைத்து ...ுப்புக்களையும் இதயசுத்தியோடு நிறை ...றும்.

...ரக்குகள் மற்றும் பிரயாணிகள் கையா ...க மற்றும் உணவு வழங்கல் செயற்பாடுகள் வெவ்வேறாக கம்பனிகளாக இயக்கப் பெற்று அனைத்து விமான சேவைகளுக்கும் சேவைகளை வழங்கும்.

### மிஹின் லங்கா

மிஹின் லங்கா விமான சேவையானது கடந்த ஆட்சியாளர்களின் இன்னுமொரு நினைவுச் சின்னமாகும். மேலும் அது அரச திறைசேரியை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் ஏற்கனவே மீள்கட்டமைப்பு திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். மிஹின் லங்காவானது சுருக்கற்ற குறை கட்டண விமான சேவையாக நிலைபடுத்தப்படும். மிஹின விமான சேவையானது பிரதானமாக தனது தேவைகளை உள்ளூர் வழிகளில் மேற்கொள்வதோடு தெரிவு செய்யப்பட்ட சர்வதேச வழிகளுக்கு மாத்திரம் தனது செயற்பாட்டை மட்டுப்படுத்திக கொள்ளும்.

### மத்தள விமான நிலையம்

மத்தள விமான் நிலையமானது கடந்த அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அநாவசிய முயற்சியாகும். இவ் விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக பெற்றுக்கொண்ட கடனின் காரணமாக நாடானது கடன் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மத்தள விமான நிலையத்தில் அரச, தனியார் பங்குடைமையின் கீழ் மீளெழுச்சி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதன் கீழ் விமான நிலையமானது விமான ஓட்டுநர் பயிற்சி, விமான சரக்கு களஞ்சியம் மற்றும் சரக்குகள் இடம் நகர்த்தல் சேவைகள் என்பவற்றுக்கு பயன்படுத் தப்படும்.

மத்தள விமான நிலையத்தை விமானச் சரக்குகள் கையாள்கை மத்திய நிலையமாக பயன்படுத்துவதற்கு நான முன்மொழிகின்றேன்.

இந்நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக ஒரு கி.கிராமுக்கு 4 சத ஐ.அ. டொலர்களை நிலையான கட்டண மாக அறவிடுவதற்கு முன் மொழிகின்றேன்.

மத்தள விமான நிலையத்தில் தனியார்துறையினர் விமான ஓட்டுநர் பயிற்சிக் கல்லூரி மற்றும் விமான பராமரிப்பு மற்றும் பங்குபார்த்தல் வசதிகளை தனியார் துறையினர் உருவாக்குவதை ஊக்குவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

### அரச நிதி

அனைத்து அரச கொள்வனவுகள்தொடர்பாகவும் கடுமையான ஒழுங்கு விதிகள் அமுல்படுத்தப்படும். பிரதமரினால் இச்சபையில் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தின்படி மத்திய பெறுகைகள் செயலகம் உருவாக்கப்படும். இது அனைத்து கேள்வி மனு அளிப்புக்களையும் மேற்பார்வை செய்வதோடு குறிப்பிட்ட பெறுமதிக்கு மேலான அனைத்து கொள்வனவுகளையும் கையாளும்.

கடந்த சில வருடங்களாக பல கருத்திட்டங்கள் வெளிபபடையான மற்றும் திறந்த போட்டி அடிப்படையிலான பெறுகை செயன்முறைக்கு மாற்றமாக அழைக்கப்படாத முன்மொழிவுகளாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலை காரணமாக அரசாங்கமானது சில கருத்திட்டங்களுக்கு அதிகூடிய கட்டணங்களை செலுத்த வேண்டி ஏற்பட்டது. அரசாங்க விலைமனுக்களுக்கு விண்ணப்பிப்பது தொடர்பாக தனியார் கம்பனிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை அறிவூட்டுவதற்காக ஒரு குழு அமைக்கப்படும்.

வரவு செலவுத்திட்ட அமுல்படுத்தலானது மேம்படுத்தப்படல் வேண்டும். 2016 ஆம ஆண்டு ஜனவரியில் இருந்து அனைத்து அமைச்சுக்களும் வரவு செலவுத்திட்ட அமுலாக்கலை கண் காணிக்கும் படி வேண்டிக் கொள்வதோடு ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக எவ்வித அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளப்படாது என்பதை உறுதி செய்து ஒதுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ரூபாவில்இருந்து மக்களுக்கு அதிகபட்ச நன்மையை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் உத்தரவாத வரையறைகளை நடைமுறையிலுள்ள 7 சத வீத மொ.உ. உற்பத்தியினை 10 சதவீமதாக அதிகரிப்பதற்கும், 50 சதவீதத்திற்கு குறைவான அரசாங்கப் பங்குடைமையினைக் கொண்ட அரசாங்க தனியார் பங்குடைமைகளுக்கு உத்தர வாதங்களை வழங்குவதற்கு முடியுமாக இருக்கும். கட்டண அடிப்படையில்திறைசேரி உத்தரவாதங்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் இதற்கான ஒழுங்குவிதிகள் விநியோகிக்கப்படும்.

### திறைசேரி செயற்பாடுகளை மேம்படுத்தல்

நாட்டின் வருமானத்தினை அதிகரிப்பதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். சுங்கம, கலால், உள்நாட்டு இறை வரி மற்றும் விலைமதிப்பு அனைத்து வருமானத்துடன் தொடர்பு விடயங்களையும் பரிசீலனை செய்வதற்காக திறைசேரியில் வருமான வினைத்திறன் மற்றும் பரிசீலனை அலகொன்றை ஸ்தாபிப்போம்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது, தற்போதுள்ள கட்டத்தில் காணப்படும். இப் பற்றாக்குறை காரணமாக தனது நடவடிக்கைகளை விரிவாக்கி செயற்படுவதால் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளது. அதனை நிவர்த்தி செய்யுமுகமாக இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம், தபால் திணைக்களம் மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருவதற்காக ஓர் நவீனமயமான கட்டம்திருப்போலி சந்தையில் நிர்மாணிக்கப்படும். இந்நோக்கத்துக்காக ரூபா 2 ஆயிரம் மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் படி அரச நிதி தொடர்பான பூரண அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உரியதாகும். பல அரச திரண்ட நிதிக்கு வெளியே அமைச்சர்கள் திணைக்களங்கள்மற்றும்அரச தொழில முயற்சிகள் பல நியதிச் சட்டமல்லா நிதிகளை உருவாக்கி அவை தனிப்பட்ட நிறுவனங்களில் முகாமை செய்யப்படுவதோடு, அவற்றின் கொடுப்பனவுகள் மற்றும் பெறுவனவுகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

அனைத்து அரச நிதிகளும் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்பதை ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள *நடபடி* முறைகளின் கீழ் உறுதிப்படுத்துமுகமாக அனைத்து நியதிச் சட்டமல்லா நிதிகளையும் மீளாய்வு செய்வதற்கு முன்மொழிவதோடு, இத்தகைய நிதிகளில் மொத்தமாக ரூபா 80 பில்லியன்கள் காணப்படுகின்றன. இவ்வாறான மீளாய்வின் மூலம் நடைமுறைச் சூழ்நிலையில் இத்தகைய நிதிகளின் இருப்பு அவசியமா என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும், அவ்வாறான நிதிகளின் இருப்பானது இன்றியமையாதது எனக் காணப்படின் அந்நிதிகள் தற்போதைய அவசியம் பிரதிபலிக்கும் வகையில் நியதிச் சட்டம் மாற்றப்படும். இதன் மூலம், அனைத்து நிதிகளினதும் பெறுவனவுகள மற்றும் கொடுப்பனவுகள் பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்.

2014 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பல வருடங்களாக பல்வகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும், சேவைகளை பெற்றுக் கொண்டதற்காகவும் செலுத்தப்பட வேணடிய மீதிகள் மற்றும் தீர்க்கப்படாத முன்வைப்புக்கள். இவைகள் 2011 ஆம் ஆண்டு போன்ற முன்னைய காலப் பகுதியில் இருந்து அரசாங்க நிறுவனங்களினால் சிறிய அளவிலான நிர்மாணங்களையும் மற்றும் பாரிய அளவிலான நிர்மாணங்களையும் கொண்ட உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய செலுத்தப்பட பன்முகப்படுத்தப்பட வேண்டிய மதிகளின் உண்மைத் தன்மையை உறுதி செய்யுமுகமாக ஓய்வுபெற்ற அமைச்சுக்களுக்கான செயலாளர்களைக் கொண்டகுழுவொன்றை உருவாக்க அதன் மூலம் நிலுவையாகவுள்ள ஒப்பந்த அர்ப்பணிப்புக்கள் தொடர்பான பரிந்துரைகளை பெற்றுக் கொடுப்பதற்கு நியமிக்க முன்மொழிகின்றேன்.

பல காரணங்களுக்காக வெளிநாட்டு நிதி களின் பயன்பாடானது மிகவும் பின் தள்ளப்பட்டுள் ளது. செய்முறை பூர்தகி செயப்படுவதற்கு 5-6 மாதங்கள் எடுக்கின்றன. இப் பின்னணியில் நிதியமைச்சுக்கு மேலும்சட்ட ரீதியான உறுதிப்பாட்டை பெறறுக் கொடுக்கும்முகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து மூன்று அதிகாரிகளை நிதி அமைச்சுக்கு விடுவிக்குமாறும் சட்டமா அதிபரிடம் கௌரவமாக்க் கேட்டுக கொள்கின்றேன்.

திறைசேரியின் நடவடிக்கைகள் தற்போது விரிவாக்கம் அடைந்துள்ளது. அதனால், வினைத்திறனான பங்களிப்புக்களை செய்வதற்கு விசேட திணைக களங்கள் அவசியமாகின்றது. ஆகவே, நாங்கள் திறைசேரியில் மூலதனச் சந்தை நடவடிக்கைகளை வழி நடத்துவதற்கும், தனியார்துறை மற்றும் அரசாங்கத்திற்கிடையில் தொடர்பினை உருவாக்குவதற்காகவும் இரண்டு திணைக்களங்கள் உருவாக்கப்படும்.

எமது நாட்டிற்கு பொருத்தமான இட முகாமைத்துவக் கொள்கை ஒன்று எம்மிடம் இல்லை. ஆதலால், பொதுத் துறை சேவை வழங்கலானது. பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அரசாங்க காரியாலயங்களில் சிறப்பான இட முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் முகமாக இட முகாமைத்துவ அலகினை உருவாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்...)

## நல்லூரில் புதிய புற்றுநோய் வைத்தியசாலை

# செந்தூரனின் மரணம் அரசாங்கத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்புமா?

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.கேள்வி

யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரியின் உயர்தர வகுப்பு கலைப்பிரிவு மாணவன் செந்தூரன், இந்நாட்டின் ஜனாதிபதிக்கு 'அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி', உருக்கமான கடிதம் ஒன்றை எழுதி வைத்து விட்டு தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். அவரது செயல் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள விரக்திக்கும் உளவியல் தாக்கத்திற்கும் ஒரு உதாரணமாகப் பார்க்கப்படவேண்டும். மேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டியதும் அரசாங்கத்தின் கடமையாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் கைதிகளின் விடுதலையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் தமது வாக்குறுதிகளையும் உறுதிமொழியையும் நிறைவேற்றாத காரணத்தால் விரக்தியுற்ற செந்தூரன் தனது விரக்தியின் உச்சகட்டத்தை வெளிப்படுத்தும் விதமாக தனது இன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்ற செய்தி கேட்டவுடன் மிகவும் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்தேன். எமது மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இத்தகைய முடிவுகளை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற்று, எமது பிரதேசத்தை மாணவர்கள், இளைஞர்கள் தமது கல்வி மற்றும் ஆளுமையால் அபிவிருத்தி செய்து ஏனைய நாடுகளுடன் போட்டியிடக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தனது வாக்குறுதிகளையும் உறுதி மொழிகளையும் தானே மீறும் செயலை, நல்லாட்சி என்று கூறிக்கொள்கிறது இந்த அரசாங் கம். அத்தகைய அரசாங்கத்திற்கு எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை அற்ற ஆதரவினை வழங்கியிருப்பதையிட்டும் நாம் வெட்கித் தலைகுனியும் நிலை ஏற்பட்டுள்ளது.


அரசாங்கம் தனது காலக்கடத்தல் நாடகத்தை இனியும் அரங்கேற்றாமல், அரசியல் கைதிகளின் விடுதலையை அரசியல் ரீதியாக அணுகி அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிரபராதிகளாக விடுவிக்கப்பட்டவர்கள் இதுவரை காலமும் அனுபவித்த சிறைவாசத்திற்கு இந்த அரசாங் கம் நட்டஈடு வழங்க முன்வரவேண்டும். தமது வாதத்திறமையால் அரசியல் கைதிகளை நிரபராதிகள் என்று நிரூபித்து விடுவித்த சட்டத்தரணிகள் அவர்களுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக் கொடுப்பதற்கும் உதவ வேண்டும். இதன் மூலமே வருங்காலத்தில் எழுந்தமானமான கைதுகள் தவிர்க்கப்படும். சட்டவல்லுநர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும் என்று தமிழ் மக்களின் சார்பில் அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கிறேன்.

செந்தூரனின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு, அஞ்சலிகளையும் செலுத்துகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




## இந்தியாவிலிருந்து வருகை தந்த நிபுணர் குழுவினரால் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை கால் பொருத்தல் 250இற்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்தின ஏற்பாட்டில் ஒளிரும் வாழ்வு அமைப்பின் துணையுடன் முல்லைத்தீவு றோட்டறிக்கழகத்தின் ஒழுங்கமைப்பில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த விசேட நிபுணர் குழுவின் மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால் பொருத்துவதற்கான செயற்பாடுகள கடந்த 24ஆம் திகதி இடமபெற்றது. அதன் தொடர்ச்சியாக மறுநாள் ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களை ஒன்றிணைத்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் இடமபெற்றன. இந்நிகழ்வுகளில் சுமார் 250 இற்கும் மேற்பட்டவர்கள் பங்கு பற்றி பயன் பெற்றிருநதமை குறிப்பிடத்தக்கதாகும். (2-281)

## தலைமன்னாரில் கைதான ஆறு மீனவர்களுக்கு விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)



இலங்கை கடற்பரப்பினுள அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக கூறி கைது செய்யப்பட்ட ஆறு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

படகு ஒன்றில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட ஆறு இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடந்த 25ஆம்திகதி புதன் கிழமை கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் குறித்த ஆறு இந்திய மீனவர்களிடமும் விசாரணைகளை மேற் கொண்ட நிலையில், மீனவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

அதனைத்தொடர்ந்து ஆறு மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (2-281)

## 12 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மூன்று வீதிகளின் புனரமைப்பு ஆரம்பம்



(பனிக்கன்குளம்)

மடு பண்டிவிரிச்சான் பிரதான வீதி, புதுக்குடியிருப்பு தேவிபுரம் வீதி,வவுனியா வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட கூழாங்குளம் வீதி ஆகியவற்றுக்கான வீதி புனரமைப்பு பணிகளை வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பித்துவைத்தார்.

இதற்கமைய மடு பண்டிவிரிச்சான் வீதியின் 2.5கிலோமீற்றர் வரையான வீதியும் புதுக்குடியிருப்பு தேவிபுரம் வீதியின் 0.5 கிலோமீற்றர் வரையான வீதியும் கூழாங்குளம் வீதியின் 1.5 கிலோமீற்றர் வீதியுமே தலா 4 மில்லியன ரூபா செலவில் புனரமைக்கபபடவுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒதுக்கப்பட்ட 20 மில்லியனுக்கான விசேட வேலைத்திட்டத்தில் மூன்று மாவட்டத்துக்கு வீதி புனரமைப்பு பணிகளை ஆரம்பிததுள்ளதாகவும், ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்துக்கான வேலைத் திட்டம ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரம யாழ்ப்பாணத் துக்கான வேலைத் திட்டம் ஆரம பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (2-281)

## வெள்ள நிவாரணம் வழங்கினார் அமைச்சர்

மன்னார் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சாந்திபுரம், இருதயபுரம், ஜீவபுரம், கிருஷ்ணபுரம் ஆகிய கிராமங்கள் முழுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸவரன் தமது உதவித்திட்டத்தோடு, மன்னார் வாழ்வுதய பணிப்பாளரோடு கலந்துரையாடி, வாழ்வுதயம் ஊடாக கரிட்டாஸ் உதவியை பெற்று மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கிய நிகழ்வு அண்மையில இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை விக்டர் சோசை, மன்னார் மறைமாவட்ட ஆயரின் செயலாளர், மன்னார் பிரதேச செயலக கிராம அலுவலர்களின் நிர்வாக உத்தி யோகத்தர் ராதா பெர்னாண்டோ இணைந்து சுமார் 850 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (2-9-281)

## உணவு உற்பத்தி,பாதுகாப்பு குறித்து ஆராயும் கலந்துரையாடல் மன்னாரில் நடைபெற்றது



தேசிய உணவு உற்பத்தி மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார், மாந்தை மேற்கு, மடு, நானாட்டான், முசலி ஆகிய ஐந்து பிரதேச செயலாளர்கள் பிரிவுகளிலும் உணவு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அதனை பாதுகாத்தல் தொடர்பாகவும்,

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயச் செய்கை, மரக்கறிச் செய்கை, வீட்டுத்தோட்டம் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரித்தல் தொடர்பாகவும், விவசாய செய்கைக்கு விவசாய திணைக்களங்களின ஊடாக உதவிகளை பெற்றுக் கொள்ளுதல், விவசாய தேவைகளுக்கு நீரை பெற்றுக்கொள்வது தொடரபாகவும் ஆராயப்பட்டது.

அத்தோடு, உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் கால்நடைகளின் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் மீன்பிடியை ஊக்குவித்தல் தொடர்பிலும்,

உணவு உற்பத்திகள் தொடர்பில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பிரதேசச் செயலாளர் பிரிவினூடாக ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினிஸ் ராண்டி மேல், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், பிரதேசச் செயலாளர்கள் , திணைக்களத் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(2-281)

# பொது எதிர்க்கட்சிக்கு உரிய இடமின்றேல் சபா பீடத்துக்கு எதிராகச் செயற்படுவோம்

## ரஞ்சித் டி சொய்ஸா எச்சரிக்கை



(கொழும்பு)

**பொது எதிர்க்கட்சியாக செயற்படும் தமது ஜனநாயக உரிமை நாடாளுமன்றில் மீறப்படுமாயின், சபாபீடத்தைக் கருத்தில் கொள்ளாது செயற்படுவோம் என எச்சரிக்கை விடுக்கிறேன் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த ஆதரவு எம்.பியான ரஞ்சித் டி சொய்ஸா நாடாளுமன்றில் தெரிவிதுள்ளார்.**

இதனால், சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. மகிந்த ஆதரவு தரப்பினருக்கும் ஆளுந்தரப்பினருக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த குமாரசிறி சபா பீடத்துக்குத் தலைமைதாங்கிய சந்தர்ப்பத்திலேயே ரஞ்சித் டி சொய்ஸா எம்.பி. இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2016 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றிய ரஞ்சித் டி செய்ஸா,

தான் உரையாற்றுவதற்கு முன்னதாக சபா பீடத்திற்கு தலைமை தாங்கும் உறுப்பினரின் கவனத்துக்கு ஒரு விடயத்தைக் கொண்டு வருவதாக தெரிவித்தார்.

இதன்போது சபா பீடத்துக்குத் தலைமைதாங்கிய ஆனந்த குமாரசிறி எம்.பியிடம், தனக்கு உரையாற்றுவதற்கு எவ்வளவு நேரம் உள்ளது என ரஞ்சித் எம்.பி. கேட்க, 9 நிமிடங்கள் உள்ளது என ஆனந்த குமாரசிறி எம்.பி. கூறினார்.

இதையடுத்து, காலையில் தனக்கு உரையாற்றுவதற்காக 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன என்றும், நண்பகலின் பின்னர் இந்த நேரம் எப்படி 9 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டன என்றும் ரஞ்சத் டி சொய்ஸா எம்.பி. கேள்வி எழுப்பினார்.

உரையாற்றுவதற்கு வழங்கப்பட்ட நேரத்தையே நான் குறிப்பிட்டேன் என்று சபா பீடத்துக்குத் தலைமைதாங்கிய ஆனந்த குமார சிறி எம்.பி. இதற்கு மறுமொழி கூற,

நாடாளுமன்றத்தில் பொது எதிர்க்கட்சியாக செயற்படும் தமக்கு போதியளவு நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.

ஜே.வி.பியின் விஜித ஹேரத்துக்கு 60 நிமிடங்கள் வழங்கப்பட்டன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு 120 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

ஆனால், பொது எதிர்க்கட்சியாகச் செயற்படும் எமக்கு 50 நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இது நாடாளுமன்றத்தில் எமது ஜனநாயக உரிமையை மீறும் செயலாகும்.

நல்லாட்சி எனக்கூறும் அரசு எமது ஜனநாயக உரிமையை வழங்கவில்லை.

இந்த நிலைமை நீடித்தால் சபா பீடத்தைக் கருத்தில்கொள்ளாது செயற்படுவோம் என எச்சரிக்கை விடுக்கின்றேன் என்று கடுந்தொனியில் கூறினார் ரஞ்சித் டி சொயஸா எம்.பி. இதன்போது குறுக்கிட்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் நவீன் திஸாநாயக்க, உங்கள் கட்சியினரால்தான் நேரம் குறைக்கப்பட்டது என்று கூறினார்.

இதையடுத்து, மகிந்த ஆதரவு தரப்பினர் அனைவரும் கூச்சலிட ஆரம்பித்தனர்.

பின்னர், உரையைத் தொடருமாறு ரஞ்சித் டி சொய்ஸாவுக்கு சபா பீடத்துக்குத் தலைமை தாங்கிய ஆனந்த குமாரசிறி எம்.பி. கூறி நிலைமையை ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். (இ-7-10)

# பட்ஜெட்டில் குறைபாடுகள் இருந்தால் அதை சுட்டிக்காட்டுங்கள்-நிதியமைச்சர்

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தில் குறைபாடுகள் இருந்தால் சுட்டிக்காட்டுமாறு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் ரவி கருணாநாயக்க,


2016 ஆம் ஆண்டு தொடக்கம் அனைத்து அரச நிறுவனங்களினதும் செலவுகள் குறித்து முழுமையான கவனம் செலுத்தப்படும்.

அத்துடன் தேவையான இடங்களில் அரசாங்கம் முதலீடுகளை மேற்கொண்டு அதற்கான செலவுகளை வரவு வைப்பதற்கு கணக்குகளில் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் குறைபாடுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள். அதனை திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்ள தயாராக இருககிறேன் என்றும் ரவி கருணா நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# நம்பிக்கையான உறவினருக்கு பதவி வழங்குவதில் தவறில்லை

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



நம்பிக்கையான ஓர் உறவினருக்கு பதவி வழங்குவதில் தவறில்லை என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலோ அல்ல நல்லாட்சியிலோ எவ்வித பிரச்சினையும் கிடையாது.

அமைச்சரவையில் ஜனநாயகம் காணப்படுகின்றது என்பது எல்லோருக்கும் புரிகின்றது.

யாரேனும் பிழை செய்தால் அதனை விமர்சனம் செய்யவும் கேள்வி எழுப்பவும் இன்று எமக்கு சுதந்திரம் காணப்படுகின்றது.

முதல் தடவையாக நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து ஆட்சி செய்கின்றன, இதன் போது சில பிரச்சினைகள் ஏற்படுவது வழமையானதே.

துறைமுக அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக எனது சகோதரரை நியமித்தமை உண்மைதான்.

இந்த நிறுவனம் இலங்கையில் அதிகளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்ற நிறுவனங்களில் ஒன்றாக காணப்படுகின்றது.

எனவே எனக்கு நம்பிக்கையான ஒருவரை அந்தப் பதவியில் அமர்த்த வேண்டும் என்பதற்காக சகோதரருக்கு அந்தப் பதவியை வழங்கினேன் என அர்ஜுன ரணதுங்க சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## ஆணவக் குரங்கு

காட்டு வழியால் புத்தர் போய்க்கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அவரைப் பின் தொடர்ந்து ஒரு குரங்கு சென்று கொண்டிருந்தது.

புத்தர் திரும்பிப் பார்த்தார்.

குரங்கு அப்படியே குதித்து உயர எழும்பி ஒரு கிளையில் போய் உட்கார்ந்தது.

"ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டார் புத்தர்.

"என்னை சாதாரணமாக நினைக்க வேண்டாம். நான் மகா மந்தி. என்னால் முடியாதது ஒன்றுமில்லை. என்ன வேண்டுமானாலும் செய்வேன்" என்றது.

"அப்படியானால் ஒரு பந்தயம் வைத்துக் கொள்ளலாமா?" என்றார்.

"ஓ... வைத்துக் கொள்ளலாம்!" என்றது.

"வேறொன்றுமில்லை. இப்பொழுது நீ மேலே எழும்பி அந்தக் கிளையில் உட்கார்ந்தது போல், அங்கிருந்து தாவி என் உள்ளங்கையில் வந்து உட்கார வேண்டும் அவ்வளவுதான்!" என்றார்.

"அப்படி உட்கார்ந்தால் என்ன பரிசு?" என்றது.

"சொர்க்கத்தில் இருக்கும் மாமன்னன் மரகதச் சக்கரவர்த்தியை என்னுடன் வந்து இருக்கும்படி அழைத்துக் கொள்கிறேன். அந்தச் சமயத்தில் அவருடைய அரியணை அங்கே காலியாகிவிடும். நீ அதில் போய் உட்காரலாம்.

பந்தயத்தில் தோற்று விட்டால் பூமியில் வாழ்ந்து அதன் பின்னர் தான் என்னிடம் வரமுடியும்" என்றார்.

குரங்குக்குத் தாவுவது ஒரு பெரிய காரியமா? "இது எனக்கு சாதாரண விடயம். இப்பொழுதே தாவட்டுமா?" என்றது.

"சரி" என்று சொல்லி உள்ளங்கையை நீட்டினார். அவருடைய கை தாமரை இலை அளவுக்கு விரிந்தது.

குரங்கு தாவுவதற்கு தயாரானது. அதற்கு முன்னர் ஒரு சின்ன யோசனை.

"இந்தக் கிளையிலிருந்து அந்தக் கைக்குத் தாவுவது எனக்கு அற்பமான வேலை. என்னுடைய கௌரவத்திற்கு இது சரியாக இருக்காது. அதனால் இந்தக் கிளையிலிருந்து மேலுலகம் போய் அங்கே ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அங்கிருந்து வரலாம்!" என நினைத்தது.

பின் இதோ பாய்கிறேன் என்று தாவி உயரப் போய்விட்டது. சிறிது நேரத்தில் வானுலகத்திற்கு சென்றது. அங்கே ஐந்து பளிங்குத்தூண்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தது.

குரங்கு நினைத்தது...புத்தரிடம் போய் இந்தப் பளிங்குத் தூண்களை பார்த்தேன் என்று சொன்னால் திகைத்து விடுவார். இந்தத் தூண்களில் ஏதாவது அடையாளம் போட்டுவிட்டுப் போக வேண்டும் என்று நினைத்தது.

உடனே ஒரு தூணில் "ஒரு மகாஞானி வந்துவிட்டுப் போனார்" என்று எழுதியது. எழுதிவிட்டு அப்படியே தாவி புத்தரின் உள்ளங்கையில் வந்து உட்கார்ந்தது!

"பார்த்தீர்களா... வானுலகத்திற்கு போய் அங்கிருக்கும் ஐந்து பளிங்குத் தூண்களைப் பார்த்துவிட்டு அதில் நான் வந்த விபரத்தை எழுதி வைத்து விட்டு வந்திருக்கிறேன்" என்றது.

"அப்படியா?" என்றார் புத்தர்.

"ஆமாம்...சந்தேகமாக இருந்தால் வாருங்கள் அழைத்துப் போய்க் காட்டுகிறேன்!" என்றது குரங்கு.

"அதற்கு அவசியமில்லை... கொஞ்சம் கீழே குனிந்து பார்" என்றார் புத்தர். அங்கே புத்தரின் உள்ளங்கை தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தது. அவருடைய ஒரு விரலில் அது எழுதிய வாசகம் தெரிந்தது!

"அப்படியானால் வானத்தில் நான் பார்த்தது புத்தரின் விரல்களா?" என்று திகைத்தது குரங்கு.

இதைப்புரிந்துகொண்டவுடன் அந்தக்குரங்கின் கர்வம் அழிந்தது!

நம்முடைய மனம் தான் இந்தக்குரங்கு. 'மனம்' என்பதும் 'ஆணவம்' என்பதும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள். மனம் உள்ளவரை ஆணவம் இருக்கும். மனம் அழிந்தால் தான் ஆணவம் அழியும். மனம் அழிய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வது இவ் அர்த்தத்தில்தான்!

ஒருவன் வாய்க்காலைத் தாண்டுகிறேன் என்று பந்தயம் கட்டி... தாண்ட முடியாமல் வாய்க்காலில் விழுந்து காலை உடைத்து கட்டுப் போட்டுக்கொண்டு வந்தான்.

"ஏன் இப்படி?" என்று கேட்டார்கள்.

"நான் பந்தயம் கட்டிய நேரம் சரியில்லை" என்றான்.

"எப்படி?" என்றார்கள்.

"வாய்க்காலில் தண்ணி இருக்கும் நேரமாக பார்த்து பந்தயம் கட்டியிருக்க வேண்டும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஜப்பானிய தமிழ் அறிஞர் நொபோரு கரஷிமா காலமானார்

நொபோரு கரஷிமா ஒரு வரலாற்று அறிஞர். தமிழக வரலாற்றை வித்தியாசமான கோணத்தில் பார்த்து எழுதிய அறிஞர்.



சமூகம் எப்படி இயங்கியது, எப்படி மாறியது என்பது தெரியாமல் அரசியல் வரலாற்றை- ஆட்சி வரலாற்றை- புரிந்துகொள்ள முடியாது என்னும் கொள்கையில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்.

தமிழகத்தின் மன்னர் ஆட்சிகளைப் பேரரசுகளின் ஆட்சிகளாகப் பார்த்து வரலாறு எழுதிய பழைய தலைமுறை வரலாற்று ஆய்வாளர்களிடமிருந்து வேறுபட்டுத தமிழக வரலாற்றைப் பார்த்தவர். இன்றைய தமிழ்த் தேசியத்துக்கு உரம் போடும் செய்திச் சுரங்கமாக அவர் தமிழக வரலாற்றைப் பார்க்கவில்லை.

அன்றைய தமிழ்ச் சமூகத்தின் வாழ்வுமுறையை அறிந்துகொள்ளும் செய்திச் சுரங்கமாகவே அவர் கல்வெட்டுகளைப் பார்த்தார்.

அரசர்களின் போர் வெற்றிகளைப் பறைசாற்றும் சாதனமாக மட்டும் அவற்றை அவர் பார்க்கவில்லை.

கல்வெட்டுகளிலிருந்து அரச வெற்றிகள் பற்றி நாம் கேட்கும் உரத்த குரலை மட்டுமல்லாமல், அவற்றிலிருந்து வரும் முனகல்களையும் கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

இந்த முனகல்களில்தான் சாதாரண மக்களின் குரலைக் கேட்கலாம்.

சீனாவில் தமிழ்க் கல்வெட்டு இருப்பதைக் கண்டு சொன்னவர் கரஷிமா.

அவருடைய ஆய்வு பெரும்பாலும் சோழர் காலத்தைச் சார்ந்தது. ஆனாலும், அது சிங்கநோக்காக சோழருக்கு முந்திய காலத்தையும் பிந்திய காலத்தையும் பார்க்க இன்றியமையாதது.

கரஷிமாவின் விஜயநகர ஆட்சி பற்றிய ஆராய்ச்சியில் இதைக் காணலாம்.

### தமிழ்மீது காதல் கொண்ட கரஷிமா

இவருடைய ஆராய்ச்சியின் தரவுகள் பெரும்பாலும் கல்வெட்டுகளிலிருந்து வருபவை.

தொடர்ந்து கல்வெட்டுகளில் மற்ற ஆய்வாளர்களும் இளம் தலைமுறை ஆய்வாளர்களும் ஈடுபடப் பல தரவுகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார் கரஷிமா.

இவற்றைப் பயன்படுத்தாமல் செய்யும் எந்தத் தமிழக வரலாற்று ஆராய்ச்சியும் மேலோட்டமானதாகவே இருக்கும்.

கரஷிமா தமிழ்க் கலாச்சாரத்தின்மீதும் மக்களின் மீதும் காதல் கொண்டவர்.

தமிழ்க் கலாச்சாரத்தைப் பற்றித் தன்னுடைய ஜப்பானிய மாணவர்களுக்காக ஒரு ஆவணப்படம் எடுத்திருக்கிறார். இந்தப் படம் தமிழ்ப்படுத்தப்பட்டுத் தமழர்களின் பார்வைக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

கரஷிமா உலகப் புகழ்பெற்ற டோக்கியோ பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி ஒய்வு பெற்றவர். அந்தத் துறையில் தென்னிந்திய வரலாற்றைப் படிக்க இடம் தேடித் தந்தவர்.

இந்த ஆராய்ச்சிக்குப் பல ஜப்பானிய மாணவர்களை உருவாக்கியவர், .ஐரோப்பா, அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களில் பெயர்போன தென்னிந்திய ஆய்வாளர்கள் பலர் உண்டு.

அவர்களின் செல்வாக்கு இந்தியாவில் உள்ள வரலாற்று அறிஞர்களிடம் அதிகம், அந்த மேல்நாட்டு அறிஞர்களின் ஆராய்ச்சிப் போககில் கரஷிமாவின் அணுகுமுறையின். தாக்கத்தைக் காணலாம். இந்தத் தாக்கம் தமிழ்நாட்டு வரலாற்று அறிஞர்களிடமும் நேரடியாக ஏற்பட வேண்டும்.

### உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர்

கரஷிமா உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக இருந்தபோது நான் அதன் செயலாளராக இருந்தேன். அப்போது அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன்.

அவர் மனம் செயற்படும் விதம் தெரியும். தஞ்சை மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய பிறகு அடுத்த மாநாட்டை நடத்தக் காலம் தாழ்த்தியதற்கு அவரிடம் வலுவான காரணங்கள் இருந்தது எனக்குத் தெரியும்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் எதிர்காலம் பற்றிச் சில சிந்தனைகள் அவரிடம் இருந்தன.

தமிழ் ஆய்வை இக்காலத் தமிழ் அரசியலிலிருந்து பிரிப்பது அவற்றில் ஒன்று. அதையே அவருடைய வாழ்க்கைச் செய்தியாக நாம் கொள்ளலாம்.

**பேராசிரியர் அண்ணாமலை,**
**சிகாகோ பல்கலைக்கழகம்**

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

*அது உள்ளுகை விளையாட்டு - உங்களுடைய புறத்தன்மையை தனித் தன்மையாக மாற்றும்*

**ஆன்மீகம் 333**

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்... தண்ணீரை மதுவாக மாற்றுவது ஒன்றும் அற்புதமில்லை.

மனிதனைக் கடவுளாக மாற்றுவதே உண்மையான அற்புதம். முன்னதை சிறந்த மந்திர ஜால வித்தைக்காரனாக பி.சி.சர்க்கார் செய்வார். ஆனால் பின்னதைச் செய்ய ஆழமான புரிந்து கொள்ளுதல் தேவை.

இராமகிருஷ்ணர் அடிக்கடி சொல்லும் ஒரு சின்னக் கதை.... இரண்டு சகோதரர்கள் ஒன்றாக வாழ்ந்து வந்தனர்.

மூத்த சகோதரன் வியாபாரத்தைத் தொடர முடிவு செய்தான்! இளையவன் சாதுவாகச் சென்றான். சில வருடங்கள் கழித்து அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்தனர்.

அவர்கள் கடந்த சில வருடங்களில் என்ன சாதித்தனர் என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டனர்.

மூத்த சகோதரன் வெளியுலகில் சாதித்த எல்லா லோகாயதமான விடயங்களையும் பட்டியலிட்டான்.

அவனுடைய வியாபாரத்தைப் பற்றியும் அவன் எவ்வளவு செல்வம் சேர்த்திருக்கிறான் என்பது பற்றியும் விபரித்தான்.



பிறகு அவன் இளைய சகோதரனிடம் அவன் என்ன சாதித்திருக்கிறான் என்று கேட்டான்.

இளையவன் அவனை வெறுமனே ஒரு ஆற்றுக்கு அழைத்துச் சென்று அதை சகஜமாக நடந்து கடந்தான்.

பிறகு பெருமிதத்துடன் அறிவித்தான்.

இதுதான் நான் சாதித்தது. மூத்த சகோதரன் ஒரு படகை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அதில் அவனை மறுகரைக்கு அழைத்துச் சென்று அவனிடம் சொன்னான், என்ன? இரண்டு அணாவில் சாதிக்க வேண்டியதை நீ பல வருடங்களில் சாதித்திருக்கிறாய்!

வெளியுலகில் அதிசயங்கள் புரிய முடிந்தால் ஆன்மீகவாதிகளாகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும் ஆகிவிடலாம் என்று மக்கள் நினைக்கிறார்கள்.

அப்படி அல்ல! புரிந்து கொள்ளுங்கள். ஆன்மீகம் என்பது வெளியுலகில் அதிசயங்கள் புரியும் விளையாட்டல்ல.

மாபெரும் அதிசயம்! புறத்தன்மையை தனித்தன்மையாக மாற்றுவதே மாபெரும் அற்புதம்.


மக்கள் என்னிடம் மீண்டும் மீண்டும் அதிசயங்கள் செய்து காட்டுமாறு கெஞ்சுகிறார்கள்.

நான் அவர்களிடம் சொல்கிறேன். பெயரளவிலான இந்த அதிசயங்களெல்லாம் என் நிலையை அளக்கும் ஒரு அளவுகோல் அல்ல.

ஆனால் அவர்கள் கேட்க விரும்புவதில்லை. வெறுமனே செய்து காட்டுவதற்காக சில எளிய உத்திகளான பொருட்களை வரவழைத்தல் போன்ற ஒன்றிரண்டை செய்தால்கூட மக்கள் என்னிடம் இந்த அதிசயங்களை மந்திர ஜால வித்தையைக் காண்பதற்காக வர ஆரம்பித்து விடுவார்கள். உருமாற்றத் திற்காக அல்ல! அதுதான் என் கவலையே. *(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

# தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளை தமிழகத்தில் கொண்டாடினார் வைகோ



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 61 ஆவது பிறந்த நாளை தமிழகத்தில் வைகோ, திருமாவளவன் உள்ளிட்டோர் கொண்டாடியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் நவம்பர் 26 ஆம் திகதி ஆகும்.

நவம்பர் 27 ஆம் திகதி 'மாவீரர் தினம்' அன்று, மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி பிரபாகரன் உரையாற்றுவது வழக்கம்.

2009இற்குப் பின்னரும் தமிழகம் மற்றும் ஈழத் தமிழர் வாழும் நாடுகளில் பிரபாகரன் பிறந்த நாளும் மாவீரர் நாளும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று முந்தினம் பிரபாகரனின் 61ஆவது பிறந்த நாளையொட்டி சென்னை ராயப்பேட்டையில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் நள்ளிரவு 12 மணிக்கு கொண்டாடியுள்ளனர். ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தொண்டர்களுக்கு அக்கட்சிப் பொதுச்செயலர் வைகோ, சர்க்கரைப் பொங்கல் மற்றும் இனிப்புகள் வழங்கி பிரபாகரனின் பிறந்த நாளை கொண்டாடியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அக்கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பிரபாகரன் பிறந்தநாளை முன்னிட்டு தொண்டர்களுடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார்.(இ-7-10)

## நினைவுச் சொற்பொழிவு

பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தின்26ஆவதுஆண்டு நினைவுக் கூட்டமும் நினைவுச் சொற்பொழிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை இல. 121, ஹம்டன் லேன் வெள்ளவத்தையில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெய்வேந்திரன் ஞாலசீர்த்தி மீநிலங்கோ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தர்மலிங்கம் சிறிபிரகாஷ் நினைவுச் சொற்பொழிவினை வழங்கவுள்ளார்.

கருத்துரைகளை முரளிதரன் மயூரன், டேவிட் சுரேன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-5)

# நீதிமன்ற செயற்பாடுகளில் தலையீடுகள் இல்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**நீதிமன்ற, நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான சுதந்திரமான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பாக காணப்படுவதாகவும் 10 மாத கால தனது ஆட்சியின் போது நீதிமன்ற செயற்பாடுகளில் எந்தவிதமான அரசியல் தலையீட்டினையும் மேற்கொள்ளவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**


உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரும் சர்வதேச நீதிமன்றத்தின் உப தலைவருமான சீ.பி.வீரமந்தரி தனது 50 ஆண்டு கால தொழில்சார் வாழ்வினை பூர்த்தி செய்வதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இன்று இந்நாட்டுக்கு சீ.பி.வீரமந்திரி போன்ற நீதியரசர்கள் அதிகமதிகம் தேவைப்படுவதாகவும் எமது சட்டம் மற்றும் நீதிமன்றத் துறையில் உள்ள அனைவருக்கும் நீதியரசர் வீரமந்திரி சிறந்ததோர் முன்மாதிரியாக உள்ளார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நீதித்துறையில் வருடாந்த இடமாற்றம் தொடர்பாக நிலவும் குறைபாடுகளை தீர்ப்பதற்காக சட்டத்தரணிகள் சங்கம் தலையிட்டு குறித்தொதுக்கப்பட்ட நியமனங்களை தயாரிக்க முடியுமென தான் நம்புவதாக தெரிவித்த ஜனாதிபதி, சட்டத்தரணிகள் நியமனத்தின் போது இனிமேல் ஜனாதிபதிக்கு நெருக்கமான நபர்கள் தெரிவு செய்யப்பட மாட்டார்கள் எனவும், அதற்குத் தேவையான பிரமாணங்களை தயாரிக்கும் பொறுப்பினை சட்டத்தரணிகள் சங்கத்தினால் நிறைவேற்ற முடியுமெனவும் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 558

சிவா சஜி




தீபன் வினு




ஒப்பற்ற இறைவனின் வியப்புமிக்க ஓவியம் இது

கஜீவன்



கீர்த்தனா கருணாகரன்




சர்மி சர்மிலா




கிருஷ்ணா




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# காணாமற் போனவர்களின் தகவல்களை உடன் வெளியிடு

## அரசை வலியுறுத்தி இன்று கவனயீர்ப்பு

காணாமற் போனவர்களின் தகவல்களை உடன் வெளியிடுமாறு கோரி சமவுரிமை இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவனயீர்ப்பு போராட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழில் நடைபெறவுள்ளதாக சம உரிமை இயக்கம் அறிவித்துள்ளது.

யாழ். மத்திய பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ள இப்போராட்டத்திற்கு காணாமற் போனவர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என சமவுரிமை இயக்கத்தின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் யூட் சில்வா பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக கூறும், வடபகுதி பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்ட பொது மக்கள் பெற்றோர், பாதுகாவலர் சங்கம் அனைவரையும் கலந்து கொண்டு பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறும் கேட்டுள்ளது. (இ-5)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 27.11.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 140.90 | 145.23 |
| பவுண்ட் | பிரிட்டன் | 211.84 | 220.00 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 148.41 | 154.88 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 136.57 | 142.77 |
| டொலர் | கனடா | 105.15 | 109.84 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 100.78 | 105.84 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.53 | 103.69 |
| ரூபா | இந்தியா | 2.1493 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 379.1554 |
| குவைத் | டினார் | 470.3047 |
| ஓமான் | ரியால் | 371.5922 |
| கட்டார் | ரியால் | 39.2792 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1181 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.9520 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 170 | 200 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 65 | 100 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 700 | 800 | 800 | 600 |
| தக்காளி | 160 | 150 | 120 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 15 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 160 | 120 | 160 | 200 | 150 |
| கரட் | 140 | 100 | 100 | 150-350 | 200 | 160 |
| பூசணி | 60 | 40 | 35 | 60 | 70 | 40 |
| புடோல் | 160 | 140 | 100 | 160 | 120 | 150 |
| வாழைக்காய் | 80 | 60 | 45 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 120 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 110 | 150 | 120 | 150 |
| பாகற்காய் | 350 | 400 | 220 | 400 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 100 | 150 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 350 | 320 | 300 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 100 | 140 | 140 | 120 | 200 | 150 |
| பீற்றூட் | 100 | 100 | — | — | 240 | 80 |
| கறிமிளகாய் | 450 | 350 | — | 600 | 320 | — |
| முருங்கைக்காய் | 350 | — | 200 | 600 | 320 | — |
| போஞ்சி | 350 | — | — | — | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 140 | — | 140 | — |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 30 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 300 | 200-300 | 200 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 30-40 | 50 | 40 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — | 250 |
| முள்ளங்கி | 100 | — | — | 80 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 40 | — | — | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | — | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 50 | 120 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தமிழ் ஈழம் வேண்டும் வட்டுக்கோட்டைத் தீர்மானம் 39

...தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குக்கூட, எந்த அரசாங்கமும் செவி சாய்க்கவில்லை.

எனவே, இழந்துவிட்ட அரசுரிமையைப் பெறத் தமிழ் ஈழம் ஒன்றுதான் வழி என்று இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

சுதந்திரத் தமிழ் ஈழத்தை அடைந்தே தீருவோம்.

இவ்வாறு அமிர்தலிங்கம் கூறினார். அவருடைய பேச்சு, தமிழ் இளைஞர்களின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் வகையில் அமைந்திருந்தது.

மாநாடு முடிந்ததும் அமிர்தலிங்கத்தைத் தோளில் தூக்கிக் கொண்டு இளைஞர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

### அமிர்தலிங்கம் கைது

இது நடந்து ஒரு வாரத்துக்குப் பின், தமிழ் ஈழம் பற்றிய துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்க, செல்வநாயகமும் அமிர்தலிங்கமும், மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களும் யாழ்ப்பாணம் பஸ் நிலையம் அருகே கூடினர். பொது மக்களிடம் துண்டுபிரசுரங்களை விநியோகித்தனர்.

அப்போது ஆயுதம் தாங்கிய பொலிஸார் ஜீப்களில் வந்தனர். உங்களைக் கைது செய்யும்படி எங்களுக்கு உத்தரவு வந்திருக்கிறது. எங்களுடன் வாருங்கள் என்று அமிர்தலிங்கத்திடம் பொலிஸ் அதிகாரிகள் கூறினர்.

என்னையும் கைது செய்யுங்கள் என்று செல்வநாயகம் கூறினார்.

நீங்கள் எங்களுக்குத் தேவை இல்லை என்று பொலிஸார் அதிகாரி சொன்னார்.

அமிர்தலிங்கம் வி.என்.நவரத்தினம், கே.பி.ரத்தினம், கே.துரை ரத்தினம், எம்.சிவசிதம்பரம் ஆகியோரைப் பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்களுடன் சென்ற செல்வநாயகத்தை பொலிஸார் தடுத்து நிறுத்திவிட்டனர்.

### வழக்கு

அமிர்தலிங்கத்தின் மீது மற்றவர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்டது. தேசத் துரோகம் செய்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. நெருக்கடி காலச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கோர்ட்டில் இந்த வழக்கு 3 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.



நெருக்கடி காலச் சட்டமுறைப்படி பிரகடனம் செய்யப்படவில்லை என்றும், அந்தச் சட்டப்படி அமைக்கப்பட்ட கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள இந்த வழக்கும் செல்லாது என்றும் அமிர்தலிங்கத்தின் தரப்பிலும் மற்ற தலைவர்களில் தரப்பிலும் வாதாடப்பட்டது.

இந்த வாதத்தை நீதிபதிகள் ஏற்றுக்கொண்டு அமிர்தலிங்கத்தையும் மற்றவர்களையும் விடுதலை செய்தனர்.

இந்தத் தீர்ப்பு பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

இலங்கைத் தமிழர்களின் தந்தை என்றும் இலங்கையின் காந்தி என்றும் போற்றப்பட்ட செல்வநாயகம், தமது 79 ஆவது வயதில் காலமானார்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட அமைச்சர்களும் அனைத்துக் கட்சியினரும் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சட்டமேதையான செல்வநாயகம், வாழ்நாள் முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்காகப் பாடுபட்டவர். தமிழர்களுக்கு மாநில சுயாட்சி வேண்டும் என்று நீண்ட காலம் கோரி வந்தார். இது குறித்து அவருடன் ஒப்பந்தம் செய்த பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா உள்ளிட்ட சிங்களத் தலைவர்கள், பிறகு பின் வாங்கி ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்க விட்டனர்.

### தனி நாடு

எனவே, தமிழர்களுக்கு என்று தனிநாடு (தமிழ்ஈழம்) பெறப்போராடுவோம் என்று வட்டுக்கோட்டை என்ற இடத்தில் நடந்த மாநாட்டில் அறிவித்தார்.

இதன்பிறகு தமிழ ஈழ கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு இடங்களில் பொதுக் கூட்டங்களில் பேசினார்.

1976 நவம்பர் மாதத்தில் திருகோணமலை கூட்டத்தில் பேசுகையில், எனக்கு இப்போது 78 வயது ஆகிவிட்டது. இன்னும் அதிக காலம் வாழ்வேனா என்பது சந்தேகம். சாவதற்குமுன் தமிழ் இனத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டுச் சாக விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

### கடைசி பேச்சு

1976 நவம்பர் 19 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசினார். அதுவே பாராளுமன்றத்தில் அவருடைய கடைசி பேச்சாக அமைந்தது.



Mr.S.J.V. Chelvanayakam participating in a Satygaraha campaign in Trincomalee in 1961- with then parliamentarians ( R-L) Mr. Thambiah Ehambaram ( Muttur MP)- Mr.N.R.Rajavarothiam ( Trincomalee MP).

(தொடரும்)

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

**பாடம்:-கணிதம்** **பகுதி I** **நேரம்:- 2 மணித்தியாலம்**

முக்கியம்:
❖ இவ்வினாத்தாள் 8 பக்கங்களைக் கொண்டது ❖எல்லா வினாக்களுக்கும் விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக ❖விடை எழுதும் போது உரிய படிமுறைகளையும் சரியான அலகுகளையும் காட்டுதல் வேண்டும் ❖பகுதி A யின் 1-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றின் விடைக்கும் ஒரு புள்ளியும் 11-30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் விடைக்கும் 2 புள்ளிகளும் பகுதி B இன் ஒவ்வொன்றின் விடைக்கும் 10 புள்ளிகளும் வழங்கப்படும்.

## பகுதி A

எல்லா வினாக்களும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

01.5 தேங்காய்களின் விலை ரூ.200 ஆயின் ஒரு தேங்காயின் விலை யாது?

02.பெறுமதி காண்க. 4.3+5.2


03.தீர்க்க. a-2=1

04.சுருக்கி எழுதுக. 3y-y

05.கீறிட்ட இடத்தை நிரப்புக 1kg 300g=........... g

06.ரூ. 100 இற்கு வாங்கிய பொருளை ரூ.120 இற்கு விற்பதால் கிடைக்கும் இலாப சதவீதம் யாது?


07.தரப்பட்ட வென்னுருவில் $A^1$ என்னும் பிரதேசத்தை நிழற்றுக





08.நிகழ்ச்சி ஒன்று நிகழ்வதற்கான நிகழ்தகவு 2/3 ஆகும். அந்நிகழ்ச்சி நிகழாமைக்குரிய நிகழ்தகவு யாது?

09. சுருக்கி எழுதுக. $111_{இரண்டு} - 10_{இரண்டு}$

10.தரப்பட்ட உருவில் X இன் பருமனைக் காண்க




11. $-2 < x \leq 4$ என்னும் சமனிலியை தரப்பட்ட எண்கோட்டில் குறித்துக்காட்டுக




12.பெருக்கல் தொடரின் முதலாம் உறுப்பு 3 ஆகும். இதன் ஆறாம் உறுப்பு 96 ஆயின் பொது விகிதம் யாது?

13.சுருக்கி எழுதுக? $3\sqrt{2} \times \sqrt{8}$


14.ரூ.10 ஆகவுள்ள பங்குகளை ரூ.15 படி வாங்குவதற்கு பவித்திரன் ரூ.30000 ஐ முதலீடு செய்கிறார். அவர் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரைப் பெறுமானம் எவ்வளவு?

15.தரப்பட்ட எண் பரம்பலின் இடையம் யாது?
2,3,5,8,8,9,10,12,19,20


16. P என்னும் புள்ளியில் இருந்து நேர் கிழக்கே 100 மீற்றர் தூரம் சென்று Q என்னும் புள்ளியை ஒருவன் சென்றடைகின்றான். பின்னர் அங்கிருந்து நேர் தெற்காக 100 மீற்றர் தூரம் சென்று R என்னும் புள்ளியை அடைகின்றார். இதற்கான பரும்படிப் படம் ஒன்று வரைந்து P யிலிருந்து R இன் திசைகோளைக் காண்க.





17. உருவில் தரப்பட்ட தகவல்களுக்கேற்ப ஒருங்கிசையும் இரண்டு முக்கோணிகளின் பெயர்களை எழுதி அதற்கான காரணத்தையும் எழுதுக.




18.y=2x+3, y= -x+6 என்னும் ஏகபரிமாண சமன்பாடுகளின் தீர்வுகளைத் தரப்பட்ட வரைபின் உதவியுடன் காண்க.





19.ABCDEF என்பது ஒழுங்கான அறுகோணியாகும்.
$\hat{AOF}$ என்பது இருசமபக்க முக்கோணியாகும்.
$\hat{AFO}=55^0$ ஆயின், $\hat{OAB}$ இன் பருமனைக் காண்க.




20.தரப்பட்ட தண்டு இலை வரைபானது குறித்த பரீட்சை ஒன்றில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளைக் காட்டுகின்றது. புள்ளிகளின் வீச்சு யாது?


| தண்டு | இலை |
|---|---|
| 0 | 8 |
| 1 | 7 8 |
| 3 | 5 7 8 9 |
| 4 | 3 5 7 |
| 5 | 0 |

21.இரு நாணயங்களைச் சுண்டும்போது கிடைக்கும் பேறுகளைக் காட்டும் பூரணப்படுத்தப்படாத மரவரிப்படம் ஒன்று தரப்பட்டுள்ளது. இரு நாணயங்களிலும் தலை விழுவதற்கான நிகழ்தகவு யாது?





22.A,B என்னும் இரு வாகனங்கள் ஒன்றை ஒன்று சந்திப்பதற்காக ஒரே நேரத்தில் வெவ்வேறு நகரங்களிலிருந்து புறப்பட்டன. A யின் கதி $60kmh^{-1}$ ஆகவும் B யின் கதி 50 $kmh^{-1}$ ஆகவும் காணப்பட்டதுடன் புறப்பட்டு 1/2 மணி நேரத்தின் பின் அவை ஒன்றையொன்று சந்தித்தன. இரு நகரங்களுக்கும் இடைப்பட்ட தூரத்தைக் காண்க.

23.O ஐ மையமாகவுடைய வட்டத்தில் P,Q,R என்பன மூன்று புள்ளிகள் ஆகும். $\hat{OPQ}$= $50^0$ ஆயின் $\hat{PRQ}$ இன் பருமனைக் காண்க.





24.ABC என்பது ஓர் செங்கோண முக்கோணி ஆகும்.
B யிலிருந்து AC இற்கு வரைந்த செங்குத்தின் அடி D ஆகும்.
BC= 8 cm, AC=10 cm எனில் BDயின் நீளத்தைக் காண்க.





25. $n\begin{pmatrix} 0 & -2 \\ 3 & 1 \end{pmatrix} + \begin{pmatrix} 0 & 4 \\ -6 & -2 \end{pmatrix} = \begin{pmatrix} 0 & 0 \\ 0 & 0 \end{pmatrix}$ ஆயின் n இன் பெறுமானத்தைக் காண்க.

26. r ஆரையுடைய 1/4 வட்டப்பகுதி ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. இவ் ஆரைச்சிறைப் பகுதியைக் கொண்டு ஒரு கூம்பு தயாரிக்கப்பட்டால் கூம்பின் சாய்வுயரத்தையும் அடியின் ஆரையையும் காண்க.





27.20 மீற்றர் நீளமும் 8 மீற்றர் அகலமுமுடைய செவ்வக வடிவ காணித்துண்டு ABCD ஆகும். AD,AB என்னும் பக்கங்களிலிருந்து சமதூரத்திலும் AB யிலிருந்து 5 மீற்றர் தூரத்திலும் காணியின் உட்புறமாக கிணறு ஒன்று அமைக்கப்படவேண்டியுள்ளது. ஒழுக்குகள் பற்றிய அறிவைக் கொண்டு கிணறு அமைக்கப்படவேண்டிய நிலையை பரும்படிப்படத்தில் காட்டுக.




28.$a^2+b^2=13$, ab=6 ஆயின் (a+b) இன் பெறுமதியைக் காண்க

29.AC என்பது O ஐ மையமாக உடைய வட்டம் ஒன்றின் விட்டமாகும். O இலிருந்து BC இற்கு வரையப்பட்ட செங்குத்தின் அடி BC ஐ D இல் சந்திக்கிறது எனில் OD, AB யிற்கு இடைப்பட்ட இரு தொடர்புகளை எழுதுக.




30.பெறுமதி காண்க.

$$\left(1-\frac{1}{150}\right)\left(1-\frac{1}{149}\right)\left(1-\frac{1}{148}\right) \ldots\ldots\ldots \left(1-\frac{1}{2}\right)$$

(நாளை தொடரும்)




# சிரிப்பால் வந்த சிரிப்பு

...நகைச்சுவையாக எழுதுகிற எழுத்தாளர்களைச் சிறையில் அடைத்தார்.

அது மட்டுமல்லாமல் அவர்களைப் பத்து கோடி தடவை, 'இனி நான் சிரிப்புக்கதை எழுத மாட்டேன். இனி நான் சிரிப்புக் கதை எழுத மாட்டேன" என்று எழுதச் சொல்லி தண்டனை கொடுத்தார்.

இந்தச் சட்டம் போட்ட பிறகு தினமும் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கசையடிகள் வாங்கினார்கள்.

கசையடி கொடுக்க ஆட்கள் போதவில்லை.

மேலும் கசையடி கொடுக்கும்போதே, அடிக்கிற ஆட்கள் சிரித்துவிட அவர்களும் கசையடி வாங்கினார்கள்.

இப்படிக் கசையடி வாங்கியவர்களால் இரண்டு நாட்களுக்கு எந்த வேலையும் செய்ய முடியவில்லை.

விவசாயம் நடக்கவில்லை.

தொழிற்சாலைகள் செயற்படவில்லை.

பள்ளிக்கூடங்கள் நடக்கவில்லை.

கல்லூரிகள் மூடிக் கிடந்தன.


வீடுகளில் சமையல் செய்ய ஆளில்லை.

எல்லோரும் மருத்துவமனையில் கிடந்தார்கள்.

உடம்பு சரியாகி வந்ததும் ஏதாவது ஒரு காரணத்துக்காகச் சிரித்து விடுவார்கள்.

ஏன் முதல் மந்திரியே இரண்டு தடவை கசையடி வாங்கினார என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

அதிலிருந்து முதல் மந்திரி தொடங்கி அதிகாரிகள், ஊழியர்கள், சேவகர்கள், பொதுமக்கள் என்று எல்லோரும் ராத்திரியில்



சத்தமாக ரேடியோ, தொலைக்காட்சி சேனல்களை போட்டு சிரியோ சிரியென்று சிரிப்பார்கள்.

ரேடியோ, தொலைக்காட்சி சத்தத்தில் சிரிப்புச் சத்தம் வெளியே கேட்காது.

இப்படியெல்லாம் சிரிப்பூர் மக்கள், வெளிப்படையாகச் சிரிக்க முடியாமல் சங்கடப் பட்டார்கள்.

நீங்களே சொல்லுங்கள்? யாராலும் சிரிக்காமல் வாழ முடியுமா?

ஆனால், தொடர்ந்து வாங்கிய தண்டனையால் மக்கள் சிரிப்பை மறந்து அழத் தொடங்கினார்கள்.

முன்பு எதற்கெல்லாம் சிரித்தார்களோ, அதற்கெல்லாம் இப்போது அழுதார்கள்.

வீடே அழுதது.

தெருவே அழுதது.

ஊரே அழுதது.

நாடே அழுதது.

பகலும் இரவும் அழுகைச் சத்தம் கேட்டுக்கொண்டேயிருந்தது.

ராஜா ஒரு நாள், அவருடைய மந்திரிகளுக்கு விருந்து வைத்தார்.

அந்த விருந்தில் முதல் மந்திரி வறுத்த கோழிக் குஞ்சு ஒன்றை அப்படியே விழுங்க முயற்சித்து வாயை அகலமாகத் திறந்தார்.

கோழிக்குஞ்சு உள்ளேயும் போகாமல் வெளியேயும் வராமல் வாய்க்குள்ளே நின்றுவிட்டது.

முதல் மந்திரியின் வாய் தவளையின் வாய், மாதிரி ஆகிவிட்டது.

அந்த நேரம் பார்த்து ராஜா முதல் மந்திரியிடம், "எப்படி விருந்து?" என்று கேட்டார்.

அதற்கு முதல் மந்திரி "விழ்ந்து பிழ்மாதம்" என்று சொன்னார்.

அதைக் கேட்ட ராஜா, சிரிப்பு பொங்கிவர சிரித்து விட்டார்.

உடனே விருந்தில் கலந்துகொண்டவர்கள் "ஹேய்... ராஜா சிரித்து விட்டார் ராஜா சிரித்துவிட்டார்..." என்று கத்தினார்கள்.

உடனே ராஜா சேவகர்களைக் கூப்பிட்டு, "யாராயிருந்தாலும் சட்டம் சட்டம் தான்... நிறைவேற்றுங்கள்..." என்று சொன்னார் ராஜா.

எல்லோரும் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னார்கள்.

ஆனால், ராஜா பிடிவாதம் பிடித்தார்.

'சரி' என்று சேவகர்களில் ஒருவன் ராஜாவை திருப்பி நிறுத்தி, முதுகிலும் பிட்டத்திலும் ஐம்பது கசையடிகள் கொடுத்தான்.

அவ்வளவுதான் ராஜா துடிதுடித்து, உடம்பெல்லாம் தடித்து உருண்டு புரண்டு விட்டார்.

ராஜா துடிப்பதைப் பார்த்து எல்லோருக்கும் சிரிப்பு வந்தாலும் யாரும் சிரிக்கவில்லை.

மறுநாள் ராஜா முதல் வேலையாக முதல் மந்திரியைக் கூப்பிட்டு அவருடைய சிரிப்புத் தடைச் சட்டத்தை உடனே நீக்கிவிடச் சொன்னார்.

முதல் மந்திரி ராஜாவின் வீங்கிப்போன உடம்பைப் பார்த்து சிரிப்பு பொங்கிவரச் சிரித்தார்.

ராஜாவும் அந்தச் சிரிப்பில் கலந்துகொண்டார்.

சிரிப்பூர் நாட்டிலிருந்த மக்களும் அன்றிலிருந்து சுதந்திரமாகச் சிரிக்க ஆரம்பித்தார்கள்.?

(தொடரும்)




- 1520 - தென்னமெரிக்கா ஊடாகப் பயணித்த போர்த்துகேய நாடுகாண்பயணி மகலன் பசுபிக் பெருங்கடலை அடைந்தான். இவனே அட்லாண்டிக் கடலிலிருந்து பசுபிக் கடலை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆவான்.
- 1821 - பனாமா ஸ்பெயினிடம் இருந்து பிரிந்து பாரிய கொலம்பியாவுடன் இணைந்தது.
- 1843 - ஹவாய் இராச்சியத்தை ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் ஆகியன விடுதலை அடைந்த தனி நாடாக அங்கீகரித்தன.
- 1893 - நியூசிலாந்தில் முதற்தடவையாக பெண்கள் வாக்களித்தனர்.
- 1905 - ஐரிஷ் தேசியவாதி ஆர்தர் கிறிபித் அயர்லாந்தின் விடுதலைக்காக சின் ஃபெயின் என்ற அரசியல் கட்சியை உருவாக்கினார்.
- 1912 - அல்பேனியா ஒட்டோமான் பேரரசிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1918 - புக்கோவினா ருமேனிய இராச்சியத்துடன் இணைய முடிவு செய்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அல்பேனியா அல்பேனியப் பார்ட்டிசான்களினால் விடுவிக்கப்பட்டது.
- 1958 - சாட், கொங்கோ குடியரசு, காபோன் ஆகியன பிரெஞ்சு ஆட்சியின் கீழ் சுயாட்சி பெற்றன.
- 1960 - மவுரித்தேனியா பிரான்சிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1964 - நாசா செவ்வாய்க் கோளை நோக்கி மரைனர் 4 விண்கலத்தை ஏவியது.
- 1975 - கிழக்குத் திமோர் போர்த்துக்கல்லிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1989 - பனிப்போர்: செக்கொசிலவாக்கியாவின் தனியாதிக்க உரிமையை விட்டுத்தருவதாக அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
- 1990 - ஐக்கிய இராச்சிய தலைமை அமைச்சர் மார்கரெட் தாட்சர் தனது பதவியை விட்டு விலகினார்.
- 1990 - லீ குவான் யூ சிங்கப்பூர் தலைமை அமைச்சர் பதவையை விட்டு விலகினார். கோ சொக் டொங் புதிய தலைமை அமைச்சரானார்.
- 1991 - தெற்கு ஒசேத்தியா ஜோர்ஜியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1994 - ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய நோர்வே மக்கள் எதிர்த்து வாக்களித்தனர்.
- 2006 - நாசாவின் நியூ ஹரைசன்ஸ் தானியங்கி விண்கலம் புளூட்டோவின் முதலாவது படத்தை அனுப்பியது.

### பிறப்புக்கள்

- 1757 - வில்லியம் பிளேக், ஆங்கிலேயக் கவி, ஓவியர் (இ. 1827)
- 1820 - பிரெட்ரிக் எங்கெல்சு, ஜேர்மன் அரசியல் மெய்யியலாளர் (இ. 1895)
- 1864 - ஜேம்ஸ் ஆலன், ஆங்கில எழுத்தாளர் (இ. 1912)

### இறப்புகள்

- 1694 - மட்சுவோ பாஷோ, யப்பானியக் கவி (பி. 1644)
- 1890 - ஜோதிராவ் புலே, இந்திய மெய்யியலாளர் (பி. 1827)
- 1954 - என்ரிக்கோ பெர்மி, இத்தாலிய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1901)
- 1968 - எனிட் பிளைட்டன், ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1897)

நன்மையைச் செய்யுங்கள்,
யாருக்கு என்று மட்டும் கேட்காதீர்கள்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அனுதாபம் தெரிவிப்பதற்காக மூடப்பட்ட பாடசாலைகள்...

யாழ்ப்பாணத்தில் மாக்சிசம் பேசிய பேராசிரியர் ஒருவர் தன் வீட்டுக்கு வருகிறவர்களை முற்றத்தில் நல்ல நிலா வெளிச்சம்; அங்கிருந்து கதைக்கலாம் என்று கூறி முற்றத்திலேயே இருத்தி விடுவாராம்.

பேராசிரியரைச் சந்திக்கச் சென்றவர்கள் அடடா! பேராசிரியரின் மாக்சிசக் கொள்கை எத்துணை உயர்வுடையது என்று மகிழ்ந்து கொள்வர். என்ன செய்வது? உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசுகின்றவர்களோடு எதுவுமே செய்ய முடியாது. அதனால்தான் இராமலிங்க வள்ளலார் "... உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்..." என்று பாடினார்.

நேற்றுமுன்தினம் (நவம்பர் 26) செந்தூரன் என்ற மாணவன், சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் எழுதி வைத்து விட்டு ஓடும் புகையிரதத்தின் முன் பாய்ந்து தன் உயிரை ஆகுதியாக்கிக் கொண்டான்.

மாணவன் செந்தூரனின் இந்த முடிவுக்கு அவரவர் தத்தம் சிந்தனைகளுக்கு ஏற்ப வியாக்கியானம் செய்து கொள்வர்.

இந்த வியாக்கியானங்களைக் கடந்து; 18 வயதுடைய ஒரு மாணவன், தன் உயிரைத் தியாகம் செய்வதற்குத் துணிந்தான்; அதற்காக அவன் நவம்பர் 26ஆம் திகதியை தெரிந்தெடுத்தான்; தனது இறுதிச் சடங்கு இடம்பெற வேண்டிய திகதி எதுவாக இருக்க வேண்டும் என்பதை அந்த மாணவன் முன்கூட்டியே நிர்ணயித்துக் கொண்டான் என்பதும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

இதற்கு அப்பால், சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அந்த மாணவன் இந்த நாட்டின் ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் விடுத்த கோரிக்கைக்குள், ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டவர் என்பதையும் நல்லாட்சி என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடாகவே முன்கொண்டு வரப்பட்டது என்றும் ஜனாதிபதி மைத்திரி ஒரு நல்ல மனிதர் என்பதால், தன் உயிரைத் தியாகம் செய்வதன் ஊடாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியமாகும் என்றும் நம்பினான்.

இதற்கு அப்பால் மாணவன் செந்தூரன் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். முதல் மாணாக்கனுக்குரிய ஒழுங்கத்தைக் கொண்டவன்.

தனது ஆழ் மனத்தில் பதிந்து கொண்ட தமிழ் அரசியல்கைதிகளின் விவகாரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் அந்த மாணவனுக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில் அவன் எடுத்த முடிவு தன் உயிரைத் தியாகம் செய்தேனும் கைதிகளின் விடுதலைக்கு உதவுவது என்பதாகும்.

மாணவன் செந்தூரனின் இத்தகையதொரு நிலைப்பாட்டில்தான் நாங்கள் ஒவ்வொருவரும் வேறுபட்ட வியாக்கியானங்களை முன்வைக்கின்றோம்.

இவை ஒரு புறம் இருக்க, மாணவன் செந்தூரனுக்கு அனுதாபம் தெரிவித்து நேற்றையதினம் வடக்கு மாகாணப் பாடசாலைகளை மூடுவித்து மாணவர்கள் மத்தியில் எழுச்சி ஏற்படாமல்–மாணவன் செந்தூரனின் இறுதிச் சடங்கில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் கலந்து கொள்ளாமல் தடுத்து விட்ட (அரச) கெட்டித்தனம் இருக்கிறதே இதுதான் முற்றத்து நிலா வெளிச்சம்.

அந்தகோ! என் செய்வோம். எம் இனமே! மாணவன் செந்தூரனின் இழப்பு அவன் குடும்பத்திற்கு மட்டும் என்பதாக்கப்பட்ட நிகழ்வுதான் இன்றைய எங்கள் நிலைமை.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துளளது.

அந்த வகையில், யாழ் பிரதேசத்தில் இரும்பு மதவடி, சக்களாவத்தை, மீசாலை, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கச்சாய்துறைமுகம், கெற்பலி ஒரு பகுதி, கச்சாய் கடற்கரை, பாலாவி, கொடிகாமம், கலைவாணி, வறணி, இயற்றாலை, மந்துவில், கரம்பைக்குறிச்சி, வறணி கரம்பன் நாவலடி, வலைத்தோட்டம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் இராமநாதபுரம், வட்டக்கச்சி, கிளிநொச்சி விமானப்படை முகாம் -1, கிளிநொச்சி விமானப்படை முகாம் -2 வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் புளிதறித்த புளியங்குளம், செட்டிகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## பெண் கொலை வழக்கு யாழ்.மேல்நீதிமன்றுக்கு

(கரணவாய்)

கூரிய ஆயுதம் ஒன்றினால் குத்தப்பட்டுகொலைசெய்யப்பட்ட பெண் ஒருவரின் வழக்கு விசாரணையினை யாழ். மேல்நீதிமன்றுக்கு பாரப்படுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா நேற்றைய தினம் உத்தரவிட்டார்.

மேலும் கொலையுடன் தொடர்புடையவர் என கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

வடமராட்சி புனிதநகர் கற்கோவளம் பகுதியில் 06. 04.2015 அன்று இடம் பெற்ற மேற்படிக் கொலைச் சம்பவத்தில் கண்மணி கமலாம்பிகை என்பவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து 20. 04.2015 அன்று சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்டு வந்தநிலையில் அச்சந்தேக நபர் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் மீண்டும் இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முகத்தோற்றம் நிரூபிக்கப்பட்டது.

இதனையடுத்தே மேல் நீதிமன்றிற்கு குறித்த வழக்கு விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டது. (இ-5-60)

## பரிசளிப்பு விழா

யாழ்.பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அதிபர் பி.அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலைப் பணிப்பாளர் ரி.சேந்தன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற புள்ளி விபரவியல் அலுவலர் எஸ். தேவதாசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-19)

## கோப் மலர் வெளியீடு

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பண் கோப் மலர் வெளியீடும், கௌரவிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில்சங்க தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனும, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய திருமதி மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு ஆணைக்குழு செயலாளர் பொ.வாகீசன், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சு. கணேசு, கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் க.அருந்தவநாதன் மக்கள் வங்கி முகாமையாளர் எம்.கலிஸ்ரஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய தினம் 25 வருட சேவையை பூர்த்தி செயத பணியாளர்கள் கௌரவிப்பும், பண் கோப் மலர் வெளியீடு, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு, இப்பிரதேச சிறந்த கூட்டுறவாளர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன.(இ-4)

## போக்குவரத்து ஒழுங்குகளை கவனிக்கும்படி அறிவுறுத்து

யாழ். புதிய ஆயரின் திருநிலைப்படுத்தல் சடங்கு இன்று இடம்பெறவுள்ளது. இதன்படி பின்வரும் ஒழுங்குகளைக் கவனிக்கும்படி போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான ஏ.ஜே.ஜேசுதாசன் அடிகளார் வேண்டியுள்ளார்.

1.பொது வாகனங்களில் பயணிக்கவும்-மோட்டா சைககிள -துவிச்சக்கர வண்டிகளில் செல்வதைத் தவிர்க்கவும். நகர்ப்புறப் பங்குகளிலுள்ளோர் நடநதே வரவும்.

2.வாகனங்களில் வருவோர் கன்னியர் மட வீதியும் ஆஸ்பத்திரி வீதியும் சந்திக்கும் முலவைச் சந்தியில் திரும்பி கன்னியர் மட வீதியினூடாக பிரதான வீதியில் கன்னியர் மடத்திற்கு அருகே அமைந்துள்ள பெற்றோல் செட்டிற்கு வரவும். அங்கிருந்து குறும் பஸ் சேவை மூலம் நீங்கள் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.

3.பழைய யாழ்மாநகர சபை மைதானமே பேருந்து மற்றும் சிறியரக மோட்டார் வாகனங்களின் அன்றைய தரிப்பிடமாகும்.

4.மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளின் அன்றைய தரிப்பிடம் பத்திரிசியார் கல்லூரியின் மதுரம் சதுக்கம்- கிறீன் பீல்ட் மைதானம்-ஆச்சிரம் என்பன ஆகும்.

5. குருக்கள் துறவிகள் பெரிய வாகனங்களின் தரிப்பிடமாக யாகப்பர் ஆலய முன்றலும் புனித பத்திரிசியார் கல்லூரியும் அமையும்.

6.சடங்கு முடிந்ததும் மடத்தடிச் சந்தியிலுள்ள பெற்றோல் செற்றுக்கு வரவும். அங்கிருந்து உங்கள் பயணத்தை தொடரலாம்.

7. அன்றைய தினம் பஸ்ரியன் சந்தியிலிருந்து மடத்தடிச் சந்த வரையும் ரெம்பிள் றோட்டிலிருந்து பத்திரியார் கல்லூரிச் சந்தி வரையும் கதீட்றல் வீதி -மத்தியூஸ் வீதி என்பனவும் வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ( இ-7 )

## மாதாந்த கலைநிகழ்ச்சி

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் மாதாந்த கலை நிகழ்ச்சி சுன்னாகம் மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இதன்போது குழு இசை, இசைக்கச்சேரி என்பன நடை பெறும். (இ-5)

## மாகாண சபைகள் நிதிப் பிரச்சினையை அதிகளவில் எதிர்நோக்கி வருகின்றன

மாகாணசபைகள் நிதிப் பிரச்சினையை அதிகளவில் எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யத் தவறியுள்ளது. மேலும் பல மாகாண வரவு செலவுத்திட்ட யோசனை நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் 2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியவில்லை என வட மேல் மாகாணசபை உறுப்பினர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

பல மாகாண சபைகளின் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.(இ-7-10)

## ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்டத்தின் புதிய ஆயரான பேரருள் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் திருநிலைப்படுத்தல் சடங்கு இன்று நடைபெறுவதை முன்னிட்டு திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கூடத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண ஆயர்களின் உருவப்படங்களின் ஓவியக் காட்சி இன்று முதல் 30ஆம் திகதி வரை இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஓவியக் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த ஓவியக் காட்சி இன்று சனக்கிழமை பி.ப 2 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## நால்வருக்கு ஆயுட்கால சிறை

ஹெரோயின் போதைப்பொருள் 25 கிராம் வைத்திருந்து வியாபாரம் செய்த சந்தேகத்தில், குற்றவாளியாக இனங்காணப்பட்ட 4 பேருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவிஸாவளை உயர் நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதுடைய பெண்ணொருவர் உட்பட நால்வருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் கல்கிஸ்ஸ, படோவிட்ட மற்றும் வடக்கு இந்துறுவ பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர். (இ-7-10)

JSAC

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2014
ஆயுதப் புரட்சி, யுத்தம், இடப்பெயர்வு இவற்றால் அவலப்படுவது பெண்ணினமே. யுத்தங்கள் ஓய்ந்த பின்னரும் யுத்த வடுக்களாய் இன்னமும் பெண்கள். இதனை மாற்றி அமைப்போம்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2015
"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்."
-ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியலாளர்)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில் நுட்பங்கள் – 71

## மண்ணானதும் மண்ணாகிப்போனதும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!


இந்த ஆண்டு உலக உயிர்ப்பான மண்ணுக்கான ஆண்டாகும் (Year of Living Soils). ஐக்கிய நாடுகளினால் அறிவிக்கப்பட்டு உலகமனைத்தும் அதனை கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அதிலும் இந்த கிழமை தம்முயிரை காவுகொடுத்து மண்ணாகிப்போன அனைவரையும் வருடந்தோறும் நினைவுகூரும் வாரமாகும். கார்த்திகையில் மலர் விரித்து விளக்கீடு செய்து சூரனை வதம் செய்து சொக்கப்பானை எரித்து அந்த உறவுகளை நினைந்து கொள்ளும் சிறப்புக்குரிய நாட்களிவை. மண்ணாகிப் போனதால் உயிர் மண்ணுக்கு என்று பொருள்.

நாம் வாழும் மண்ணுக்கு ஏன் இந்த முக்கியத்துவம் என பலரும் சிந்திக்கலாம். பூமிப்பந்தில் மூன்றிலொன்று தான் நிலப்பரப்பு. அதிலும் தொடர்ந்து வரும் இயற்கையனர்த்தத்தின் காரணமாகவும் வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பதனாலும் துருவப் பகுதியிலுள்ள பனிப்பாறைகள் மெல்ல மெல்ல உருகத் தொடங்கியதால் கடல் நீர்மட்டம் அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. பல தீவுகளின் நிலப்பரப்பு கடலு க்குள் செல்லும் அபாயம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. மாலைதீவு இதற்கொரு உதாரணமாகும். பிரச்சினை தமக்கென்று வந்தால் பெரியவர்கள் பலரும் பிரச்சனையிலிருந்து மீண்டுவர அவசரமாக மாலைதீவுக்கு செல்வது வழக்கம்.

இங்கே மாலைதீவுக்கே பிரச்சினையாகி விட்டது. யாழ்ப் பாணமும் விதிவிலக்கல்ல. கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 10 மீற்றர் உயரத்திலிருக்கின்ற சமமான நிலப்பரப்பிது. போருக்கு பின்னர் தொழிற்சாலைகள் பலவற்றை உருவாக்குவது என்னும்போர்வையில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பித்து அங்குள்ள சுண்ணாம்புகற்களை தொடர்ந்து அகழ்வதற்கான சில முன்மொழிவுகள் நடப்பதாக செய்தி. தொழிற்சாலையை மீள ஆரம்பிப்பதில் எந்தவித பிரச்சினையுமில்லை. அதன் மூலம் வேலைவாய்ப்பு இங்குள்ளவர்களுக்கு கிடைக்குமானால் அதனை வரவேற்பதும் நல்லது.

ஆனால் அங்கிருந்து சுண்ணாம்புக்கற்களை எக்காரணங்கொண்டும் அகழக்கூடாது. மீறி நடந்தால் கடல் உள்ளுக்குள் வரும் ஆபத்து நெருங்கிவருகின்றது என அர்த்தம். வளங்களைப் பயன்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது அவற்றை பாதுகாக்கவும் வேண்டும். இன்னொரு சுனாமி சிறிதாக வந்தாலே போதும் அனைத்தையும் அள்ளிக்கொண்டு போய் விடும். அதன்பின்புஆலமரத்தின் கீழிருந்து கொடிபிடித்து குரல் தரவும் இந்த நொந்த தேசத்தில் ஆளிருக்காது.

எந்த மண்ணுக்கும் மகிமையுண்டு. இந்த மண் எமக்கு இயற்கை வரமளித்த மண். இந்த மண்ணுக்கு வரலாறு உண்டு. மண்ணில் வாழ்ந்த மரணித்த அனைத்து உயிர்களுக்கும் வரலாறு உண்டு. அதில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களை மட்டும் மீட்டிப் பார்க்கின்றோம். மனதிலிருத்தி ஆத்மார்த்தமாக வணங்குகின்றோம். வாழ்ந்து மரணித்த அனைவரும் இந்த மண்ணுக்குள்ளே ஆகுதியாகியானவர்கள். ஆக மொத்தத்தில் இந்த மண்ணுக்கு உயிர்ப்புண்டு. இதைச்சொல்வதற்கு அப்படி இப்படி சுற்றிவர வேண்டியிருக்கின்றது. உயிரற்ற மண் இன்னும் உயிர்களற்ற மண் அனைத்தும் செத்த மண் எனலாம். உயிரிகளின்றி மண்ணுக்கும் மகிமையில்லை. நாம் வாழும் மண்ணில் தான்




எமது வாழ்க்கையும் தொடங்கி அதிலேயே முடிந்தும் விடுகின்றது. இதிலுள்ள பல உயிரினங்களுடன் நாமும் ஒரு உயிரினமாக வாழுகின்றோம். எம்மைவாழவைத்தமண்ணை நாம் வாழவைக்க வேண்டாமா? அதாவது பரவாயில்லை அந்த மண்ணுக்காக அன்னை மண்ணை ஒருநாளிலாவது நாம் போற்றி மகிழக்கூடாதா. இதற்காக நவம்பர் மாதம் 5ஆம் திகதியை உலக (உயிர்ப்பான) மண்ணுக்கான நாளாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு தாபனம் (Food and Agriculture Organization - FAO) அறிவித்திருக்கின்றது. அதனை வடபகுதியில் கொண்டாடுவதற்கு மாகாண விவசாய அமைச்சு முன்வந்திருக்கின்றது. விவசாய திணைக்களத்தின் முழுமையான நெறிப்படுத்தலில் இந்நிகழ்வு கொணடாடப்படுவது நல்ல முயற்சி. அதனை வெளிப்படையாகவே பாராட்ட வேண்டும். இந்நிகழ்ச்சி நிரலில் மாகாண கல்வித்திணைக்களமும் இணைந்து பாடசாலைகளெங்கும் இந்நிகழ்வுகளை நடத்த வேண்டும். மாணவர்களுக்கு மண்ணின் தன்மை பற்றியும் அந்த வளத்தை பேணிப் பாதுகாப்பது பற்றியும் அதில் வாழும் உயிரினங்கள், குறிப்பாக நுண்ணுயிரினங்கள் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் அறியத்தருவது அவசியமாகும். மேலும் இது பற்றியதான விழிப்புணர்வு விவசாய பெருமக்களிடமும் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த மண்ணை நம்பியே விவசாயமும் எமக்கான உணவும் என்கின்றபோது அதனை நாம் வளமானதாக மேலும் மாசுபடுத்தாது பாதுகாத்தல் அவசியமாகும்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்... என்பது இந்த மண்ணுக்கான பெறுமதியை சுட்டி நிற்கின்றது. பலவளங்களுமுள்ள இந்த மண்ணில் வாழ விரும்புபவர்கள் நல்ல வண்ணம் நல்லமனிதராக வாழலாம். அனைத்திற்கும் ஆதரவாக இந்த மண் இருக்கின்றது. அதனால் தான் மண்ணை இந்த பூமியை அன்னைக்கு ஒப்பிட்டார்கள். அன்னையின் கருவறையில் கருவாகி தந்தையின் உயிரணுவினால் உயிராகி வந்துதித்து அவர்மடியில் தவழ்ந்து வளர்ந்து வாழ்ந்து பின்னர் மண் அன்னையின் கருவறையில் ஐக்கியமாகி விடுகின்றோம். மனிதனாய் இறந்தபின் உயிர் வேறாகி இந்த உடலம் பிணமாகி மண்ணில் உக்கி மண்ணை வளமாக்கும் செயற்பாட்டை இந்துக்களின் பாரம்பரியத்தில் காடாத்து என்னும் சமய சம்பிரதாயத்தில் முழுமையாக காணலாம். காடாத்தும் போது



இறந்தவர் உடலை எரித்த இடத்தில் பாத்தி கட்டி ஏர் போன்று செய்து அதனால் கீறி அதில் நவதானியங்களை விதைத்து நீர்தெளித்து உடலம் பசளையாகி தாவரம் வளர்வதான சித்தரிப்பு உண்மையாக நிகழ்வதனை கோடிட்டு காட்டுகின்றது. இதற்காகவோ என்னவோ பலர் அசேதன பசளைகள் அதிகம் பயன்படுத்திய மரக்கறிப்பயிர்களை அளவுக்கதிகமாக தினமும் உண்டு தமதுடலில் அதிகளவில் இந்த அசேதன பசளைகளை சேமித்து வைத்து இறந்தபின் தாவரம் வளர மண்ணில் பசளையாகின்றனர் என ஊகிக்க முடிகின்றது. அனைத்துமே ஒரு சுழற்சி வட்டத்திற்குள் முடிந்து விடுவதனை காணலாம். வாழ்க்கை ஒரு வட்டம் என குறிப்பிடுவது இதுதான் போலும்.

மண்ணில் எமக்குத்தெரியாக பல விடயங்கள் இன்னமும் பொதிந திருக்கின்றன. அடிமுடி தேடிய பிரமா விஷ்ணுவாலேயே மண்ணின் மகிமையை கண்டறிய முடியாத போது நாங்கள் எம்மாத்திரம். மண்ணின் வளத்திற்கு அதிலிருக்கும் ஊட்டச்சத்துக்கள் மாத்திரம் காரணமல்ல. மண்ணிலுள்ள உயிரினங்கள் நுண்ணங்கிகள் அனைத்தையும் அகற்றி விட்டு தாவரத்தை வளர்த்துப்பாருங்கள். அவை வளர மாட்டா. இதற்குக்காரணம் மண்ணில் இருக்கும் உயிரினாங்களும் குறிப்பாக நுண்ணங்கிகளும் ஆகும். நுண்ணங்கிகளினால் மண் வளப்படுத்தப்படுகின்றது. மண்ணில் வாழும் நன்மைதரும் உயிரினங்கள் மற்றும் நுண்ணங்கிகள் மண்ணை வளமாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை தாவரங்களின் வேர்த் தொகுதியில் பெருகி தாவரம் இல குவில் அகத்துறிஞ்சக் கூடியதாக மண்ணிலுள்ள பெரிய ஊட்டச்சத்து கூறுகளை சிறியதும் அகத்துறிஞ்சக்கூடியதுமாக மாற்றியமைக்கின்றன. இந்த பணியை வேறெதுவுமே மண்ணில் செய்ய முடியாது. இவ்வாறான நுண்ணங்கிகளை கவர்ந்திழுக்க தாவரத்தின் வேரானது ஒருவகையான ஊட்டச்சத்துள்ள வேர்ச்சுரப்பினை செய்கின்றது. இந்த சுரப்பில் கவர்ந்திழுக்கப்பட்ட நுண்ணங்கிகள் இனம் பெருக்கி வேர்த்தொகுதிக்கு மேலதிக உரமாக பாதுகாப்பரணாக வேர்த்தொகுதியை நோயாக்கிகளிடமிருந்தும் வேறு அங்கிகளிடமிருந்தும் பாதுகாக்கின்றன. இந்த சிறப்பான செயற்பாடு முழு மை பெற்றால் பயிரொன்றில் எந்த விதமான பிரச்சினையும் பொதுவாக ஏற்படாது. வேரில் நடக்கின்ற விடயங்களை நாம் இலகுவாக முழுமையாக கண்டறிய முடியவில்லை. ஆகும் ஆகாது என்பதெல் லாம் கண்களுக்கு காட்சியாக வரும் போது அவற்றினை நாம் முடிவு செய்வது இலகுவாக இருக்கும். மண்ணில் பெரிய அங்கிகளாக மண்புழுவினை உதாரணத்திற்கு கூறலாம். அதனது பயன்பாடு நாம் அறிந்தததை விட அதிகமாகும். ஏனெனில் மண்ணில் நடப்பவை பற்றி நாம் கண்ணால் இலகுவில் கண்டறிய முடியாது. மண் என்பது பலவகை உயிரினங்களின் வாழ்விடமாகும்.

அதற கும் மேலாக அதில் பலவிதமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்திருக்கின்றன. அவற்றில் பல வகைகள் உள்ளன. மண்ணின் தன்மைக்கேற்ப அவற்றின் வகைகள் நிர்ணயஞ்செய்யப்பட்டுள்ளன. களிமண்ணாக, லற்றசோல், றெகசோல், செம்மண்ணாக, இன்னும் மணல் மண்ணாக, பலதரப்பட்ட மண்ணாக, அவை வேறுபடுகின்றன.

ஒவ்வொரு மண்ணுக்கும் வேறுபட்ட தன்மைகள் உண்டு. அவற்றின் தன்மைக்கேற்ப நாம் விவசாயத்தை செய்ய வேண்டுமென கடந்த கட்டுரையில் துல்லியமான விவசாயத்தில் தெரிவித்திருந்தேன்.

அளந்தறிந்து இடு என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கின்றது. மண்ணின் தன்மைக்கேற்ப அதிலுள்ள ஊட்டச்சத்தின் அளவுக்கேற்ப பசளையிடு என்பது தானே அது. ஆனால் நாம் செய்கின்ற அனைத்தும் எதையும் பொருட்படுத்தாததாக அளவுக்கதிகமாக இட்டு இப்போது பிரச்சினையில் மாட்டியிருக்கின்றோம். மண்ணை மாசுப லிலிருந்து எப்படி மீட்டெடுப்பது. அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயமிது.

மண்ணில் இடப்படும் பொருட்களுக்கு மேலாக மண்ணிலிருந்து ஆவியாகி முகிலாகி பின் மழையாகி வரும் நீருக்கு தெரியும் மண்ணில் என்னவெல்லாம் நடைபெறுகின்றது என்பது பற்றி. ஆனாலும் அந்த நீர் அளவுக்கதிகமாக வெள்ளமாகவும் அளவு குறைந்து பல செயற்பாடுகளுக்கு பயன்படும் நீராகவும் பயன்படுதத்தப்படுகின்றது.

இந்த நீர் மண்ணுக்கு மிக அவசியமானதாம். அனைத்தையும் கொண்ட மண்ணிற்கு நாம் செய்யக்கூடிய பிரதிபலன் அதனது வளத்தை பேணிப் பாதுகாப்பதாகும்.

அதுவும் எமது எதிர்கால சந்ததி வளமாக வாழ நாம் வழிசெய்து கொடுக்க வேண்டும். வாழ்ந்து வரலாறான சந்ததியின் நினைவாக நாம் இதனை முழுமையாக நிறைவேற்றுவோம்.

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 68

# மாவீரர் தின நிகழ்வு..

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு....



கிளிநொச்சியில்....

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி....



மட்டக்களப்பில்....

முல்லைத்தீவில்....



வவுனியாவில்....




தீவகத்தில்....



முல்லைத்தீவில்....








## செந்தூரனின்....

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு கடிதம் எழுதி வைத்த பின்னர், ரயில் முன் பாய்ந்து உயிரிழந்த மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனின் உடல், கந்தன்காடு இந்து மயானத்தில் நேற்று தீயுடன் சங்கமமானது.

இந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடமாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நேற்று விடுமுறை வழங்கப்பட்டது. மாணவனின் இறுதிக் கிரியைகள் கோப்பாய் வடக்கிலுள்ள அவரது வீட்டில் நடைபெற்று, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களால் உடல் மயானத்துக்கு எடுத்துவரப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற இறுதி நிகழ்வில், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலையைக் கொடு ஒளியூட்டு ஒரு அரசியல் கைதியேனும் சிறைகளில் இருக்கக் கூடாது அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் எழுதி வைத்துவிட்டு மாணவன் செந்தூரன் ரயில் முன்பாகப் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான். கோண்டாவில் புகையிரத நிலையத்துக்கு அண்மையாக நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4,11)

## மட்டக்களப்பில்...

நேத்திரன், பொன்.செல்வராசா, கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், மாகாண சபை உறுப்பினர் மா.நடராசா உட்பட்டோர் கலந்து கொண்டு தீபங்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

மண்ணில் தமிழன் உள்ளவரை மர்வீரர் நினைவு மறையாது கண்ணில் காணா தெயவங்களை கார்த்திகை 27இல் வழிபடுவோம் என்னும் தொனிப்பொருளில் நடைபெற்றது.

இதன்போது மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ரயில்முன் பாய்ந்து உயிரை தியாகம் செய்த மாணவன் இ.செந்தூரனுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ-11)

## மாணவனின் கடிதத்தில் சந்தேகம் எதுவுமில்லை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் மா்ணவன் செந்தூரனின் கடிதம் தொடர்பில் எந்தவித சந்தேகமும் கிடையாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

செந்தூரன் தற்கொலை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் ஊடாக இந்த விடயம் உறுதி செய்யப்பட்டதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸ் முன்னெடுத்து வருகின்ற நிலையில், இந்த விடயம் உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, செந்தூரனின் தற்கொலையின் போது அவருடன் எவரும் இருக்கவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

செந்தூரன் உயிரிழக்கும் சந்தர்ப்பத்தில் அவருடன் ஒருவர் இருந்துள்ளதாக வெளியான தகவல்களின் எவ்வித உண்மைத் தன்மையும் கிடையாது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த சம்பவத்தை மையப்படுத்தி சிலர் அரசியல் இலாபத்தை தேடிக் கொள்ள முயற்சிக்கின்ற நிலையிலேயே இவ்வாறான பிரசாரங்களை மேற்கொள்வதாகவும் அவர் கூறினார்.

எவ்வாராயினும் இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (எ-12)

## பாராளுமன்றத்தில் சிறிதரன் மாவீரர்களுக்கு புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின்போது உயிரிழந்த உறவுகளுக்கும் மாவீரர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் புகழாரம் சூடினார்.

நாடாளுமன்றில் வரவு செலவு திட்டத்தில், நேற்று ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர், உயிர் நீத்த உறவுகளுக்கு தன்னுடைய அனுதாபத்திற்குரிய உரையை நிகழ்த்தினார்.

தன்னுடைய உரையில், உயிர் நீத்த மாவீரர்கள் தன்னுடைய இளமைக் காலத்தையும் இன்ப துன்பங்களையும் தமிழ் மக்களுக்காக தியாகம் செய்ததனால் தமிழ் மக்கள் அனைவரும் இந்த வீரர்களை சிரம் தாழ்த்தி நினைவு கூர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். (எ-12)

## முதலீட்டு அறிவு நிகழ்வுகள்

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை தனது 30ஆவது அகவையினை டிசம்பர் முதலாம் திகதி தனது காரியாலயங்களில் வெகு விமர்சையாக கொண்டாடவுள்ளது.

அன்றைய தினத்தினை முதலீட்டாளர்களுக்காக “முதலீட்டுஅறிவு” நாளாக பிரகடனப்படுத்தி யாழ்-கிளைக்காரியாலயத்தில் பலமுதலீட்டு அறிவுசார் நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

குறித்த தினத்தில் பங்குச்சந்தை மற்றும் யுனிற் முதலீடுகள் தொடர்பாக இலவசக் கருத்தரங்கு மற்றும் ஆலோசனைகள், ஆலோசனைக் குறிப்புகளின் கண்காட்சி மற்றும் வரவுசெலவுத்திட்டம் தொடர்பான ஆய்வுக் குறிப்புகள் மற்றும் இணையத்தள வியாபாரம் தொடர்பான பயிற்சிகள் போன்றவை யாழ்.கிளையில் நடைபெறவுள்ளன. (எ-12)

## பிரதமரின் பாரியார் மோல்டா விஜயம்

(கொழும்பு)

பிரதமரின் பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க மோல்டாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

மோல்டாவில் நடைபெற்று வரும் பொதுநலவாய நாடுகள் அமர்வுகளில் பங்கேற்பதற்காக அவர் இவ்வாறு விஜயம் செய்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டுக்கு சமாந்திரமாக, பொதுநலவாய நாடுகள் மகளிர் மாநாடொன்று நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையை மைத்திரி விக்கிரமசிங்க பிரதிநிதித்துவம் செய்ய உள்ளார்.

மைத்திரி விக்கிரமசிங்க நேற்று மோல்டாவிற்கு விஜயம் செய்திருந்தார். (எ-12)

# யாழ்.பல்கலை...

உள்ளே திடீரென சுடர் எரியத் தொடங்க வெளியே நின்ற புலனாய்வாளர்கள் திகைப்படைந்து உடனடியாக பல்கலைக்கழகத்தை சூழ தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். முன்னதாக முற்பகல் பதினொரு மணியளவில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து ஆலய மணியோசை சரியாக பன்னிரண்டு மணியளவில் ஒலிக்க விடப்பட்டு அனைத்து மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஒன்றிணைந்து அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

கடந்த முப்பது வருட கால ஆயுத போராட்டத்தில் துப்பாக்கி ஏந்தி போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த போராளிகள் போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக மாவீரர் வாரம் ஒன்றினை பிரகடனப்படுத்தி வருடம் தோறும் நினைவு கூர்ந்து வருவது வழக்கம்.

இவ் வாரத்தின் இறுதி நாளை மாவீரர் தினமாக அறிவித்து மிகவும் எழுச்சியான முறையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அனுஷ்டித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாவீரர் தினமான ஒவ்வொரு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகாரனின் உரையும் இடம்பெறுவது வழமை.

இந்த முறையினை பின்பற்றியே நேற்று மாலை மாணவர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர். (எ-4)

# தமிழர் தாயக...

கடந்த முப்பது வருட கால ஆயுத போராட்டத்தில் துப்பாக்கி ஏந்தி போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த போராளிகள் போரில் உயிரிழந்தவர்கள் நினைவாக மாவீரர் வாரம் ஒன்றினை பிரகடனப்படுத்தி வருடம் தோறும் நினைவு கூர்ந்து வருவது வழக்கம்.

இவ் வாரத்தின் இறுதி நாளை மாவீரர் தினமாக அறிவித்து மிகவும் எழுச்சியான முறையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அனுஷ்டித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாவீரர் தினமான ஒவ்வொரு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உரையும் இடம்பெறுவது வழமை.

முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்பு, இத்தினத்தை உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அனுஷ்டித்து வருகின்றனர். இதே போல் நேற்றைய தினமும் உலகெங்கும் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

தாயகத்தில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ள போதிலும், ஆங்காங்கே பிரத்தியேக இடங்களில் தமிழின மறவர்களை அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர்கள் நினைவு கூருவது வழமை. இதே போல் நேற்றைய தினம் மதியம் பல்கலையில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்று இருந்தன.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பளை இத்தாவில் கிராமத்தில் மாவீரர் குடும்பங்களுக்கு மரங்கள் வழங்கி வைக்கப்பட்டதோடு, மாவீரர்கள் நினைவாக மரங்களும் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன், அரியரட்ணம், பசுபதிப்பிள்ளை, ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதே போல் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர முருகன் ஆலயத்தில் ஈகைச்சுடரும் ஏற்றப்பட்டது. யாழ்.பல்கலையில் இடம்பெற்ற நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியரும் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினருமான சி.க சிற்றம்பலம உள்ளிட்ட ஆசிரியர் சங்க, மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

### த.தே.கூ அலுவலகத்தில்

யாழ்ப்பாணம் மாட்டீன் வீதியிலுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் மாவீரர்தினம் நேற்று மாலை பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

சரியாக மாலை 6.05 மணியளவில் பிரதான ஈகைச்சுடரினை பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான சுகிர்தன், பரஞ்சோதி மற்றும் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களும் விளக்கேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

### த.தே.ம.மு அலுவலகத்தில்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாவீரர் தின நிகழ்வு நேற்று மாலை அக்கட்சியின் தலைவரது இல்லத்தில் இடம் பெற்றது

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த மாவீரர் தின நிகழ்வில கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதுடன் மாவீரர்களுக்கு மலரஞ்சலியுடன் மௌன வணக்கமும் செலுத்தப்பட்டது.

### அரசியல்வாதிகள்

இதேவேளை மாவீரர் நாளான நேற்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தினி ஸ்ரீஸ்கந்தராசா தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து தமிழின விடிவிற்காக வீரகாவியமான மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சியில் மாவீரர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. பிற்பகல் கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலில் கற்பூரம் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டதுடன், அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, முன்னாள பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிலசில இடங்களில் வீதிகளில் மறைவாக தீபங்கள் ஏற்றப்பட்டிருந்ததாக கூறப்பட்டது.

### தீவகத்தில்

தீவகத்தில் பிரத்தியேகமான ஒருஇடத்தில மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

ஈகைச்சுடரேற்றியும் மௌன வணக்கம் செலுத்தியும் உணர்வுபூர்வமாக மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

### வவுனியாவில்

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் மரணித்த வீரர்கள் மற்றும் பொது மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று மாலை 6.05க்கு பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்றது. ஆலய முன்றலில் ஒன்று கூடிய மக்கள் 6.03க்கு ஆலய மணியை ஒலித்ததுடன் அதனைத் தொடர்ந்து ஈகைச் சுடரேற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

சோக கீதத்தின் மத்தியில் நவம்பர் 27 என பொறிக்கப்பட்ட சுடர் ஏற்றி இறந்த வீரமறவர்கள், பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.பி.நடராஜா, ம.தியாகாராசா, பிரஜைகள் குழுத் தலைவர் தேவராசா, பிரஜைகள் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### முல்லைத்தீவில்

அத்துடன் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று மாலை மாவீரர்களுக்கான அகவணக்கம் செலுத்தியுள்ளார்.

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வுக்காய் தமமுயிரை ஈந்த மறவர்களை நினைவு கூரும் நாள் இன்று (நேற்று) காலத்தால் அழியாத அந்தக்காவிய நாயகர்களை பூசித்து எம் நியாயமான உணர்வுகளை உலகின் முன் வெளிப்படுத்துவோம் என்று ரவிகரன் தெரிவித்துள்ளார்.

### முல்லைத்தீவு கடலில்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் மரணித்த மாவீரர்களை நினைவு கூர்ந்து நேற்று மாலை 6.05 மணியளவில் முல்லைத்தீவு கடற்கரையில் இளைஞர் குழு தீபம் ஏற்றி நினைவுகூர்ந்துள்ளன.

பலத்த இராணுவ கெடுபிடிகளுக்கும் மத்தியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி செயலாளர் அன்ரனி ஜெகநாதன், செழியன் தலைமையில் ஒன்று சேர்ந்த இளைஞர்கள் குழு மாவீரர் தினமான நேற்று நேரம் மாலை 6.05 மணியளவில் மாவீரர்களை நினைந்து தீபத்தினை ஏற்றி அகவணக்கம் செலுத்தியுள்ளது.

மேலும் தீச்சுடரை கடல் அலைகளினூடாக கடலில் சங்கமிக்க வைத்து ஆகுதியாகிப் போன மாவீரர்களை நேற்றைய நாளில் நினைவு கூர்ந்துள்ளனர்.

மேற்படி அணி செயலாளர் செழியன் என்பவர் வடமாகாணா சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனின் புத்திரனும் தாய்நிலத்துக்காக தம்முயிரை அர்ப்பணித்த மாவீரனின் ஒரு சகோதரனும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4-11-12-250)

# வாஸ் கொலை...

மா அதிபர் வாஸ் குணவர்த்தன உட்பட்ட 06 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதி மன்றம் தீர்ப்பளித்த பின்னர் நீதிமன்றிற்கு வெளியே கருத்து தெரிவிக்கையிலேயே கொலை செய்யப்பட்டவரின் தந்தை இதனை குறிப்பிட்டுள்ளார்.

எனது மகனை கிரிசாந்தவும், பௌசுடீனுமே கொலை செய்தனர். வாஸ் குணவர்த்தன குறித்து எனக்கு எந்த சந்தேகமும் இல்லை வாஸ் குணவர்த்தன தனக்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்ய தீர்மானித்தால் நான் அவரிற்கு ஆதரவாக சாட்சியமளிக்க தயார்.

வாஸ்குணவர்த்தன மேல்முறையீடு செய்தால் நான் சாட்சியமளிப்பேன், ஆதாரங்களை முன்வைப்பேன், அவர் எனது மகனிற்கு எதனையும் செய்யவில்லை என கொலை செய்யப்பட்ட வர்த்தகரின் தந்தை தெரிவித்துள்ளார். (எ-12)

# டிசம்பர் 5-ம்...

கல்வி பணிப்பாளர் எஸ். உதயகுமார் தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவன் இராஜேஸவரன் செந்தூரன், அரசியல் கைதிகளின் விடுதலையினை வலியுறுத்தி நேற்று முன்தினம் கோண்டாவில் பிரதேசத்தில் தொடருந்து முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

குறித்த மாணவனின் சடுதியான மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக வடமாகாண பாடசாலைகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், வடமாகாண பாடசாலைகளில் நேற்று நடைபெறவிருந்த பரீட்சைகள் அடுத்த மாதம் முதலாம் திகதி செவ்வாய் கிழமை இடம்பெறும் என வடமாகாண கல்வி பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார். (எ-12)

# வாஸ்...

நீதிமன்ற நீதிபதிகளின் இணக்கத்துடன நீதிபதிகள் குழுவின் தலைவரான நீதிபதி லலித் ஜயசூரிய 802 பக்கங்களை கொண்ட வழக்கின் தீர்ப்பை அறிவித்தார். (எ-11)

# மாவீரர்...

ப்பட்டுள்ளது.

இணையத்தளங்களில் இவ் அறிக்கையும் அதனுடன் அவ் அறிக்கையின் ஒலி வடிவமும் வெளியிடப்பட்டுள்ளன.

மாவீரர் தின அறிக்கைவிடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் மாவீரர் தினமான டிசம்பர் 27-ம் திகதி வெளியிட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.(எ-1)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF. INTERNATIONAL CERTIFICATES. FRENCH TRANSLATIONS.
www.ambafrance-lk.org வெளிநாடொன்றில் இருக்கும்போது சரளமாக பிரெஞ் பேசமுடியும். மாணவர்களுக்கு கட்டணம் அரைவாசி குறைவு.

(2601)
ஆரம்பம் 28.11.2015,12.12.2015 உடன் பதிவை உறுதிப்படுத்துக
021 222 8093 61,கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

புதிய ஆயரை வாழ்த்துகின்றோம்
வண ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்

யாழ்.மேற்றிராசன 8 ஆவது ஆயராக திருப்பொழிவு பெற்றுள்ள ஆயர் "வண ஜஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம்" அவர்களை வாழ்த்துவதில் எம் சமூகமும் மகிழ்வடைகின்றது. ஆயர் அவர்கள் அயல் பாடசாலை அதிபராக எமது பிரதேச கொத்தணி அதிபராக தனது தியாகம் நிறைந்த சேவையால் கடந்த காலங்களில் சிறப்பான பணியாற்றியமை இன்னும் பசுமையான நினைவு-களாக இருக்கும். இவ்வேளை ஆயர் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.
இங்ஙனம்
பாடசாலை சமூகம்,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.
(2582)

சாரதி தேவை
கொக்குவிலில் இயங்கும் பேக்கரி ஒன்றுக்கு நடமாடும் பாண் வாகனம் ஓடுவதற்கு அனுபவமுள்ள சாரதிகள் தேவை
(30 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது)
தொடர்பு:- 0776747277
(2604)

2015 O/L பரீட்சையில்
தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான
வழிகாட்டல் பயிற்சிச் செயலமர்வு
பாடம்
தமிழ்மொழியும் இலக்கியமும்
22 T I II III பகுதிகளுக்கான முழுமையான மீட்டல்
நடைபெறவிருக்கும் இடங்கள்
அகரம் கல்வி நிலையம்
மல்லாகம் (காங்கேயன் வெதுப்பகம் முன்பதாக)
29/11/2015 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 முதல் மாலை 3.00 மணிவரை
(மதிய உணவை எடுத்துவர வேண்டும்)
றோயல் அக்கடமி யாழ்ப்பாணம்
30/11/2015 மாலை 2.30 முதல் 5.30 வரையும்
01/12/2015 மாலை 2.30 முதல் 5.30 வரையும்
நடைபெறும்.
பயிற்சிக் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும்.
"வழிகாட்டல் இல்லாத எதுவும் வழிப்படுவது கடினம்"
வள்வாளர்
திரு.இல. நிஷாந்தன்
ஆசிரியர்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
கட்டணம் ரூபாய் 300 மட்டுமே.
(2597)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. (BOOK 10)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, 2015 புதிய நடைமுறை-க்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
உடனுக்கு உடன் பரீட்சைகள், பதிவுகள்
(சான்றிதல் 7 நாட்களில்) 0777 17 35 17
British Council'S
IELTS Registration Centre
Spoken English
(Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.